# தமிழரசு

16-2-1982 75 காசு.

திருவள்ளுவர் ஆண்டு 2013

துன்மதி—மாசி-4






# அரசின் புதிய திட்டங்களால் மாநிலம் வளர்ச்சி அடையும்! மக்கள் நிலை மேம்படும்!

மேதகு ஆளுநர்
திரு சாதிக் அலி

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே,

1982ஆம் ஆண்டின் முதல் கூட்டு அவைக்கு உங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

நான் சென்றமுறை சட்டமன்றக் கூட்டு அவையில் உங்கள் முன் உரையாற்றியபோது, வரலாற்றுச் சிறப்பு மிக்க வகையில் உலகத் தமிழ் மாநாடு, மதுரையில் வெற்றிகரமாக நடந்து நிறைவு பெற்றிருந்த பெருமிதத்தில் நாம் அனைவரும் திளைத்திருந்ததை நினைவு கூர்வீர்கள். தணியாத நம் தமிழ் ஆர்வத்திற்கும், மாறாத நம் மொழிப் பற்றிற்கும் சான்றாகத் திகழ்ந்தது அம் மாநாடு. நம் மொழிப் பற்று கனிந்து நாட்டுப் பற்றோடு இரண்டறக் கலப்பதை நிலைநிறுத்தும் வகையில், இந்த ஆண்டு, நாம் தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியின் நூற்றாண்டு நிறைவு விழாவை ஆண்டு முழுவதும் ஆர்வமூட்டும் வகையில் கொண்டாடத் திட்டமிட்டுள்ளோம். சுதந்திரம், சமத்துவம், உடன் பிறப்புணர்வு ஆகியவற்றை அடிநாதமாகக் கொண்டு பாரதியார் நமக்குப் படைத்துத் தந்த பாடல்கள், சாதி, சமய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட புதியதொரு சமுதாயத்தைப் படைக்கும் வீறார்ந்த உறுதியை நமக்கு ஊட்டுகின்றன. பாரதியார் நூற்றாண்டை நாட்டின் ஒருமைப்பாட்டின் ஆண்டாகக் கொண்டாடத் தமிழக அரசு முடிவு செய்து, ஆக்கபூர்வமான இந்த ஆலோசனையை மத்திய அரசின் முன்னும் வைத்துள்ளது. நம் மாநிலத்தில் ஊராட்சி ஒன்றிய மட்டத்திலிருந்து, தலைநகர் வரையிலும், நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும், கடல் கடந்து அயல் நாடுகளிலும்; பாரதிக்கு விழா எடுத்து, அவர் கண்ட பாரதத்துக்கு அஞ்சலி செலுத்தும் பணியின் முன்னணியில் தமிழ்நாடு நிற்பது நம் அனைவருக்கும் மன நிறைவு அளிப்பதாகும்.

பருவ மழை பொய்த்ததன் காரணமாக, புதுக்கோட்டை, வடார்க்காடு மாவட்டங்களின் சில பகுதிகளில் வறட்சி நிலை இருந்து வந்ததை எனது சென்ற ஆண்டு உரையில் குறிப்பிட்டேன். ஆனால், தமிழ் நாட்டில் மொத்தமுள்ள 16 மாவட்டங்களில் 13 மாவட்டங்களிலே வறட்சி நிலை அந்த ஆண்டில் நாளடைவில் பரவியது. குடி தண்ணீர் தட்டுப்பாடும் பயிர் விளைச்சல் குறைந்துபோனதும் இம்மாநில நகாப் பகுதிகளையும் கிராமப் பகுதிகளையும் பெரிதும் பாதித்தன. வறட்சிப் பாதிப்புப் பகுதிகளில் மக்களின் துயரத்தைப் போக்கத் துயர் தணிப்பு-மறுவாழ்வுத் திட்டத்தைப் பெரிய அளவில் அரசு மேற்கொண்டது. இம்மாநிலத்தின் சில மாவட்டங்களைச் சுற்றிப் பார்த்த மத்திய அரசின் குழு, தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவி வந்த மிகச் சிரமமான நிலைமைகளை நன்குணர்ந்து பரிந்துரை செய்ததன் பேரில், வறட்சித் துயர் தணிப்பிற்காக 48.90 கோடி ரூபாய் செலவிடுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. வறட்சித் துயர் தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள 1981 டிசம்பர் இறுதி வரை இம்மாநில அரசு 55·24 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது. வறட்சித் துயர் தணிப்புப் பணிகளை மேற்பார்வையிட ஆங்காங்கு அனைத்து அரசியல் கட்சிகளையும் சார்ந்த தலைவர்கள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டு, அக்குழுக்கள் துயர் தணிப்புப் பணிகள் செம்மையாக நடக்கப் பெரிதும் உதவின, அரசின் பல்வேறு துறைகள் மூலம் பல இடங்களிலும் ஏராளமான ஆழ்துளைக் கிணறுகளை உருவாக்கியது, வறட்சிப் பாதிப்பு மாவட்டங்களில் குடிதண்ணீர் எளிதில் கிடைப்பதை உறுதிப்படுத்தியது. இம்மாநிலத்தில் இருந்த வறட்சி நிலையை இவ்வரசு நல்ல முறையில் சமாளித்தது பற்றி இவ்வரசு பெருமை கொள்ள முடியும். வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாகத் துயர் தணிப்பு அளித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட பணிகள், குடிநீர் ஆதாரங்கள், சாலைகள் மேம்பாடு, பாசன ஏரி, குளங்கள் முதலிய நிலையான சொத்துக்களையும் ஏற்படுத்தின.

1981ஆம் ஆண்டில் பெரும்பாலான பகுதியில் வறட்சி நிலை நீடித்ததென்றாலும் திறமையான பொதுப் பங்கீட்டு ஏற்பாடு மூலம், உணவு தானியங்கள் போதிய அளவில் கிடைப்பதை மாநில அரசு உறுதி செய்தது. இந்திய உணவுக் கழகத்தின் மூலம் இன்னும் அதிக அளவில் உணவு தானியங்களை ஒதுக்கிக் கொடுக்குமாறு மத்திய அரசை இம்மாநில அரசு தொடர்ந்து வேண்டிக் கொண்டு வந்திருக்கிறது. ஒதுக்கீடு செய்யப்பட்ட அரிசியின் அளவுகூட நமக்கு

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2013
துன்மதி—மாசி-4

மலர் : 12 இதழ் : 16
16-2-1982

முழுவதும் வந்து சேர்வதில் நடைமுறையில் பல சிக்கல்கள் ஏற்பட்டன. பொதுப் பங்கீட்டு ஏற்பாட்டின் மூலம் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக திங்கள் ஒன்றுக்கு 10,800 டன் கோதுமையை ஒதுக்குமாறு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டு வருகிறது. எனினும், மத்திய அரசு 4,000 டன் கோதுமையை மட்டும் ஒதுக்கிவருகிறது. மேலும், கோதுமைப் பொருட்களைத் தயாரிப்பதற்காக மாநிலத்தில் உள்ள உருளை மாவு ஆலைகளுக்கு ஒதுக்கும் கோதுமையின் அளவையும் மத்திய அரசு 65,000 டன்னிலிருந்து 30,000 டன்னாகக் குறைத்தது.

பொதுப் பங்கீட்டு ஏற்பாடு மூலம் சனவரித் திங்களில் 25,000 டன் அரிசி மட்டுமே பொதுமக்கள் வாங்கியிருக்க, அதன் பின் இந்த அளவு, திங்கள் ஒன்றுக்கு 79,000 டன்னாக உயர்ந்தது. பொதுமக்களின் இத்தேவையை ஈடுசெய்ய இம்மாநிலத்தில் உணவு தானியங்களைக் கொள்முதல் செய்வதுடன் மட்டுமின்றி, வெளி மாநிலங்களிலும் உணவு தானியங்களைப் பொதுச் சந்தையின் மூலமும் விலைக்கு வாங்க இவ்வரசு நடவடிக்கை மேற்கொண்டது. உணவு தானியங்களை விலைக்கு வாங்குவதில் கூட்டுறவுச் சங்கங்களின் பணியும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. இவ்வாறு பற்பல நடவடிக்கைகளை ஒருமித்து எடுத்ததன் மூலம், வறட்சிக் காலத்தில் உணவு முறையில் இருந்த இடர்ப்பாடுகளை நீக்க இயன்றது.

இம்மாநிலத்தில் வளர்ச்சிப் பணிகள் விரைந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. நடப்பாண்டுக்கு ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்டம் 514 கோடி ரூபாய் அளவினதாக இருந்த போதிலும், வறட்சித் துயர் துணிப்புப் பணிகள் நீங்கலாக 600 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்படும் நிலை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த நிதி ஆண்டுக்கு 711 கோடி ரூபாய் அளவிலான பெருந் திட்டத்தை இவ்வரசு தீட்டியுள்ளது. நடப்பாண்டுத் திட்டத்தை இம்மாநில அரசு போற்றிப் பாராட்டும் வகையில் நிறைவேற்றியுள்ள காரணத்தால், அடுத்த ஆண்டுக்கு என இம்மாநில அரசு தீட்டியுள்ள திட்டத்தைக் கிட்டத்தட்ட அது கேட்ட அளவுக்கு மத்திய திட்டக் குழு ஒப்புக்கொண்டுள்ளது.

இம்மாநில அரசு, வேளாண்மைக்குத் தொடர்ந்து உரிய சிறப்பிடத்தை அளித்து வருகிறது. வேளாண்மை உற்பத்திப் பெருக்கம் விரைந்தும் தொடர்ந்தும் இருக்கச் செய்யும் பொருட்டு, இம்மாநிலத்தில் எட்டு மாவட்டங்களில் "பயிற்சி-பார்வையிடல் திட்டம்" 1981 செப்டம்பர் திங்கள் முதல் நாளிலிருந்து செயலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள மாவட்டங்களில் இத்திட்டம் 1982 சூலைத் திங்கள் முதல் நாளிலிருந்து செயலுக்கு வரும். இத்திட்டம் சுமார் 36 கோடி ரூபாய் செலவில் உலக வங்கி உதவியுடன் ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் செயலாற்றும் வேளாண்மை விரிவாக்கப் பணியாளருக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். சிறப்புப் பயிற்சி பெற்ற இப்பணியாளர், பண்ணை நடைமுறைகள் குறித்த புதிய, முறைப்படியான ஆலோசனைகளை உழவர்களுக்கு அளிப்பர். வேளாண்மை விளைபொருள் விற்பனைக்கு வசதிகள் செய்து கொடுக்கும்பொருட்டு, கிராமக் கிடங்குகள் அதிக எண்ணிக்கையில் கட்டப்படுவதுடன், ஒழுங்குமுறை அங்காடிகளும் ஒருங்கிணைந்த வகையில் மேம்படுத்தப்படும். உலக வங்கியின் உதவியுடன் 102 கோடி ரூபாய் செலவில் வேளாண்மைப் பொருள் விற்பனையை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் திட்டம் ஒன்றை இவ்வரசு மேற்கொள்ளக் கருதியுள்ளது. உணவுப் பொருள் சேமிப்புக் கிடங்குகள் உட்பட, இப்போதுள்ள ஒழுங்குமுறை அங்காடிகளின் தரத்தை உயர்த்துவது, விரைவில் அழுகும் பொருள்களுக்கு அங்காடிகள் ஏற்படுத்துவது, ஒழுங்குமுறை அங்காடிகளைப் புதிதாகத் தொடங்குவது, கிடங்கு வசதி, பதப்படுத்தும் வசதி அளிப்பது ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். திட்ட அறிக்கை இப்போது மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை விளைபொருள் விற்பனைக் குழுக்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக, தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தைத் திருத்தி, மாநில வேளாண்மைப் பொருள் விற்பனை வாரியத்தைச் சட்ட முறைமையானதாக அமைப்பதென மாநில அரசு முடிவு செய்துள்ளது. பால் பண்ணை வளர்ச்சி, கோழி வளர்ப்பு, ஏனைய கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஊக்கமும் ஆக்கமும் அளிக்கப்பட்டுள்ளன. சமையல் எண்ணெய் உற்பத்தியைப் பெருக்கி, விலைகளை நிலைப்படுத்த, தமிழ்நாடு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம், தேசிய பால் பண்ணை வளர்ச்சி வாரியத்தின் நிதி உதவியுடன் இந்த நிதி ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது. பாசனம் பெறும் எண்ணெய் வித்துப் பயிர்கள் விளைவிக்கப்படும் பரப்பளவைப் பெருக்குவதன் மூலம் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. சமையல் எண்ணெய் உற்பத்தியை மேலும் உயர்த்தும் பொருட்டு, சிறந்த வகைத் தென்னங்கன்றுகளைப் பெரும் அளவில் உற்பத்தி செய்வதும் வழங்குவதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஏழை எளிய மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கும்போது ஒவ்வொருவருக்கும் ஒரு தென்னங்கன்றை இலவசமாக வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

உழவர்களின் கடன் சுமையைக் குறைப்பதற்காக நடப்பு நிதி ஆண்டிலும் தொடர்ந்து அரசு முயற்சிகளை மேற்கொண்டது. குறுகிய காலக் கடன் வாங்கியுள்ள சிறு உழவர்கள் அக் கடன் முழுவதையும் 30-6-1981 தேதிக்குள் திருப்பிச் செலுத்திவிட்டால், அவர்கள் அக்கடனுக்குச் செலுத்த வேண்டிய சாதாரண வட்டியையும் அபராத வட்டியையும் செலுத்த வேண்டாமெனத் தள்ளிவிடுவது என்று அரசு முடிவு செய்தது. குறுகிய காலக் கடனுக்குரிய சாதாரண வட்டியையும் அபராத வட்டியையும் 1-4-1980-க்குப் பின்னர் செலுத்தியிருந்தால் அவற்றைத் திருப்பிக் கொடுத்துவிடவும் அரசு ஒப்புக்கொண்டது. பிற உழவர்களுக்கு வழங்கப்பட்ட குறுகிய காலக்






கடனுக்குரிய அபராத வட்டி, அந்த உழவர்கள் கடன் தொகை முழுவதையும் சாதாரண வட்டியுடன் 30–6–1981-க்குள் திருப்பிச் செலுத்திவிட்டால், தள்ளுபடி செய்யப்படும். இவ்வசதிகள் அனைத்தும் 30–6–1981 வரைதான் இருக்குமென விதி இருந்த போதிலும், உழவர்களுக்கு உதவும் பொருட்டு, இந் நாளை இவ்வரசு 31–12–1981 வரை நீட்டித்தது. இச் சலுகைகளினால், பல இலட்சக்கணக்கான உழவர்கள் பயன் பெற்றனர்.

கடந்த சில ஆண்டுகளாகவே, உழவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு, முற்போக்குக் கருத்துள்ள நிலச் சீர்திருத்தச் சட்டங்களை இவ்வரசு கொண்டு வந்துள்ளது. இக்கொள்கையின் அடிப்படையில், இம் மாநிலச் சட்ட மன்றம் நிறைவேற்றிய தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயித்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட வரைவு குடியரசுத் தலைவரின் இசைவு பெறுவ தற்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நில உச்சவரம்பு குறித்து முன்பு உத்தேசித்திருந்த சட்டத்தை ஏமாற்றும் பொருட்டு 1958ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1ஆம் நாளிலிருந்து 1960ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6ஆம் நாள் வரையில் செய்யப்பட்ட நில உரிமை மாற்றங்களை வெளிப்படுத்துவதே இச்சட்ட வரைவின் நோக்கமாகும். இச்சட்ட வரைவு சட்டமாகி விட்டால், உபரியாகக் கிடைக்கும் நிலங்களை நிலமற்ற உழவர்களுக்குப் பகிர்ந்தளிக்கலாமெனக் கருதப்பட்டது. ஆனால், நமது எண்ணத்திற்கு மாறாக, இச்சட்ட வரைவுக்குக் குடியரசுத் தலைவரின் இசைவு தரப்படவில்லை. அதற்கான காரணங்கள் மாநில அரசிற்கு இதுவரையில் அறிவிக்கப்படவில்லை. சட்ட வரைவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால், இந்த உபரி நிலங்களை நிலமற்ற உழவுத் தொழிலாளர் ஏராள மானவர்களுக்குப் பகிர்ந்தளித்து அவர்களுக்கு உதவி செய்யலாமென்ற இவ்வரசின் எண்ணம் ஈடேறவில்லை.

நிலப் பதிவேடுகளில் நில உரிமையாளர், குத்தகைதாரர் முதலிய விவரங்களை நாளது வரை எழுதிவைக்கும் திட்டம் 1979 சூன் 1ஆம் தேதியன்று தொடங்கியது. இத்திட்டத்தின்கீழ் 72,000 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள நிலம் குறித்த பெரும் பணி இன்னும் செய்து முடிக்கப்படாமல் உள்ளது. இந்தத் திட்டம் உழவர்களுக்குப் பயன் விளைவிக்கு மாதலால்–அவர்கள் தங்கள் உரிமைகளைச் சரியாக அறிந்து கொள்ளவும் நிதி உதவி நிறுவனங்களிடமிருந்து அவர்கள் எளிதில் கடன் பெறவும் உதவுமாதலால்–இத் திட்டத்தை இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் நிறை வேற்றி முடிப்பதற்கான விரைவுத் திட்டம் ஒன்றை மேற்கொள்வதென அரசு முடிவு செய்துள்ளது.

மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப் படும் இன்றியமையாப் பொருட்களின் விலைவாசிகள் உயர்ந்துவரும் போக்கினைக் கண்டு இந்த அரசு மிகுந்த கவலை கொண்டுள்ளது. விலைவாசிப் பிரச்னை நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளுடன் பின்னிப் பிணைந்து நிற்பதால், இக்கொள்கைகளை வகுக்கும் உரிமை பெற்றிருக்கும் மத்திய அரசே விலை வாசிப் பிரச்னைக்கு நிரந்தரமாக ஒரு தீர்வு காண முடியும் என்பது பொருளாதார வல்லுநர்கள் கண்ட முடிவு. அதே சமயத்தில், இப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் தனக்குரிய பங்கை ஏற்பதில் மாநில அரசும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. குறிப்பாக, விவசாயப் பெருமக்களுக்கு, சாகுபடிச் செலவுக்கு ஏற்ப, நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்பது இப்பிரச்னையின் ஒரு பகுதி. இன்றியமையாப் பொருட்கள் நயமான விலைக்குப் பொதுமக்களாகிய நுகர்வோருக்குக் கிடைக்க வேண்டும் என்பது இப் பிரச்னையின் மறு பகுதி. இவ்விரு சாரார் நலனையும் ஒருங்கிணைக்க வர்த்தகச் சூதாட்டங்களில் ஈடுபடும் இடைத் தரகர்களை அகற்றுவது அவசியமாகும். உற்பத்தியாளர்கள் கூட்டுறவு அமைப்பில் ஒன்று கூடி, விநியோகப் பொறுப்பையும் விற்பனைப் பொறுப்பையும் தாங்களே ஏற்றுக்கொண்டு, அதில் கிடைக்கும் இலாபத் தையும் தங்களிடையே பகிர்ந்துகொள்ளும் ஒரு முறை உருவானால்தான், உற்பத்தியாளர்களுக்கு நட்டம் இல்லாத நிலையும், நுகர்வோருக்கு இன்னல் ஏற்படாத நிலையும் உருவாகும். இதில் வெற்றி காணவேண்டுமென்றால், பெரும்பாலும் தனியார் கையிலுள்ள இந்த இன்றியமையாப் பொருட்களின் வர்த்தகம், கூட்டுறவு அமைப்பின் வசம் வரவேண்டும். இந்த நோக்கத்தோடு, 'உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை' அமைக்க, வரும் ஆண்டில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

கிராம மக்களுக்கு உதவும் தன்னிறைவுத் திட்டம் தற்போது கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. 1980–81-ல் முதல் கட்ட மாக 69 வளர்ச்சி வட்டாரங்களில் இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்திய பின்னர், நடப்பு நிதி ஆண்டில் 150 வளர்ச்சி வட்டாரங்களில் இத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்த 219 வளர்ச்சி வட்டாரங்களில் இந்த நிதி ஆண்டு முடிவிற்குள் 136 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலையான சொத்துக்கள் ஏற்படுத்தப்படும். இந்த 219 வளர்ச்சி வட்டாரங்களில் 18,000 கி.மீ. இணைப்புச் சாலைகள் அமைக்கப்படும்; ஆதி திராவிடர்களுக்காக 25,000 வீடுகள் கட்டி முடிக்கப்படும்; 2,717 பள்ளிக் கட்டி டங்கள் கட்டி முடிக்கப்படும். எஞ்சியுள்ள 159 வளர்ச்சி வட்டாரங்களில் தன்னிறைவுத் திட்டம் அடுத்த நிதி ஆண்டில் நிறைவேற்றி முடிக்கப்படும். இத் திட்டத்தினால் மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மையைக் கருத்தில் கொண்டு, பேரூராட்சிகளும் நகராட்சிகளும் தன்னிறைவு அடையும் வகையில் ஒரு திட்டத்தை வரும் ஆண்டுகளில் செயல்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான ஆயத்த நடவடிக்கைகளை இவ்வரசு மேற் கொண்டுள்ளது.

வேளாண்மை வளர்ச்சியில் மின் உற்பத்திப் பெருக்கத்திற்குப் பெரும் பங்கு உண்டு. சாதக மான பருவநிலை காரணமாக 1981 சூன் முதல் மின்விசை நிலைமை சீரடையத் தொடங்கி, 1981 சூன் 25ஆம் நாளில் மின்வெட்டு நீக்கப்பட்டது. குறைந்த மின் அழுத்தத் தொழில்கள் மீதான உச்சத் தேவைக் கட்டுப்பாடுகள், கிராமப்புற மின்சுமை மீதான கட்டுப்பாடுகள், வேளாண்மைக்கு மின் விசையைப் பயன் படுத்துபவர்கள் தொடர்பான தொகுதிக் கட்டுப் பாடுகள், இருபத்துநான்கு மணி நேரமும் தொடர்ந்து

செயல்பட வேண்டிய நிலை அல்லாத தொழில்களுக்கு உயரழுத்த மின்சாரத்தின் மீதான உச்ச நேரக் கட்டுப்பாடுகள் 1981 ஆகஸ்டு முதல் நாளிலிருந்து நீக்கப்பட்டன. இக்கட்டுப்பாடுகள் அனைத்தும் ஒரேயடியாக நீக்கப்பட்டமை இதுவே முதல்முறை யாகும். முந்தைய ஆண்டுகளில் ஒன்று அல்லது பல கட்டுப்பாடுகள் செயலில் இருந்தன. புனல் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு போதுமானதாக இருக்கிறது. இதனால் புனல் மின்விசை உற்பத்தி வாய்ப்புகள் போதிய அளவு திருப்திகரமாக இருக்கும். தென்மேற்குப் பருவமழை தொடங்கும் வரை அடுத்த சில மாதங் களுக்கு மின்விசை நிலைமை 1981ஆம் ஆண்டு நிகரான கால அளவில் இருந்ததைவிடச் சீராக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் நாட்டில் அதிக அளவு புனல் மின்விசை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதனை மேலும் அதிகப்படுத்துவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு. அனல் மின் ஆதாரங்கள் மூலம் அதிகச் செலவில் மின்விசை உற்பத்தி செய்யும் நிலைக்கு மாநில அரசு தள்ளப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கு அதிக மூலதனச் செலவு ஆகும். பெரிய அளவிலான அனல் மின் திட்டங்களுக்கு மாநில அரசு தனது நிதி ஆதாரங்களிலிருந்து செலவு செய்வது கடினமானதால், மாநில அரசு அனல் மின் திட்டங்களைச் செயல்படுத்து வதற்கு மத்திய அரசு நிதியுதவி அளிக்குமானால் மிகவும் பயனுள்ளதாயிருக்கும். கடந்த ஆண்டு நவம்பரில் நடைபெற்ற மின்விசை அமைச்சர்கள் மாநாட்டில் நடந்த விவாதத்தில் மாநில அரசு புதிய அனல் மின் திட்டங்களைத் தொடங்கவும், தற்போதுள்ள திட்டங்கள் சிலவற்றை விரிவுபடுத்தவும் மத்திய அரசு கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளது. வட சென்னையில் (5×210 மெ. வா.) அனல் மின் நிலையம் தொடங்குதல், மேட்டூரில் அனல் மின் நிலையத்தை விரிவுபடுத்தல் (2 × 210 மெ. வா.), தூத்துக்குடி அனல் மின் நிலையத்தை விரிவுபடுத்தல் (ஒரு 210 மெ. வா., + ஒரு 500 மெ. வா. திறனுடன்) ஆகியவை பரிசீலனையில் உள்ளன.

ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளவாறு, புனல் மின் சக்தியை உற்பத்தி செய்வதற்கான எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்தியுள்ளது; அனல் மின் சக்தி உற்பத்திக்கான பல்வேறு திட்டங்களையும் அரசு ஆராய்ந்து வருகிறது. அனல் மின் நிலையங் களுக்காக நீண்ட தொலைவிலிருந்து நிலக்கரியைக் கொண்டுவருவதில் உள்ள இடர்ப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் இரண்டாவது அணு மின் நிலையத்தை நிறுவும்படி மத்திய அரசை இவ்வரசு கோரி யுள்ளது. அணு மின் நிலையத்தை நிறுவுவதற்குப் பொருத்தமான இடங்களில் ஒன்றாக திருநெல்வேலி மாவட்டத்தில் கூடன்குளத்தைத் தெரிந்தெடுத்து மத் திய அரசுக்குத் தெரிவித்துள்ளது. இடம் தேர்ந்தெடுக்க மத்திய அரசினால் அமைக்கப்பட்டுள்ள குழு, விரைவில் தன் முடிவுகளை அறிவிக்கும் என்றும், அம்முடிவு நமக்கு ஆதரவாக இருக்குமென்றும் எதிர்பார்க்கின்றோம். கடல் நீரைக் குடி நீராக மாற்றுவதற்கும், அப் போது வெளிப்படும் வெப்ப சக்தியைப் பயன்படுத்தி மின் சக்தி உற்பத்தி செய்வதற்கும் ஏற்ற நிலையத்தை அமைக்கும் உத்தேசமும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாநில மின்வாரியம் கடுமையான நிதிப் பற்றாக்குறையில் உள்ளது. செய்த முதலீட்டிற்குக் குறைந்த அளவு வருவாய் கிடைப்பதாலேயே இந்த நிலை உள்ளது. நாட்டிலேயே குறைந்த அளவு மின் கட்டணம் வசூலிக்கும் மாநிலங்களில் ஒன்றான நமது மாநிலத்தில் மின் கட்டண வீதங்களைத் திருத்தி அமைக்குமாறு மத்திய திட்டக்குழு பலமுறை மாநில அரசிடம் வலியுறுத்தி வந்துள்ளது. மாநில மின்வாரியத்தின் நிதி ஆதாரங்களை வலுப்படுத்தினா லன்றி, சாதனத்தை நவீனப்படுத்தல், திட்டப் பணி களைச் செயல்படுத்தல், தற்போதுள்ள மின் நிலை யங்களையும் மின்விசை கொண்டு செல்லும் மின்கம்பித் தொடர்களையும் பராமரிப்பது ஆகியவை மிகக் கடுமை யாகப் பாதிக்கப்படும் என்று திட்டக் குழு வலியுறுத்தி யுள்ளது. வேளாண்மை, தொழில், வாணிகம் வளர்ச்சி யடைவதற்குக் கூடுதல் மின் உற்பத்தி மிகவும் அவசிய மானதாகும். மத்தியத்திட்டக் குழு வலுவாகப் பரிந் துரை செய்துள்ள வண்ணம் மின் கட்டண வீதங்களை மாற்றியமைப்பது மூலம்தான் மின் வாரியத்திற்குப் போதிய வருவாய் கிடைக்கும். போதிய வருவாய் கிடைத்தால்தான், மின் வாரியத்தின் நிதி ஆதாரங்கள் சீரடையும். அப்போதுதான் மின் உற்பத்தியை அதி கரிக்க இயலும். மின்வாரியத்தின் நடவடிக்கைகளைக் கணிசமான அளவுக்குத் தொடர்ந்து நடைபெறச் செய்ய மாநில அரசு கடந்த சில ஆண்டுகளாகவே நூறு கோடி ரூபாய்க்கும் அதிகமாகவே நிதி உதவி அளித்து வந்துள்ளது. நிதி உதவியைக் காலவரை யறையின்றி வழங்குவது மாநில அரசுக்கு இயலாது. ஏனெனில், அரசின் நிதி ஆதாரங்களைப் பெருமளவு அடிப்படையாகக் கொண்ட திட்டப் பணிகளையும், பிற வளர்ச்சி நடவடிக்கைகளையும் செயல்படுத்து வதை இது கடுமையாகப் பாதிக்கும். மேலும், மின்வாரியத்திற்குத் தேவைப்படும் பல்வேறு பொருள் களின் மீது அதிக வரிகளை மத்திய அரசு விதிப்பதன் மூலமும் இரயில்வே கட்டணம், எண்ணெய் விலைகள் முதலியவற்றை அதிகரிப்பதன் மூலமும், ஆண்டு தோறும் மின் உற்பத்திச் செலவு உயர்ந்து வருகிறது.




எனவே, தற்போதுள்ள குறைந்தளவு மின் கட்டண வீதங்களை மாற்றி அமைப்பதைத் தவிர மாநில அரசுக்கு வேறு வழியே இல்லை. தொழில் துறையில், தனியார் தங்கள் தொழிலுக்குத் தேவையான மின் உற்பத்தி செய்வதை அரசு அனுமதிக்க முடிவு செய் துள்ளது. தனியார் இலாபகரமாக மின் உற்பத்தி செய்ய முன்வருவார்களானால், அரசு அதைப் பரிசீலித் துப் பார்க்கவும் விரும்புகிறது.

காவிரி நீரைப் பங்கிட்டுக் கொள்வது தொடர் பான தகராறு இன்னும் தீர்க்கப்படாமலுள்ளது. மத்திய அரசின் ஆலோசனையின் பேரில் இது குறித்து தமிழ் நாட்டிற்கும் கர்நாடகத்திற்கும் இடையே இரு தரப்புப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. ஆனால், துரதிருஷ்டவசமாக இப் பேச்சுவார்த்தைகள் இதுவரை வெற்றியடையவில்லை. நீண்ட கால மாகத் தீர்க்கப்படாமல் உள்ள இப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண மத்திய அரசு உதவி செய்யும் என நம்புகிறோம். அண்மையில் இப் பிரச்னைக்குத் தீர்வுகாண ஒரு மாநாடு நடத்த இந்தியப் பேரரசு முன்வந்துள்ளது. அதில் நியாய மான இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும், இப்போது பாசனத்திற்குப் பயன்படுத்தப்படும்




தண்ணீருக்கு உத்தரவாதம் தரப்படும் என்றும் இந்த அரசு நம்புகிறது. கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் உபரி நீரைத் தமிழகத்தில் பாசனத்திற்காகத் திருப்பி விடுவதற்கான சாத்தியக்கூறு பற்றி பரிசீலிக்க மத்திய அரசு அமைத்த தொழில்நுட்பக் குழுவின் பரிவுரைகள் மீது விரைந்து நடவடிக்கைகள் எடுக்குமாறு மத்திய அரசை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வரும்.

அண்டை மாநிலங்களுக்கிடையே ஆற்றுநீர்ப் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்து வரும்போதே இந்த அரசு தமிழ் நாட்டில் பாசன வசதிகளை மேம்படுத்தத் தன்னால் ஆன முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டு வருகிறது. ஆற்றுப் பாசன ஆதாரங்கள் பெரும்பாலும் பயன்படுத்தப் பட்டுள்ளதால், பாசன ஏற்பாடுகளை நவீன மயமாக்குவதில் தற்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஆறாவது திட்ட முதலீட்டில் பாசன ஏற்பாடுகளை நவீனப்படுத்தும் திட்டங்களுக்கு 48·59 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பாசனச் சிறப்புத் திட்டம், தூர் வாருதல்—பண்படுத்தல் திட்டத்திற்கு 12 கோடி ரூபாய் செலவு செய்யப்படுமெனவும் எதிர் பார்க்கப்படுகிறது. குடிநீர் திட்டங்களுக்கும் பாசனத் திட்டங்களுக்கும் தமிழ் நாட்டில் தண்ணீர் பற்றாக்குறை இருப்பது அனைவரும் அறிந்த ஒன்றே. இதன் காரணமாக, அண்டை மாநிலங்களில் கிடைக்கின்ற உபரி நீரை இம்மாநிலத்தின் பயனுக்காகத் தந்துதவுமாறு அம்மாநிலங்களை நாம் கேட்டுக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். கிடைக்கின்ற நீரை அதிக அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ள இயன்ற முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளும் நிலையில், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த வறண்ட பகுதிகளின் பயனுக்காக, சில பருவகாலங்களில் கடலில் போய் வீணாகக் கலக்கும் வெள்ளநீரைத் திருப்பிவிடும் சாத்தியக் கூறுகளையும் மாநில அரசு ஆராய்ந்து வருகிறது. பொதுப்பணித் துறை இதற்கான ஆய்வுகளைத் தொடங்கியுள்ளது.

இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சி விரைந்து ஏற்படுவதற்காகத் தமிழ் நாட்டில் புதிய தொழிற் கூடங்களைத் தொடங்குவதற்கு ஊக்கம் அளிக்க அண்மையில் சிறப்புத் திட்டங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. தமிழ் நாட்டில் தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்குப் பல்வேறு ஊக்கத் திட்டங்கள், தேர்ச்சி பெற்ற தொழிலாளர், அடிப்படை வசதிகள் முதலியவை கிடைப்பது குறித்துத் தொழில் முனைவர்களுக்கு விளக்கிக் கூறுவதற்காக மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்களுக்குத் தமிழ் நாட்டுத் தொழிலமைச்சர் சென்று வந்தார். இம் மாநிலத்தைத் விரைவில் தொழில் மயமாக்குவதற்காக, சிறப்புச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. விற்பனை வரி அடிப்படையில் வட்டி இல்லாக் கடன் மீதான உச்ச வரம்பு 50 இலட்சம் ரூபாயிலிருந்து ஒரு கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை, தூத்துக்குடி, கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் தொழிற்பகுதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த இடங்களில் அமைக்கப்பெறும் புதிய தொழிற்கூடங்கள், முதல் ஐந்தாண்டுகளுக்கு மின் வெட்டு விலக்கு வசதிகளைப் பெறும். மின்னணுவியல், மருந்துப் பொருள்கள், மோட்டார் வண்டி துணைத் தொழில்கள் ஆகிய துறைகளில் புதிய தொழிற் கூடங்களைத் தொடங்குவதற்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு இச்சலுகைகள் ஊக்கம் அளிப்பவையாக இருக்குமென நம்புகிறோம்.

படித்த இளைஞர்களிடையே வேலை வாய்ப்புகளுக்கான தகுதிகளை மேலும் அதிகரிக்கச் செய்ய, தொழில் கல்விக்கு இவ்வரசு முக்கியத்துவம் அளித்துத் திட்டங்களைச் செயலாக்கி வருகிறது. நடப்பு நிதி ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் பொறியியற் கல்லூரி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. மேலும் ஆறு பல்தொழில் பயிற்சி நிறுவனங்கள் தொடங்கி நடத்தப்பட்டு வருகின்றன. அண்மையில் நடந்த பாரதி நூற்றாண்டு விழாவில் பெண்களுக்கெனப் பல்தொழில் பயிற்சி நிலையம் திருநெல்வேலி மாவட்டத்தில், எட்டையபுரம் பகுதியில் அமைக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு, இப்பயிற்சி நிலையங்கள் பெரிதும் வழிகோலும்.

மாநில அரசு தொழில்நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளிப்பதுடன் பொதுக் கல்விக்கு ஊக்கமளித்து வருகிறது. கோயம்புத்தூரில் பாரதியார் பல்கலைக் கழகத்தையும் திருச்சிராப்பள்ளியில் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தையும் அமைப்பதற்குச் சட்டங்கள் இயற்றப்பட்டு, குடியரசுத் தலைவரது ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. நிலங்களைக் கையகப்படுத்துவதற்கும் பல்கலைக் கழகங்களின் பல்வேறு தேவைகளைக் கண்டறிவதற்கும் தொடக்க நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூரில் 1981 செப்டம்பர் 15ஆம் நாளன்று தமிழ் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். தமிழ் நாட்டில் மகளிர் பல்கலைக் கழகம் ஒன்றைத் தொடங்கவும் அரசு கருதியுள்ளது. காரைக்குடியில் உள்ள கல்வி நிறுவனங்களை ஒருங்கிணைத்து, அமரர் அண்ணா உறுதி அளித்தவாறு, பல்கலைக் கழகம் ஒன்றைத் தொடங்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அறிஞர் அண்ணாவின் இருமொழிக் கொள்கையைப் பின்பற்றி, ஒவ்வொரு துறையிலும் நடைமுறையில் தமிழ் மொழியை முழுமையாகப் பயன்படுத்தவும், தமிழை ஆட்சிமொழியாக நிலைநாட்டவும், அரசு முனைப்பாக நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இந்தக் கொள்கையின் அடிப்படையில், இன்று முதல் எல்லா உரிமை இயல் நீதிமன்றங்களிலும் தீர்ப்புகளும் ஆணைகளும் தமிழில் வரையப்படவேண்டும் என்று அரசு பணித்துள்ளது.

கடல் சார்ந்த ஆய்வினை மேற்கொள்ளும் தேசிய நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் மாநிலத் தொல் பொருளியல் துறை காவிரிபூம்பட்டினத்திற்கு அப்பாலுள்ள கடலுக்கடியில் அண்மையில், நடத்திய தொல்பொருள் ஆய்வு பயனுள்ள முடிவுகளை அளித்துள்ளது. தரங்கம்பாடி வரை நடத்தப்பட்ட

ஆய்விலிருந்து பூம்புகார், வானகிரி பகுதியில் கடலுக்கடியில் கட்டிடங்களும், மூழ்கிப்போன கப்பல்களும் புதைந்து கிடக்கின்றன என்பதாகத் தெரிய வருகிறது. இந்த ஆய்வினைத் தொடர்ந்து மேற் கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

பள்ளிக் குழந்தைகளிடையே தொழு நோய் பரவியுள்ளதா என்று கண்டறிய, வரும் கல்வி ஆண்டிலிருந்து விரிவான சோதனைத் திட்டம் ஒன்றை அரசு தொடங்கும். குழந்தைகள் பள்ளிகளில் சேரும் போது அவர்களுக்கு அந்நோய் கண்டிருக்கிறதா என்று மருத்துவ சோதனை செய்வதுடன் சிகிச்சைக்குத் தேவையான தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படும்.

இந்த அரசின் முற்போக்கான தொழிலாளர் நலக் கொள்கையை ஒட்டி, தொழிலாளர்களின் நன்மைக்காகப் பல சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. 1981ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் 1–10–1981 முதல் செயலுக்கு வந்தது. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு வாழ்க்கைச் செலவுப்படி கொடுப்பதற்கான சட்டமும், தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழி லாளர்களைப் பதவியில் நிலைப்படுத்தும்) சட்டமும் 1–1–1982 முதல் செயலுக்கு வந்தன. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு கைத்தறி நெசவாளர்கள் (பணி நிலைமை, பல்வகை விதித் துறைகள்) சட்டம், அதன்கீழ் வகுக்கப்பட வேண்டிய விதிகள் முடிவு செய்யப்பட்டவுடன் செயலுக்குக் கொண்டு வரப்படும். 1981ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட வரைவு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. தொழிலாளர் அரசுக் காப்புறுதித் திட்டத்தை தர்மபுரி, நீலகிரி மாவட்டங்களுக்கு நீட்டிக்கவும், வேறு சில பகுதிகளில் அதன் பயன்பாட்டை விரிவுபடுத்தவும் அரசு கருதியுள்ளது.

ஆதி திராவிடர்களின் சமூக, பொருளாதார நிலைகளை மேம்படுத்த 1980–81ஆம் ஆண்டிலிருந்து சிறப்புக் கூறுகள் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. கடந்த ஆண்டில் இத்திட்டத்தின் அளவு ரூ. 71·64 கோடியாக இருந்தது. நடப்பாண்டில் இது ரூ. 83·04 கோடியாக உள்ளது. அடுத்த நிதியாண்டில் இது ரூ. 114·04 கோடியாக இருக்கும். அடுத்த நிதியாண்டில் 1·67 இலட்சம் ஆதி திராவிட குடும்பங்கள் பயனடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. மத்திய அரசின் சிறப்பு நிதியுதவியுடன் ஆதி திராவிடர்களுக்கான வருவாய் பெருக்கத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த



நிதியாண்டில் இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 9·56 கோடியாகும். நடப்பாண்டில் இது ரூ. 10 கோடியாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1982–83ஆம் ஆண்டில் மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி ரூ. 15 கோடியாக இருக்கக்கூடும். ஆதி திராவிடர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்த, சமூக, பொருளாதார நடவடிக்கைகள் எடுப்பதோடு, ஆதி திராவிடர்களுக்கெதிராக இழைக்கப்படும் குற்றங்களை, மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் விசாரிக்க தனி நீதிமன்றங்களை அரசு ஏற்படுத்தி வருகிறது. இம் மாநிலத்திலுள்ள ஆதி திராவிடர்களின் வாழ்க்கை நிலையை மேற் சொன்ன பல்வேறு திட்டங்கள் மூலம் மேம்படுத்து வதென அரசு உறுதி கொண்டுள்ளது.

பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காகத் தற்போது தமிழ் நாட்டில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கல்வி வசதி பெறுவதில் பல சலுகைகளை அளிப்பதுடன் அந்த வகுப்பினர் பொருளாதார வகையி லும் முன்னேற்றம் காணவும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த வகுப்பினர் மேற் கொள்ளும் வணிகம், தொழில் போன்ற திட்டங் களுக்கு நிதி உதவி செய்ய, பின்தங்கிய வகுப்பினர் பொருளாதார முன்னேற்றக் கழகம் ஒன்றை அரசு அண்மையில் நிறுவியுள்ளது. ஆதரவற்ற ஏழை விதவைகளுக்கு மருத்துவ நிலையங்களில் வேலைக்கு முன்னுரிமை அளிக்கப்படுமென அரசு சென்ற ஆண்டு அறிவித்தது. தொழில் கல்லூரிகளிலும் கலைக் கல்லூரிகளிலும் அவர்களுக்காக இடங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன. கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் மக்களுக்கு வேலை வாய்ப்புகளிலும் கல்வி நிலையங்களிலும் முன்னுரிமை அளிக்கும் கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. சென்ற ஆண்டு ஊனமுற்றோர் ஆண்டாகக் கருதப்பட்டு அவர்களுக்குப் பல புதிய திட்டங்கள் செயலுக்குக் கொண்டு வரப்பட்டன. அரசு நிறுவனங்களிலும் உள்ளாட்சி நிறுவனங்களிலும் சில குறிப்பிட்ட பதவி களை ஊனமுற்றோர்க்கென ஒதுக்கியுள்ளது. அரசுப் பணிகளிலுள்ள காலி இடங்களுக்கு வேலை வாய்ப்பகம் மூலம் ஆட்களை அனுப்பும்போது, ஊனமுற்றோருக்குத் தகுந்த முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. கல்வி நிலையங்களிலும் பொது நிறுவனங்களிலும் ஊன முற்றோர்க்கு 3 சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. ஊனமுற்றோர் ஆண்டு முடிவுற்ற போதிலும் அவர்களின் நலனுக்கான திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வரும்.

ஊராட்சித் தேர்தல்களை விரைவில் நடத்து வதில் முனைப்பாக ஆர்வம் கொண்டுள்ள இந்த அரசு இவ்வாண்டில் சனவரி திங்கள் இறுதியில் இத்தேர்தல் களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தது. அனைத் துக் கட்சித் தலைவர்களுடனும் கலந்து ஆலோசித்து, அவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு ஏற்ப, ஆதி திராவிடர்களுக்கும் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்ய இந்த அரசு கொள்கை முடிவு எடுத்து அதற்கு வகை செய்யும் அவசரச் சட்டம் ஒன்றைப் பிரகடனம் செய்தது. இட ஒதுக்கீடுகள் பற்றி சில பிரச்சினை களை எழுப்பி, நீதிமன்றங்களில் வழக்கு தொடுக்கப் பட்டுள்ளதையொட்டி, நீதிமன்றம் விதித்துள்ள இடைக் கால தடை ஆணைக்கேற்ப, தேர்தல்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. நீதிமன்ற அனுமதி கிடைத்தவுடன் இத்தேர்தல்களை நடத்த அரசு ஆயத்தமாக உள்ளது.

பாரதப் பிரதமர் அண்மையில் அறிவித்த இருபது அம்சத் திட்டத்தில் இடம் பெற்றுள்ள பாசன வசதிகளை விரிவாக்குதல், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்குதல், நிலச் சீர்திருத்தச் சட்டங் களைச் செயல்படுத்தல், நிலப் பதிவேடுகளைச்

சீராக்குதல், ஆதி திராவிடர்களுக்கான திட்டங்களை நிறைவேற்றுதல், தன்னிறைவுத் திட்டத்தில் குடிநீர் வழங்குதல், மின் உற்பத்தியைப் பெருக்குதல், பொது சுகாதார வசதிகளை விரிவாக்குதல், மகளிர் நலனுக்கான திட்டங்களைச் செயலாக்குதல், பொது விநியோக அமைப்பை விரிவாக்குதல் போன்ற பல அம்சங்கள் ஏற்கெனவே இவ்வரசு சில ஆண்டுகளாகச் செயல்படுத்தி வரும் வளர்ச்சித் திட்டத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளன என்பது நமக்கு மன நிறைவு அளிக்கக் கூடியது. சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவரும் நலிந்தோரும் வாழ்வும் வளமும் பெற்று உய்யும் வகை செய்ய வகுக்கப்பட்டுள்ள இந்த இருபது அம்சத் திட்டத்தைத் தமிழக அரசு உளமார வரவேற்கிறது. இத்திட்டத்தை முனைப்பாகச் செயல்படுத்துவதில், இவ்வரசு மத்திய அரசுக்கு முழு ஒத்துழைப்பை நல்கும்.

இம்மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு நிலைமை பொதுவாகச் சீராக உள்ளது. தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. சமூக விரோத சக்திகள் அடக்கப்பட்டுள்ளன. காவலர்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை அரசு தொடங்கியுள்ளது. காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் காவலர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பது இத் திட்டங்களில் ஒன்றாகும். திருச்சிராப்பள்ளி மாவட்டம் நாவல்பட்டு கிராமத்தில் முதற்கட்டத்தில் 150 ஏக்கர் நிலத்தில் சுமார் 700 வீடுகள் கட்டப்படும். காவலர்களுக்கு இன்னும் கூடுதலாக வீடுகள் கட்டிக் கொடுக்க, காவலர் வீட்டு வசதிக் கழகம் இம்மாநிலத்தின் ஏனைய பகுதிகளில் தகுந்த நிலங்களைக் கண்டறிந்து வருகிறது. இம்மாநிலத்தில் பணிபுரியும் காவலர், தலைமைக் காவலர்களின் நற்பணிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் முதலமைச்சர் காவலர் விருது என்ற புதியதொரு திட்டம் இவ்வாண்டு பொங்கல் திருநாளின் போது கொண்டுவரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி அவர்களுக்குப் பதக்கம் அளிப்பதோடு மாதாந்திரப் படியும் அளிக்கப்படும். இதனால் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 1,500 காவலர்களும் தலைமைக் காவலர்களும் பயனடைவர்.

முதலில் நான் தெரிவித்தப்படி, இம்மாநிலம் கடும் வறட்சியாலும், அதன் பின்னர் ஏற்பட்ட இடர்ப்பாடுகள், இன்னல்கள் ஆகியவற்றாலும், நிலவிய சோதனையான கால கட்டத்தைக் கடந்து வந்துள்ளது. நல்ல பருவ மழையால் இப்போது நிலைமை மாறி வருகிறது. சில பகுதிகள் தவிர இம்மாநிலத்தின் மற்ற எல்லா பகுதிகளிலும் உள்ள பல்வேறு ஏரிகள், நீர்த் தேக்கங்கள் நிரம்புவதற்கு இது பெரிதும் உதவியுள்ளது. மேலும், இம்மாநில மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த, பல்வேறு சமூக, பொருளாதாரக் கொள்கைகள் மூலம் என்னுடைய அரசு தன்னால் இயன்ற அனைத்தையும் செய்து 'வருகிறது.

இச்சட்ட மன்றத்தில் நடைபெறும் விவாதம் சிறந்த பயன் தருவதாகவும், ஆக்கபூர்வமானதாகவும் நம் மாநிலத்தின் வளர்ச்சிக்கு உதவுவதாகவும் அமையும் என்று நம்புகிறேன். உங்களது முயற்சிகளில் வெற்றியடைய வாழ்த்துகிறேன்.

**(தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டு அவையில் மேதகு ஆளுநர் 1-2-82 அன்று ஆற்றிய உரை)**

# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

**இயல், இசை, நாடக, நாட்டிய, கிராமியக் கலைகளைப் போற்றி வளர்த்திடவும், தமிழ்ப்பண்பாட்டின் அடிப்படையில் தோன்றிய, தொன்மைச் சிறப்புமிக்க கலை வடிவங்களை எழிலோடும் ஏற்றத்தோடும், புதுமைகள் மலரப் பேணிக்காத்திடவும், இருபத்தாறு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்டது தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்.**



**தமிழக அரசின் முழுமையான நிதி உதவியுடன், டில்லியிலுள்ள மத்திய சங்கீத நாடக சங்கத்தின் நோக்கங்களை மாநில அளவில், செயல் படுத்துவதோடு செழுமைமிக்க நமது தமிழ் மாநிலத்தின், பண்பாட்டிற்கும், கலை வடிவங்களுக்கும், புத்துயிரூட்டி இலட்சிய உணர்வுடன் பாடுபட்டு வரும், கலை வளர்த்திடும் மன்றம் இயல் இசை நாடக மன்றம்.**

**மைய அரசின், இந்திய நாட்டின் மாநிலங்கள் கலாச்சார பரிவர்த்தனைத் திட்டம், மற்றும், வயதான கலைஞர்களுக்கு மானியம் அளித்திட பரிந்துரை செய்யும் திட்டம்-தகுதி வாய்ந்த கலைஞர்களுக்கு, சபைகளின் மூலமாக, கலை நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்பளிக்கும் திட்டம், சிறந்த கலைஞர்களின் இசை ஆற்றலைப் பயன்படுத்தி ஒலிப் பதிவு செய்யும் திட்டம்-உயர்ந்த நாடகங்கள், நாட்டிய நாடகங்கள் தயாரிக்க, மானிய உதவி அளிக்கும் திட்டம்-சிறந்த கலை நூல்களை அச்சிட்டு வெளியிட, மானியம் அளிக்கும் திட்டம்-இதுபோன்ற நுண்கலைகளை வளர்த்திட, பயனுள்ள பல திட்டங்களை மன்றம் செயல் படுத்தி வருவதோடு, இசை மேதைகளின் நினைவைபோற்றும் விழாக்கள் கொண்டாடும் கலை நிறுவனங்களுக்கு உதவி அளித்து வருகிறது.**

**மறைந்தும் மறையாதிருக்கின்ற தமிழ் நாடகத் தலைமைப் பேராசிரியர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நினைவு நாளையும்-கலைவாணர் நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன் அவர்களது நினைவு நாளையும்-மன்றம், அரசின் துணையோடு, பொறுப்பேற்றுச் சிறப்பாக நடத்தி வருகிறது.**

# நீலத்திரைக்கடல் ஓரத்திலே........



## உழைப்பின் வெற்றிக்குரிய
## இடத்தை நாடி செல்கிறது
## டாமின் (TAMIN)



புதிய முகவரி:
**31, காமராஜர் சாலை,**
TWAD நிறுவன கட்டிடம்,
**சேப்பாக்கம், சென்னை-600005.**

| | | | |
|---|---|---|---|
| தொலைபேசி | : | அலுவலகம் (PBX) : | 848932 |
| தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் | : | அலுவலகம் (PBX) : | 848932 |
| | | நேரடித் தொடர்பு : | 848313 |
| | | இல்லம் : | 420849 |
| பொதுமேலாளர் | : | அலுவலகம் (PBX) : | 848932 |
| | | இல்லம் : | 423247 |







TAMIN

**தமிழ்நாடு கனிம நிறுவனம்**
(அரசு நிறுவனம்)

ARIES-TAMIN.858 82 Tam



# வனங்களைக் காத்து வளங்களை நிறைப்பீர் !

*மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர்*

## திரு இராம. வீரப்பன்

**கோ**யம்புத்தூரிலுள்ள மாநில வன அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழாச் சிறப்புரையாற்றும் வாய்ப்புப் பெற்றமைக்கு உண்மையில் மகிழ்ச்சியடைகிறேன்.

மாநில வனப் பணிகளுக்காக அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்க இந்திய அரசால் துவக்கப்பட்ட இரண்டாவது கல்லூரியாக இது திகழ்கிறது. 1948 முதல் 1951-ம்ஆண்டு வரையுள்ள காலப் பகுதியிலேயே மாநிலப் பணிகளுக்கு அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்கும் வாய்ப்பும் திறனும் இக் கல்லூரிக்கு இருந்து வந்துள்ளது. கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீரம் வரையிலான நிலப்பரப்பிலிருந்து வந்து இங்கு குழுமியுள்ள பயிற்சியாளர்களைக் காணும்போது இந்தியாவின் ஒருமைப்பாட்டை உணருகிறேன், இதற்கு நாம் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறோம்.

இந்தியாவில் வனக் கல்வி, ஒரு நூற்றாண்டுக் காலத்தை முடித்துள்ளது. இந்தியாவிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வரும் அலுவலர்களுக்கு உயர்மட்ட அளவில் பயிற்சியளித்து வனப் பாதுகாப்பிற்காக வன ஆய்வு நிலையமும் கல்லூரிகளும் அரும் பணியாற்றியுள்ளன. இந்நிலையத்திலிருந்து வந்துள்ள பயிற்சியாளர்கள் இந்நாட்டிலுள்ள காடுகளைக் கடமையுணர்வுடன் நிர்வகித்துள்ளனர். எனவே, இந்த அரிய வாய்ப்பை எனக்கு நல்கிய இந்திய அரசின் அதிகாரிகளுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று பட்டம் பெற்று வெளிவரும் அலுவலர் பயிற்சியாளர்களைப் பாராட்டுகிறேன்; அவர்கள் பணியாற்றும் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் வனப்பணிக்குரிய உயர்பாரம் பரியத்தைக் கட்டிக் காத்து, வனத்துறையைப் பொறுத்த வரையில் சமுதாயம் எதிர்பார்க்கும் நம்பிக்கையை நிறைவேற்றிடும் வகையில் கடமை ஆற்றுவீர்கள் என்பதில் ஐயமில்லை.

இந்திய வரலாற்றையும் இதிகாசங்களையும் பிற நூல்களையும் படிக்கும்போது, சமுதாயத்திற்குத் தேவையான அனைத்தையும் அளிக்கும் வகையில் இயற்கை வளம் மலிந்திருந்தன என்பதை நாம் நன்கு அறிந்திட இயலும். காலம் செல்லச் செல்ல, மக்கள் தொகை பெருகியது; வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவும் உடையும் அளிக்கக் காடுகளின் பகுதிகள் அழியத் தொடங்கின. இயற்கை வளங்கள் அறிவியல் முறையில் நிர்வகிக்கப்படவில்லை. அறிவியல்துறை முன்னேற்றம் பெற்ற நிலையில் பெரும் பகுதியான காடுகள், நீர்-மின் திட்டங்களுக்கும் சாலைகள் - ரயில்பாதைகள் அமைப்பிற்கும் தொழில்கள் பெருக்கத்திற்கும் பயன்படுத்தப்பட்டன. காடுகளின் மூலப்பொருள்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் தொடங்கப்பட்டமையால் காடுகள் அழியத் தொடங்கின. இவ்வகையில் நாம் மக்களுக்குத் தேவையான எரிபொருள்களைக் குறைந்த

விலையில் அளிக்க முடியவில்லை. வீடுகள் கட்ட மரங்கள் வழங்க முடியவில்லை. கால் நடைகளுக்கான தீவனங்களைத் தர முடிய வில்லை. நமக்குத் தேவையானதும் ஏற்று மதிக்குத் தேவையானதுமான சந்தனக் கட்டைகளும் போதுமான அளவு இல்லை; உடல் நலம் காத்திட உரிய மூலிகை களும் கிட்டுவதில்லை; பொழுதுபோக்கிற்கு விலங்கினங்களும் அரிதாகி விட்டன. தொழில்களுக்கான மூலப் பொருள்களைக் கொடுக்க முடியவில்லை. குடிசைத் தொழில்களுக்கான மூங்கில்களை நல்க முடிய வில்லை. மேலும் காடு படு பொருள்களைத் தேவையான அளவிற்கு வழங்க முடியவில்லை. காடுகள் மூலம் கிட்டும் சிறுபொருள்கள் குறித்து உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட வில்லை. அவை எந்த அளவிற்குக் கிடைக் கின்றன என்பது பற்றிய சரியான மதிப்பீடும் எடுக்கப்படவில்லை. இதனால் அரசு ஒவ் வோர் ஆண்டும் பெருமளவு வருமானத்தை இழந்து வருகிறது. கடந்த காலத்தில் புறக் கணிக்கப்பட்ட இந்நிலை பற்றிச் சிந்தித்து, முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

காடுகளின் சிறப்பும் அவற்றால் ஏற்படும் நலன்களும் இன்னும் சாதாரண மனிதனுக்குத் தெரியவில்லை. ஆனால், அன்றாட வாழ்வில் விறகு பற்றாக்குறை பற்றியும், மரம் கிடைக் காது ஏற்படும் துயர்குறித்தும் அவன் பெரி தும் கவலை கொள்கிறான். இது குறித்துப் பொதுமக்கள் அறிந்திடும் வண்ணம் செய்வது உங்கள் கடமையாகும்.

வன அதிகாரிகளாகிய உங்கள் பணி, பலதரப்பட்டதாகும். இந்நாட்டின் மிகவும் விரிந்து பரந்த, விலைமதிப்புமிக்க சொத்துக் களின் பாதுகாவலர் நீங்கள்.

வனக் கல்வியின் நூற்றாண்டு விழாவைத் தொடங்கி வைத்து இந்தியப் பிரதமர் உரை யாற்றும்போது வனவர்கள், சமுதாய நலக் காடுகள் வளர்ப்பில் நாட்டம் செலுத்த வேண்டுவது குறித்துக் குறிப்பிட்டார்கள். நமது நாட்டில் 'சமுதாய நலக் காடுகள்' என்ற தொடர் தற்போது பெரிதும் பயன் படுத்தப்படுகின்றது. இந்தியாவில் ஒதுக்கக் காடுகளின் பரப்பு மேலும் விரிவாக்கப்பட முடியாது. எனவே, சமுதாய நலக் காடுகள் வளர்ப்பே இன்றைய நிலையில் பயனுள்ள பரி காரமாகும். வனங்களை அடிப்படையாகக் கொண்ட பொருள்களை உருவாக்கி மக்களுக் கென உள்ளதாக இத்திட்டம் செயல்பட வேண்டும். இதில் அதிகாரிகள் மட்டுமின்றி மக்களும் பங்கு பெற்று இம்முயற்சியில்வெற்றி காண வேண்டும். இது மக்களின் திட்ட மாகும். மக்களின் திட்டமாக இச்சமுதாய நலக் காடுகள் வளர்ப்பைக் கொள்ளலாம். வனவர்கள், பழமையான கருத்துக்களிலிருந்து விடுபட்டு, சமூக நிலைமைகளையும் தேவை களையும் கருத்தில் கொண்டு புதிய சிந்தையை உருவாக்கிட வேண்டும். மக்களுடன் நெருங் கிய சுமுகமான உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வனப்பணி அலுவலர்களுக்கு சமு தாய நலக்காடுகள் வளர்ப்பு குறித்து சிறப்புப் பயிற்சியளிக்கப்பட வேண்டுமென்பது என் விருப்பமாகும். சிறப்பாக இப்பணியிலுள்ள கீழ்மட்ட அலுவலர்களுக்கு இப்பயிற்சி அவ சியமாகும். சுற்றுலாத் தொழிலும் நாம் நமது காடுகளை-எந்த வகையில் நிர்வகிக் கிறோம் என்பதை அடிப்படையாகக்கொண் டுள்ளது. வன விலங்குகள் நமது செல்வம்: இந்தியாவில் அரிய பறவைகளும் விலங்கினங் களும் உள்ளன.

சூமேக்கர், 'சிறியதே அழகு' என்ற தனது நூலில் இந்தியர்களுக்கு வழங்கிய அறிவு ரையை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ''பலதரப்பட்ட உலகில் எங்கணுமில்லாத சிறப்பு வாய்ந்த மரங்களை இந்தியா பெற் றுள்ளது. இந்தியாவின் மிகச் சிறந்த உப தேசகரான புத்தர், ஒவ்வொரு பௌத்தனும் கடைப்பிடிக்கவேண்டிய கடமையை வலி யுறுத்தும்போது ஒவ்வொரு ஐந்து ஆண்டுக்கும் ஒரு மரம் நட்டுக் காத்திடவேண்டும் என்றார். இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் ஒருவர் ஒரு மரம் நட்டுக் காத்திட்டால், ஐந்தாண்டுக் காலத்தில் நன்கு வளர்ந்த மரங்கள் 20,000 இலட்சம் ஆகும் என்று கணக்கிடலாம். இதை அந்நிய நாட்டு உதவி எதுவுமின்றிச் செய்திட லாம். சேமிப்பும் முதலீடும் இதில் இல்லை. மனிதனுக்கு உண்மையில் தேவைப்படும் அனைத்தும் இதனால் கிட்டும்.''

நமது பிரதமர் அறிவித்துள்ள ''ஒரு மரம் ஒரு குழந்தை'' திட்டம் இக்கருத்தை எய்துவதற்காகத்தான்; குழந்தைகள் மரங் களை விரும்பி மதிப்பதற்காகத்தான்.

நீர் பிடிப்புப்பகுதிகளிலுள்ள காடுகள் பெருமளவில் அழிக்கப்படுவதை நாம் தடுத் திட வேண்டும். வளர்ச்சிப்பணி என்ற பெயரில் இது நடந்துவருகிறது. அண்மையில் நாம் ''உலக சுற்றுப்புறத் தூய்மை நாளைக்'' கொண்டாடத் துவங்கினோம்.





தமிழ்நாட்டில் கடந்த மூன்றாண்டுகளில் தனியார் காடுகளையும் மரங்களையும் அழிப்பதைக் கூடத் தடை செய்யும் பல சட்டங்களை இயற்றியுள்ளோம். சந்தன மரச் செல்வத்தைப் பாதுகாக்கவும் சிறப்பான நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். உலகிலேயே பெருமளவில் சந்தன மரங்கள் உள்ள மாநிலம் தமிழ்நாடு, 500 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் சந்தன மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. ஆண்டுக்கு 65,000 ஹெக்டேர் பரப்பில் பயிரிடும் திட்டம் உள்ளது. சமுதாய நலக்காடுகளின் கீழ் 35,000 ஹெக்டேர் பரப்பும் ஒதுக்கக்காடுகளில் 30,000 ஹெக்டேர் பரப்பும் பயிரிடும் திட்டமாகும். இன்று இந்தியாவில் வேறு எந்த ஒரு மாநிலமும் மேற்கொள்ளாத பெருமளவு பரப்பில் பயிரிடும் திட்டமாகும்.

''நேற்றைய வனவர்கள், நிர்வகிப்பதற்கு காடுகள் இருந்தன; இன்றைய வனவர்கள் நிர்வகிப்பதற்குக் காடுகள் பெற முயல்கிறார்கள். ஆனால் நீங்கள் நாளை பணியாற்றவுள்ள வனவர்கள் நிர்வகிக்கத்தக்க அளவில் காடுகள் இல்லை; காடுகளுக்கு அப்பால் காடுகளை உருவாக்கிட வேண்டும்.''

இம்மாற்றத்தை விளைவித்திட வனவர்களுக்குப் பயிற்சியளிப்பது அவசியமாகும். இந்திய அரசும் இதனை நன்கு உணர்ந்துள்ளது. எனினும் இந்திய அரசின் அதிகாரிகள் கவனத்திற்குச் சில சொல்ல விரும்புகிறேன். கோயம்புத்தூரில் வனக் கல்லூரிகளுக்கு ஆசிரியர்களைப் பெறுவதில் இடர்ப்பாடு இருப்பதாகச் சொல்லியுள்ளார்கள். இந்த இரண்டு கல்லூரிகளுக்கும் ஆசிரியர்களை இதுவரை தமிழ்நாடு அளித்துவந்துள்ளது. இந்தியாவிலுள்ள பல மாநிலங்களிலிருந்தும் இதற்கான ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று விரும்புகிறேன். இதனால் பிற மாநிலங்களிலிருந்து வரும் அனுபவம் மிக்க ஆசிரியர்களின் அறிவும் மாணவர்களுக்குப் பயன்படும்.

என் உரையை முடிக்கு முன்பாக இளைஞர்கள் கருத்தில் கொள்வதற்கான சில ஆலோசனைகளைக் கூற விரும்புகிறேன். முதலாவதாக, கிடைக்கும் காட்டு நிலத்தைப் பயன்படுத்துவதில் உங்களுக்குள்ள அறிவாற்றலைப்பயன்படுத்தவேண்டும். ''முனைப்பாகக் காட்டுவளத்தைப் பெருக்கிடுவது'' உங்கள் குறிக்கோளாக இருக்க வேண்டும். இரண்டாவதாக, காடுகளைச் சுற்றியுள்ள இடங்களில் வாழும் மக்களின் தேவைகளை அறிந்திட வேண்டும். அவர்களின் சமூக நிலைமைகளை அறிந்து அவர்களின் சட்ட பூர்வமான தேவைகள் பூர்த்தி செய்யப்படும் வகையில் உங்களது காடு வளர்ப்புத் திட்டங்களை திட்டமிடுங்கள். மூன்றாவதாக, தேசியச் சொத்தைக் காப்பதில் நீங்கள் கருத்தாகவும் திடமாகவும் இருக்கவேண்டுமென்றாலும் நிறைவேற்றும்போது அமைதியாகவும் விட்டுக் கொடுத்தும் சுமுகமாகவும் நயந்தும் கடமை ஆற்றிடும் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும். உங்கள் பணியாளர்களிடமும் இதைத் தெரிவிக்கவேண்டும். நான்காவதாக, ஆய்விற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும். இறுதியாக, நீங்கள் நேர்மை, கடமை உணர்வு நாணயம் இவற்றைக் கடைப்பிடிக்கவேண்டும்- வனவர்களுக்கு அமையவேண்டிய அடிப்படைப் பண்புகள் இவைகள். பலதரப்பட்ட கடமையாற்றும் நீங்கள் இவற்றைப் பேணிக்காத்து இத்துறையில் உயர்ந்திட வேண்டும்.

கடந்த காலத்துடன் ஒப்பிட்டால் நீங்கள் இன்றைய நிலையில் வேறு வகையில் கடமை



யாற்றவேண்டியுள்ளது. கடந்த காலத்தில் வனவர்கள் மக்களுடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை. காட்டுப் பகுதிகளில் செயல்பட்டு வந்தார்கள். இன்று, நிலை மாறிவிட்டது. கிராம மக்களுடன் நீங்கள் பழகவேண்டியுள்ளது; அவர்களுக்குக் காடுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும்வகையில் செயலாற்றுவதுடன் அவற்றைப் பாதுகாத்திட அவர்களின் ஒத்துழைப்பையும் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சமுதாயத்தின் நலனைக் காத்திடும் மருத்துவர் அல்லது ஆசிரியரின் பங்கைப் போன்றே சமுதாய நலனைப் பேணும் உங்கள் பங்கும் அமைகிறது. மனித இனம் உயிர் வாழ்வதற்குத் தேவையான சுற்றுச் சூழலை உருவாக்கிடும் காடுகளைப் பாதுகாத்திடும் அரும் பணியை ஆற்றிடும் உங்கள் பங்கு மகத்தானது. இப்பணியை வெற்றியுடன் நிறைவேற்றிடுவீர்கள் என்று நம்புகிறேன்.

உங்கள் வாழ்வில் நலனும்
வெற்றியும் பெற என்
வாழ்த்துக்கள்.

[கோயம்புத்தூரிலுள்ள மாநில வன அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழாவின்போது [30-1-1982 அன்று] மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்கள் ஆற்றிய பட்டமளிப்பு விழாச் சிறப்புரையிலிருந்து ...]

## மருத்துவமனைப் பெயர் மாற்றம்

புதுக்கோட்டையில் பிறந்த சிறந்த சமூக சீர்திருத்தவாதியான திரு முத்துலட்சுமிரெட்டியின் நினைவாகப் புதுக்கோட்டை மாவட்ட அரசுத் தலைமை மருத்துவ மனைக்கு டாக்டர் முத்துலட்சுமி நினைவு அரசுத் தலைமை மருத்துவ மனை எனப் பெயரிடப்பட்டுள்ளது.

## அட்டையில்

சென்னையில் காமராஜர் சாலையில் நடைபெற்ற குடியரசு தின விழா (26-1-82) அலங்கார அணிவகுப்பில் பங்கேற்ற அலங்கார ஊர்திகளில் இரண்டு ஊர்திகளின் எழில் வண்ணப்படங்கள் இவ்விதழின் முதல் அட்டையையும் நான்காவது அட்டையையும் அலங்கரிக்கின்றன.

வளரும் தமிழகம்



# தன்னிறைவுப் பாதையில் வெற்றிநடை போடும் தமிழகம்


மாண்புமிகு
உள்ளாட்சித் துறை அமைச்சர்
## திரு ப. குழந்தைவேலு


“தேவைகள் மனித வாழ்வில் தவிர்க்க முடியாதவை. தேவைகள் இல்லை என்ற நிலை உருவாகும் போது தான் வாழ்க்கையில் நாம் நிம்மதி அடைகிறோம். வீட்டுக்கு வீடு—மனிதனுக்கு மனிதன் தேவைகள் வேறுபடலாம் - மாறுபடலாம். ஆனால் சமுதாயம் என்று ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது தேவைகள் ஒரே மாதிரியாகத்தான் அமைந்துள்ளன. சமுதாயத்தின் இந்த ஒட்டுமொத்தத் தேவைகள் தீர்க்கப்படுவதைப் பொறுத்தே தனிப்பட்ட மனிதர்களின் தேவைகளும் தீர்க்கப்படுகின்றன. எனவே, சமுதாயத்தின் தேவைகளைத் தீர்ப்பதன் மூலம் தனிப்பட்ட மனிதர்களின் தேவைகளைத் தீர்த்து வைக்கும் மாபெரும் பொறுப்பு அரசுக்கு உண்டு. இதை நன்குணர்ந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலமைந்த அரசு நிறைவேற்றியுள்ள-நிறைவேற்றிவரும் திட்டம்தான், தன்னிறைவுத் திட்டம்.

ஒரு மனிதனின் உடல்நலத்தையும் வளத்தினையும் அவன் நாடித் துடிப்பைப் பார்த்து தொட்டறிந்து கணக்கிடுவது, அன்று முதல் இன்று வரை நடைபெற்று வருகிறது. அது போல் ஒரு நாட்டின் வளத்தை அதன் கிராமங்களின் வளத்தைக் கொண்டே அறிய முடியும் - கணக்கிட இயலும் என்பதைக் கருத்தில் கொண்டே ‘கிராமங்கள் இந்தியாவின் உயிர் நாடி’ என்றனர்.

ஒரு நாட்டின் உயிர் நாடியான இந்த கிராமங்களின் நிலை எவ்வாறு இருந்தது? விடுதலை பெற்று இத்தனை ஆண்டுகளாகியும் நம் மக்கள் ‘‘தேவைகள்’’ என்னும் இடர்ப்பாடுகளிலிருந்து விடுதலை பெற்றார்களா என்ற வினா அண்மைக்காலம் வரை வினாவாகவே நின்றது. இவ்வினாவிற்கு விடையளிக்க கிராம மக்கள் வாழ்விலே தன்னிறைவையேற்படுத்தி தமிழகத்தை தன்னிறைவுப் பாதையில் காண விரும்பி புரட்சித் தலைவர் அவர்கள் அறிமுகப்படுத்திய திட்டம் தான் தன்னிறைவுத்திட்டம்.

அனைத்துக் குடியிருப்புகளுக்கும் நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளித்தல் இணைப்புச் சாலைகள் இடுதல், சிறுபாலங்கள் அமைத்தல், ஆதி திராவிடமக்கள் வாழும் குடியிருப்புகளிலிருந்து மயானங்களுக்குச் செல்லும் பாதைகள் அமைத்தல், அவர்களுக்கு வீடுகள் கட்டித் தருதல், சிறுபாசன அமைப்புகளை மேம்படுத்திப் பராமரித்தல், ஊரக மருந்தகங்களும், தாய் சேய் நலவிடுதிகளும் அமைத்தல் ஆகிய ஒன்பது அங்கங்களைக் கொண்டது இத்திட்டம்.

ஆண்டுதோறும் ஊராட்சி ஒன்றியங்கள் இத்தகைய திட்டங்களைத் தம் சொந்த நிதியிலிருந்தும் அரசின் உதவியோடும் நிறைவேற்றி வந்த போதிலும், இத்திட்டத்தை நிறைவேற்றத் தொடங்கிய 1980-81ஆம் ஆண்டு தமிழகத்தின் தேவைகள் என்னென்ன என்பது பற்றிக் குறிப்பிடுவது அவசியம் என்று கருதுகிறேன்.

தமிழ்நாடு முழுவதிலும் 15,366 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கியாக வேண்டியிருந்தது. 31,112 கி.மீ. நீளத்திற்கு இணைப்புச் சாலைகள் இடப்படவேண்டியிருந்ததோடு, 26,428 சிறுபாலங்கள் கட்டி முடிக்கப்பட வேண்டியிருந்தன. பல்வேறு ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கான மயானப்பாதைகள் மட்டும் 4,415 கி.மீ. நீளத்திற்கு இட வேண்டியிருந்தது. தேவைப்பட்ட மொத்த பள்ளிக்கட்டிடங்களின் எண்ணிக்கை 3,263. இவற்றோடு ஆதி திராவிடர்களுக்காக 41,240 வீடுகள் கட்டி முடிக்கப்பட வேண்டிய பெரும் பணியும் இருந்தது.

இத்தகைய இமாலயப் பணிகளை வழக்கம் போல் நிறைவேற்றி வருவோமாயின்-இவைகளை நிறைவேற்றி முடிக்க பல்லாண்டு காலங்கள் காத்திருக்கவேண்டும். ஆனால் இத்தகைய அடிப்படைத் தேவைகளுக்காக மக்களைப் பல்லாண்டு காலம் காக்கவைக்க விரும்பாத புரட்சித் தலைவர் அவர்கள் மூன்றாண்டு காலத்திற்குள் இத்திட்டம் நிறைவேற்றப்பட ஆணையிட்டார்கள்.

அடிப்படை வசதிகள் அனைத்தையும் அளிக்கும் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றுவதற்காக முதற்கட்டமாக 1981-82ல் 69 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு

இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப் பட்டது. இரண்டாவது கட்டமாகத் தற்போது 150 ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் முனைப்புடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இறுதிக் கட்டமாக எஞ்சிய 157 ஒன்றியங்களில் இத்திட்டம் 1982-83 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும்.

தன்னிறைவுத் திட்டத்தின் முதற்கட்ட வட்டாரங்களில் ரூ. 46,42 கோடி செலவிட்டு 7,493 கி.மீ. மயானச் சாலைகளும், இணைப்புச் சாலைகளும் போடப் பட்டன. 2,554 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதிகளும், சிறு பாலங்கள், சிறுபாசன வசதி, ஊரக மருந்தகங்கள், தாய் சேய் நல நிலையங்கள், பள்ளிக் கட்டிடங்கள் ஆகியவற்றில் 5,336 பணிகள் நிறைவேற்றப்பட்டன. இன்று இப்பணிகளால் இப்பகுதி வாழ் மக்களின் வாழ்வில் புத்தொளி வீசுகிறது.

இவ்வாண்டில் நிறைவேற்றப்பட்டுவரும் இரண்டாவது கட்டப் பணிகளின் மதிப்பீடு மட்டும் ரூ. 90 கோடியாகும். இப்பெருந் தொகையைக் கொண்டு செய்து முடிக்கவேண்டிய பணிகள் ஆயிரக்கணக்கானவை. அவையனைத்தும் இவ்வாண்டு மார்ச் திங்களில் முடிவடையும்.

இத்தகைய மாபெரும் அளவில்-கிராமப் புறத்திட்டங்கள் இதுவரை இந்திய நாட்டில் நிறைவேற்றப்பட்டதாக வரலாறு இல்லை. எனவே தமிழ்நாடு அரசின் இத்திட்டம் வேறு மாநில அரசுகளையும் கவர்ந்திழுத்து நம்மிடமிருந்து இத்திட்டம்பற்றியவிவரங்களைச் சேகரிக்கச் செய்திருக்கின்றன.

தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றி வருகின்ற காரணத்தால் வழக்கமாக ஒன்றியங்களுக்கு வழங்கும் நிதியை அரசு எக்காரணத்தைக் கொண்டும் குறைத்து விடவில்லை. 1971-72ஆம் ஆண்டில்,ஒன்றியங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 2,267 இலட்சம். ஆனால் 1981-82ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையோ ரூ. 80.44 இலட்சம். அதாவது ஏறத்தாழ நான்கு மடங்குத்தொகை அதிகமாக ஒதுக்கப்பட்டு ஒன்றியத்தின் வாயிலாக கிராம மக்களுக்குத் தேவையான வசதிகள் செய்து வருதைக் காணும் போது, இவ்வரசு கிராம மக்கள்பால் கொண்டுள்ள சிறப்பான கவனம் தெளிவாகத் தெரியும்.



தன்னிறைவுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஒன்பது பணிகளோடு வேறுபல பணிகளும் இத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப் பட்டு வருகின்றன.

கிராமப்புறங்களில் மகளிர்க்கான கழிப்பிடங்கள் கட்டப்பட்டு வருதலும் குடிசைகளுக்கு மின் வழங்கும் திட்டமும் இங்கே குறிப்பிட்டுக் கூறியாக வேண்டும்.

தன்னுடைய நிதி வசதிகளை மட்டுமின்றி மத்திய அரசு அளிக்கும் நிதி உதவிகளையும் முறையே செவ்வனே செலவிட்டு-மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதில் 'தமிழ்நாடு அரசிற்கு இணை, தமிழ்நாடு அரசே' என்று பல பத்திரிகைகள் பாராட்டியுள்ள செய்தியை இங்கே குறிப்பிட நான் விழைகிறேன்.

''உழைப்பிற்கு உணவுத் திட்டம்'' என்ற பெயருடன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் என்ற பெயரில் சில மாற்றங்களுடன் நிறைவேற்றப்பட்ட இத்திட்டத்திற்கு மத்திய அரசு நடப்பு ஆண்டில் இதுவரை வழங்கியுள்ள ரூ. 7.40 கோடியுடன் தமிழக அரசின் பங்கான ரூ. 7.40 கோடியும் சேர்ந்து மொத்தம் ரூ. 14.80 கோடி முழுவதும் கொடுத்துவிட்டு அதற்குரிய செலவு கணக்குகளை முறைப்படி கொடுத்து இனிவரும் மாதங்களுக்கு அதிகப்படியான உதவியைப் பெறவிருக்கும் ஒரே மாநிலம் தமிழகம் தான் என்ற செய்திபுரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் அமைந்த தமிழ்நாடு அரசின் வெற்றிப்பட்டியலுக்கு ஒரு தலைசிறந்த சான்று என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்படுவதால் விளைந்துள்ள மற்றொரு மாபெரும் நன்மை-தக்க வேலை வாய்ப்பு, ஒரே ஆண்டில் பல இலட்ச ரூபாய்க்கான வேலைகள் நடைபெறுவதால், சாலைகள் இடுதல், கட்டிடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளில் ஈடுபடும் உழைக்கும் வர்க்கத்தினர் அனைவருக்கும் இத்திட்ட நிறைவேற்றத்தால் வேலைவாய்ப்புகள் தொடர்ந்து ஏற்பட்டிருக்கின்றன. இதனால் கிராமப்புறங்களில் உழைக்கும் ஆற்றல் பெற்றவர்களிடையே வேலை இல்லாத் திண்டாட்டம் பெருமளவு குறைந்திருக்கிறது என்பது மறக்க முடியாத உண்மை.

இன்று தன்னிறைவுப் பாதையில் தமிழகம் வெற்றி நடைபோடுகிறது. வீறுநடை போடுகிறது. வருகின்ற காலமெல்லாம் தமிழ் மக்கள் காலமாக, தமிழ்நாட்டின் பொற்காலமாக அமையுமென்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

''வளரும் தமிழகம்'' என்ற தலைப்பில் நான் உரையாற்ற அழைக்கப்பட்டேன். புரட்சித் தலைவரின் சீர்மிகு மேற்பார்வையில் நிறைவேற்றப்பட்டு வரும் தன்னிறைவுத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் நிறைவேற்றப்பட்டு முடிந்த பின்னர், ''வளர்ந்த தமிழகம்'' என்று இத்தலைப்பையே மாற்றி அமைக்க வேண்டியிருக்கும்.

[சென்னை வானொலி 7-2-82]

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

## 21—1—82

தருமபுரி, புதுக்கோட்டை, தேனி ஆகிய இடங்களில் 30கோடி ரூபாய் செலவில் 3 புதிய கூட்டுறவு நூற்பாலைகள் அமைக்கப்படும்என்று மாண்புமிகு கதர்,பொதுப் பணித்துறைஅமைச்சர் திரு எஸ். என். ராஜேந்திரன் அவர்கள் அறிவித்தார்கள்.

புற்று நோயைத் தொடக்கத்திலேயே கண்டுபிடித்து சிகிச்சை அளிப்பதற்கான புதிய பிரிவு ஒன்றைச் சென்னைப் பொது மருத்துவமனையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

சென்னையிலுள்ள 30 இலட்சம் மக்களுக்குக் கோடை காலத்தில் போதிய அளவு குடிநீர் வழங்குவது ஒரு பெரிய சிக்கலாக இருந்து வருகிறது. இதைத் தடுப்பதற்காகச் சென்னைக்கு ஆந்திராவிலுள்ள கிருஷ்ணா ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வரத் தமிழக அரசு 450 கோடி ரூபாய் செலவில் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

## 22—1—82

தமிழ்நாட்டில் மாமல்லபுரத்தில் ஒலி-ஒளிக் காட்சி அமைக்க வேண்டும் என்று மத்திய அரசைத் தமிழக அரசு கேட்டிருந்தது. இந்தத் திட்டத்தை மத்திய அரசு ஏற்றுக் கொண்டு, இச்செலவில் பாதித் தொகையாக 25 இலட்சம் ரூபாயும் வழங்கியுள்ளது என்னும் தகவலை மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்கள்.

## 23—1—82

இல்லத்தரசிகள், அலுவலகங்களில் பணியாற்றும் கடைநிலை ஊழியர்கள் போன்றவர்களும் பல்வேறு காரணங்களால் பள்ளிக் கல்வியைத் தொடர முடியாமல் இடையே விட்டுப் போகிறவர்களும் நேரடியாகப் பள்ளியில் சேராமலேயே தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் தயாரித்து அளிக்கும் அஞ்சற் பாடங்களைப் படிப்பதன் மூலம் பள்ளியிறுதி வகுப்புத் தேர்வுகளில் வெற்றி பெற வழி செய்யும் வகையில் திறந்தநிலைப் பள்ளி நிலையம் ஒன்றை முதன் முறையாகத் தமிழகத்தில் செயல்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

## 24—1—82

தொழில் வளர்ச்சியில் தமிழக அரசு மிகுந்த அக்கறை காட்டி வருகிறது. இதனால் கடந்த 4 ஆண்டுகளில் சிறுதொழில்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. தர்மபுரி, இராமநாதபுரம், புதுக்கோட்டை முதலிய முன்னேற்றமடையாத மாவட்டங்களில் புதிய தொழில்களைத் தொடங்க அரசு திட்டங்களை உருவாக்கிக் கொண்டுவருகிறதுஎன்றுமாண்புமிகு.ஊரகத்தொழில் துறை அமைச்சர் திருகே. ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்கள்.

## 26—1—82

மின்சார கட்டணத்தை வங்கிக் காசோலை ( cheque ) யாகக் கொடுக்கலாம். அதுவும் வீட்டுக்கு மின்சார மீட்டர் கணக்கு எடுக்க வரும் சிப்பந்தியிடமே கொடுக்கலாம். இந்தப் புதிய முறை விரைவில் செயல்முறைக்குக் கொண்டு வரப்படும் என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்கள்.

## 29—1—82

வேலையில்லாத பொறியியற் பட்டப் படிப்பாளர் மற்றும் 'டிப்ளமா' பட்டப் படிப்பாளர்களால் சென்னை நகரில் சோதனை முறையில் உருவாக்கப்பட்டுள்ள கட்டுமான கூட்டுறவுச் சங்கம் ஒன்றிற்குத் தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் தமிழக அரசு 40 ஆயிரம் ரூபாய்க்குப் பங்குதாரராக முதலீடு செய்யவும், இதைத் தவிர 3 இலட்சம் ரூபாய் கடனாக வழங்கவும் ஒப்புக் கொண்டுள்ளது. இதைத் தவிர தமிழ்நாடு தொழிலுதவிச் சட்டத்தின் கீழ் 11 உறுப்பினர்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் கடனாகவும் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒரு பங்குதாரர் சார்பில் 2 ஆயிரம் ரூபாய் அளிக்கவும் தமிழக அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

## 30—1—82

இந்த ஆண்டு திருச்சி, சேலம், பெரியார், திருநெல்வேலி, கன்னியா குமரி, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் உலக வங்கியின் உதவியுடன் விவசாய உற்பத்திப் பெருக்கத் திட்டத்தை விரிவுபடுத்தத் தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

## 31—1—82

ஜெயங்கொண்ட சோழபுரத்தில் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள விதைத்தறி இணையத்தைத்

திறந்து வைத்துப் பேசுகையில், தமிழ்நாட்டில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் துணி நூற்பாலைத் தொழில்களுக்கு ரூ31 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்கள்.

பெரியார் மாவட்டம் தாராபுரத்தில் 10 கோடி ரூபாய் செலவில் வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் குடியிருப்புகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அவ்வாரியத்தின் தலைவர் வேலூர் திரு நாராயணன் அவர்கள் அறிவித்தார்கள்.

## 2—2—82

வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஆண்டுக்கு 400 டன் சந்தனக் கட்டையைப் பயன்படுத்தி, 18 டன் சந்தன எண்ணெய் தயாரிக்கும் ஆலை ஒன்று நிறுவப்படும். இந்த ஆலையை நிறுவ 49 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவு ஆகும். இத்தொழிற்சாலையை அமைக்க இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவதாகவும், இதில் தயாரிக்கப்படும் சந்தன எண்ணெய்க்கு நல்ல விற்பனை வாய்ப்பிருந்தால், மேலும் சில இடங்களில் இத்தகைய தொழிற்சாலைகள் ஏற்படுத்துவது பற்றி பரிசீலிக்கலாம் என்றும் மாண்புமிகு செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்கள்.

முன்னாள் அமைச்சர் திரு கக்கன் அவர்களுக்குத் தமிழக அரசு வழங்கி வந்த உதவித்தொகை, அவரது மனைவியார் உயிரோடு இருக்கும் வரை அவருக்கும் தொடர்ந்து வழங்கப்படும் என்றும் திரு. கக்கன் குடும்பத்தினர் தற்போது வசித்து வரும் வீட்டில் அவரது மனைவியார் தொடர்ந்து இருக்கலாம் என்றும் மாண்புமிகு முதல்வர் திரு. எம் ஜி. ஆர் அவர்கள் அறிவித்தார்கள்.

## 3—2—82

சத்தியமங்கலம் தொகுதியைச் சேர்ந்த குமாரபாளையம் கிராமத்தில் விரைவில் பால் குளிரூட்டும் நிலையம் சுமார் 25 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும். இந்த நிலையம் நாள் ஒன்றுக்கு 30 ஆயிரம் லிட்டர் பாலைக் குளிர்ப்படுத்தும் திறனுடையது என்று மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள 20 ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கு வீடுகட்டுவதற்காக நிலத்தைக் கையகப்படுத்த 40 இலட்சம் ரூபாயை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்கள்.

## 5—2—82

சென்னையில் 80 இலட்சம் ரூபாய் செலவில் கடற்பொருட் காட்சியகம் அமைக்கத் தமிழக அரசு பரிசீலனை செய்து வருகிறது என்று மாண்புமிகு நிதியமைச்சர் திரு நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்தார்கள்.

தமிழகத்தில் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் இயங்கிவரும் 100 சிறிய தீப்பெட்டித் தயாரிப்பாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகத் தொழிற்கூட்டுறவுத் துறையின் கீழ் ஸ்பிளின்ட்' மற்றும் வெனீர்' தொழிற்சாலைகளை அமைக்கத் தமிழக அரசு தீர்மானித்துள்ளது என்று மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்கள்.

## புவனேஸ்வரில் பாரதி நூற்றாண்டு விழா

மகாகவி பாரதி நூற்றாண்டு விழா ஒரிஸா மாநில அரசின் சார்பில் புவனேஸ்வரில் மாண்புமிகு ஒரிஸா மாநில முதல்வர் திரு ஜே. பி. பட்நாயக் அவர்களால் 28-1-82 அன்று மாலை தொடங்கி வைக்கப் பெற்றது. விழாவைத் துவக்கி வைத்த முதல்வர் அவர்கள் பாரதி தமிழுக்காகவும், தேசிய விடுதலை இயக்கத்திற்காகவும் செய்த தொண்டுகளைக் குறிப்பிட்டார்கள். ஒரிஸா, தமிழகம் ஆகிய இரு மாநிலங்களுக்கிடையேயுள்ள கலாச்சாரத் தொடர்புகளையும் முதல்வர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். ஒரியாவில் மொழிபெயர்க்கப்பட்ட "சக்திக்கு" என்ற பாரதியின் பாடல் ஒன்று முதல்வர் அவர்களால் படிக்கப்பட்டது.

விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற மாண்புமிகு தமிழகக் கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள், முன்னறிவிப்பாளராகவும், புரட்சியாளராகவும், சீர்திருத்தக்காரராகவும் திகழ்ந்த மகாகவி பாரதியின் உயர் பண்புகளைப் பற்றிக் கூறி, பெண்கள், தாழ்த்தப்பட்டோர் உயர்விற்காகப் பாரதி கூறிய அறிவுரைகளை விளக்கக்கூடிய சில திட்டங்களையும் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது என்றும் கூறினார்கள்.

மாண்புமிகு ஒரிஸா மாநில விளையாட்டு, சுற்றுலா, கலாச்சார அமைச்சர் அவர்களும் பேராசிரியர் வெர்மா, விளையாட்டு, சுற்றுலா, கலாச்சாரத் துறை அரசுச் செயலாளர் ஆகியோரும் பாரதியின் இலக்கிய விடுதலைச் சேவைகளைப் பாராட்டிப் பேசினார்கள். தமிழ் ஒரியா மொழிகளில் பாரதியின் பாடல்களுடனும் ஒடிசி நடனத்துடனும் விழா இனிது முடிந்தது.

முன்னதாக, காலையில் பிறமாநில கலைப்பரிமாற்றத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு ஓவியம், நுண்கலைக் குழு ஏற்படுத்தியிருந்த தமிழ்நாட்டின் கலைகளை விளக்கிக்கூறும் கலைப்பொருட்காட்சியை மாண்புமிகு ஒரிஸா மாநில விளையாட்டு, சுற்றுலா, கலாச்சார அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். மாண்புமிகு தமிழகக் கல்வி அமைச்சர் அவர்கள் சிறப்பு விருந்தினராக இவ்விழாவில் கலந்து கொண்டார்கள்.



# ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலனுக்காக....

பொ. இல. பொன்னுசாமி, இ.ஆ.ப.
ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நல இயக்குநர்.

சென்னையிலுள்ள அரசு கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான விடுதிகளில் 1-12-77 முதல் ரூ. 65-ல் இருந்து ரூ. 80க்கு உயர்த்தப்பட்ட உணவுக்காக செலவிடப்படும் தொகை 1981—82-ம் ஆண்டிலிருந்து நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 95வீதம் மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. இதே போன்று மற்ற இடங்களில் உள்ள விடுதிகளில் 1-12-77 முதல் ரூ. 55-ல் இருந்து ரூ. 65க்கு உயர்த்தப்பட்ட உணவுக்காக செலவிடப்படும் தொகை 1981—82-ம் ஆண்டிலிருந்து நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 80 ஆக மேலும் உயர்த்தப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள அரசு தொழிற்பயிற்சி மாணவ, மாணவியர்களுக்கான விடுதிகளில் ரூ. 65-ல் இருந்து ரூ. 80/-க்கு 1979—80ல்உயர்த்தப்பட்ட உணவுக்காக செலவிடப்படும் தொகை 1981—82-ம் ஆண்டிலிருந்து நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 95/- வீதம் மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. இது போன்று மற்ற இடங்களில் உள்ள விடுதிகளில் ரூ. 55/-ல் இருந்து ரூ. 65/- ஆக 1979—80ல்உயர்த்தப்பட்ட உணவுக்காகச் செலவிடப்படும்தொகை 1981—82-ம் ஆண்டிலிருந்து நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 80/- ஆக மேலும் உயர்த்தப்பட்டுள்ளது.

உயர்நிலைப் பள்ளி மாணவ/மாணவியருக்கான விடுதிகளில் 1978—79-ம் ஆண்டு ரூ. 40/-ல் இருந்து ரூ. 45/- ஆக உயர்த்தப்பட்ட உணவுக்காகச் செலவிடப்படும்தொகை 1981—82-ம் ஆண்டிலிருந்து நபர் ஒன்றுக்குமாதம்ரூ.60/-ஆக மேலும் உயர்த்தப்பட்டுள்ளது.

புதியதாக 90 அரசு விடுதிகள் திறக்கப்பட்டுள்ளன.

ரூ. 20இலட்சம் செலவில் ஆதிதிராவிடர்மற்றும் பழங்குடியினருக்கான பள்ளிகளுக்கு 5 நல்ல கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. ரூ. 112இலட்சம் மதிப்பீட்டுசெலவில்கட்டப்பட்டு வரும் 32 பள்ளிக் கட்டடங்கள் பல நிலைகளில் கட்டுமானப்பணியில் முன்னேற்றம் அடைந்துள்ளது.

ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக்கழகத்தின் மூலம் ரூ. 291.32 இலட்சம் செலவில் அரசு விடுதிகளுக்கு51 நல்ல கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் ரூ. 408.90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 139 கட்டிடங்களுக்கானகட்டுமானப் பணிகள் பல நிலைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளன.

பள்ளி இறுதித் தேர்விலும், மேல்நிலைப் பள்ளி இறுதித்தேர்விலும் 60 விழுக்காடும் அதற்கு மேலும் மதிப்பெண்கள் பெறும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடிமக்கள் மாணவ, மாணவியருக்கு ரூ. 300 தனித்தகுதிமான்யமாக வழங்கப்படுகிறது.

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நலத் தொடக்கப் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்து வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்குஇப் பொழுது வழங்கப்படும் ஒரு ஜோடி சீருடையுடன் 1980—81-ல் இருந்து கூடுதலாக 1 ஜோடி சீருடை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் இத்துறையில் நடத்தப்படும் நடுநிலைப்பள்ளிகளில் 6 முதல் 8 வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர்மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு இதுவரைசீருடை வழங்கப்படாமல் இருந்த நிலையில் அவர்களுக்கு 1980—81-ல்இருந்துஇரண்டு ஜோடி சீருடைகள் வழங்க ஆணையிடப்பட்டு தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகளில் 10-ம் வகுப்பு வரை பயிலும் எல்லா மாணவியருக்கும், விடுதிகளில் தங்கிப் பயிலும் எல்லா மாணவியருக்கும், அவர்கள் சாதியைப் பாராமல், இரண்டுஜோடி சீருடைகள் வழங்கப்படுகிறது. மேலும் 1 முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவருக்கும் அரசு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும் இரண்டுஜோடி சீருடைகள் வழங்கப்படுகின்றன. இந்த இரண்டு ஜோடி சீருடைகளும் வருட ஆரம்பத்திலேயே வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

3ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாகவும் 4 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும் 7 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளி

களாகவும் உயர்த்தப் பட்டுள்ளன.



296 இளநிலை ஆசிரியர் பதவிகளைஇடைநிலை ஆசிரியர் பதவிகளாக உயர்த்தியும் (1977—78-ம் ஆண்டில் 113-ம், 1978—79ம் ஆண்டில் 183-ம் ஆக 296) 33 தமிழ் பண்டிதர்கள் பதவிகள் 33 நடுநிலைப் பள்ளிகளில் ஏற்படுத்தியும் 1979—80-ம் ஆண்டில் ஏற் படுத்தியும் ஆணையிடப் பட்டுள்ளது. 1981-82-ல் மேலும் 172 இளநிலை ஆசிரியர்பதவிகளை இடைநிலை ஆசிரியர்கள் பதவிகளாக உயர்த்த ஆணை யிடப்பட்டுள்ளது.

அரசு உதவித் தொகை பெற்று சென்னை நகரம் மற்றும் மாவட்ட, வட்ட தலைநகரங்களில் நடத்தப்படும் தனியரர் மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர் ஒவ்வொருவருக்கும் 1—12—78 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ. 25-ல் இருந்து ரூ. 35 ஆக உயர்த்தப்பட்டிருந்த உதவித் தொகையினை மாதம் ஒன்றுக்கு ரூ. 45 ஆக 1981—82-ம் ஆண்டில் மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. மற்ற இடங்களில் உள்ளவைகளுக்கு 1-12-78 முதல் ரூ. 25-ல் இருந்து ரூ. 30ஆக உயர்த்தப்பட்டிருந்ததை மாதம் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ரூ. 40 ஆக 1981—82-ல் மேலும் உயர்த்தப்பட்டுள்ளது.

மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு பயிலும் அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கும் அவர்கள் தம் பெற்றோர் ஆண்டு வருமானத்தை பாராமல் 4-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை இலவசமாக புத்தகங்கள் வழங்குவதுடன், சிறப்புக் கட்டணத்தை பள்ளிகளுக்கும் தேர்வு கட்டணத்தை அரசு தேர்வு இயக்குனருக்கும் நேரடியாக செலுத்தப்படுகிறது. 1 முதல் 3-ம் வகுப்பு மாணவர்களுக்கு கல்வித் துறையில் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு 7.79 லட்சம் மாணவர்கள் இத்திட்டத்தினால் பயன் அடைந்தனர். 1977—78-ல் இருந்து இதற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ. 3000/- என இருந்தது நீக்கப்பட்டுள்ளது. 1977—78-க்கு முன் மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு பயிலும் மாணவர்களுக்கு அவர்கள் வீட்டிலிருந்து படித்தால் அப்பொழுதுள்ள ரூ.3000/- என்ற ஆண்டு வருமான வரம்புக்குட்பட்டு கல்வித் தொகையைப் பணமாக அளிக்கப்பட்டது. 6-ம் வகுப்பிலிருந்து 10-ம் வகுப்பு வரை பள்ளியைச் சேர்ந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு உண்டி மற்றும் உறையுள் தொகைரூ.150/- முதல் ரூ. 250/- வரை அளிக்கப்பட்டது. 1981—82-ம் ஆண்டிலிருந்து மேற்படி மாணவர்களுக்கான ஆண்டு வருமான வரம்பு ரூ. 3000-ல் இருந்து ரூ: 6000 ஆக உயர்த்தப் பட்டதுடன் உண்டி, உறையுள் தொகையும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 250 முதல் ரூ. 350 வரை ஆக உயர்த் தப்பட்டது.

1976—77-ல் கடன் உபகாரச் சம்பளமாக வழங்கப்பட்ட தொகை ரூ. 11—21 இலட்சம் மட்டுமே. 1980—81-ல் இத் தொகை ரூ. 58.91 இலட்சமாக உயர்ந்துள்ளது. 1977—78 முதல் 1980—81 வரை 18186 மாணவ மாணவியர்களுக்கு கடன் உபகாரச் சம்பளமாக ரூ. 148 இலட்சம் வழங்கப் பட்டது.

சட்ட பட்டதாரிகள் தங்கள் தொழிலை தொடங்குவதற்கு உதவியாகவும், புத்தகங்கள், மேஜை, நாற்காலிகள் முதலியவை வாங்குவதற்கும் மான்யமாக ரூ. 500-ம் பதிவுக் கட்டணம் மற்றும் அறைவாடகைபோன்றவைகளுக்கு ரூ. 750 கடனாகவும் வழங்கப்பட்டு வந்தது. 1980—81 முதல் மேற்படி மான்யத் தொகை ரூ. 500-ல் இருந்து ரூ. 750 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 45 வீதம் வழங்கப்பட்ட உதவித் தொகை 1—8—80 முதல் ரூ. 55 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்துறையால் நடத்தப்படும் முன்னோடிப் பயிற்சிநிலையத்தில்பயின்று அனைத்திந்திய பணிக்கான தேர்வில் வெற்றி பெறும் நபர்களுக்கு அவர்களை பாராட்டும் நோக்குடன் முசொரி (அ) மற்ற இடங்களில் மேற்படி நபர்கள் பயிற்சிக்கான செலவுக்காக ரூ. 1,000 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டைச் சார்ந்த முன்னோடிப் பயிற்சிநிலையத்தில் பயிற்சியின்றியே அனைத்திந்திய பணிக்கான தேர்வில் வெற்றி பெறும் 'ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும் இஃது அளிக்கப்படும். இத்தொகையை பெறுபவர்களுக்கு ஆண்டு வருமான வரம்பு ஏதும் இல்லை.

வருமான வரம்பின்றி கல்லூரி படிப்புக் கட்டணசலுகை1977—78ம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. மேலும் மெட்ரிக் படிப்புக்கு மேல் கல்வி பயிலும் இந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு மத்திய அரசு உபகாரச்சம்பளமும் மத்திய உபகார சம்பளத்துக்கு தகுதியற்ற இந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கும் ஆதிதிராவிடர் கிருத்துவ மாணவர்களுக்கும் மாநில அரசு உபகாரச் சம்பளமும் வழங்கப்படுகிறது. மத்திய அரசு உபகாரச் சம்பளம் பெற இருந்த பெற்றோர் (அ) பாதுகாவலர் ஆண்டு வருமான வரம்பு 1—7—81 முதல் ரூ. 9,000-ல் இருந்து ரூ. 12,000 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. மாநில அரசு உபகாரச் சம்பளத்திற்கானபெற்றோர்பாதுகாவலரின் ஆண்டு வருமானம் 1981—82 கல்வியாண்டிலிருந்து ரூ. 3000-ல் இருந்து ரூ. 6,000 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. தவிர மத்திய அரசு உபகாரச்சம்பள திட்டத்தின் கீழ் வழங்கப் படும் பராமரிப்புத்தொகை 1-7-81 முதல் மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒன்றுக்கு ரூ. 5 முதல் 60 வரை உயர்த்தப்பட்டுள்ளது.

அறிவுகூர்மையுள்ள மாணவர்களுக்கு வழங்கப் படும் சிறப்பு கல்வி உதவித் தொகை அளிக்கும்திட்டம் ஆதிதிராவிடர்களுக்கும் இருத்துவ மதம் மாறிய

ஆதிதிராவிடர் மாணவர்களுக்கும் மட்டும் இருந்தது. இது பழங்குடியினர் இனத்தைசார்ந்த மாணவ, மாணவிகளுக்கும் ஆதிதிராவிடர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவிகளுக்கும் நீட்டிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து அதிக மதிப்பெண்களும் அதற்கு அடுத்த மதிப்பெண்களும் பெற்ற இந்து ஆதி திராவிடர் மாணவர் இருவர் மாணவியர் இருவர், மதம் மாறிய ஆதிதிராவிட கிருத்துவமாணவர்இருவர், மாணவியர் இருவர்மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மாணவர் இருவர், மாணவியர் இருவர் ஆகியோருக்கு இந்த உதவித் தொகை அளிக்கப்படும். இந்த உதவித் தொகை பெறுவதற்கு வருமான வரம்பு இல்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆதி திராவிடர் இந்து மாணவர் ஒருவர் மற்றும் மாணவியர் ஒருவர் ஆக இருவருக்கு காந்தி நினைவு சிறப்பு உதவித் தொகையும், இதேபோன்று ஆதிதிராவிட கிருத்துவ மாணவ, மாணவியர் இருவருக்கும் பழங்குடி மாணவ, மாணவியர் இருவருக்கும் தகுதி வழி உதவித் தொகையும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இவ்வுதவித் தொகை பெறுவதற்கும் வருமான வரம்பு இல்லை.

1977—78-ம் ஆண்டிலிருந்து கறவை மாடுகள் வாங்குவதற்கு ஆதி திராவிடர் பால் வழங்கு கூட்டுறவுசங்கத்தைசார்ந்த உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட உதவித் தொகை ரூ. 500-லிருந்து ரூ. 1,500 ஆக மாற்றப்பட்டுள்ளது. இஃது ரூ. 500 மான்யமாகவும் ரூ. 1000 ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து கடனாகவும் வழங்கப்படும்.

வட்டி இல்லாக் கடன் வழங்கு திட்டத்தின் கீழ் மோட்டார் பொருந்திய சைக்கிள் ரிக்ஷா வாங்கவும், பெட்ரோல் வியாபாரம் செய்யவும் கடனுதவி வழங்கப்பட்டது. திப்பெட்டி கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்கவும் கடனுதவி வழங்கப்பட்டது. பழங்குடியினரும் இத்திட்டத்தின்கீழ் பயனை அடைய லாம்.

ஆதி திராவிடர்களுக்கு உகந்த பொருளாதார திட்டங்களை செயல்படுத்த ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தில் ஒரு தனிப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ்மாநில-மத்திய அரசுகள் 51:49 என்ற விகிதத்தில் மூலதன பங்குத் தொகை அளிக்கும். 1980—81-ல் மேற்படி விகிதாசாரத்தில் ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்துக்கு ரூ. 2 கோடி மூலதனபங்குத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை ரூ. 9.26 கோடி செலவில் 3.78இலட்சம் வீட்டுமனைகள் வழங்க 23,690,88 ஏக்கர் நிலப் பரப்பு கையகப்படுத்தப்பட்டுள்ளது. 1980—81-ம் ஆண்டு மட்டும் ரூ. 140.58 இலட்சம் செலவில் 1853.47 ஏக்கர் நிலப்பரப்பு 31,302 மனைகள் வழங்க கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்திற்கென செலவிடப்பட்ட தொகைகளில் 1980—81-ல் செலவிடப்பட்ட ரூ. 140 58 இலட்சம்தான் மிக அதிகமானதாகும். முந்தைய ஆண்டுகளில் 1949-ல் இருந்து 1976—77 வரை ஆண்டு செலவு ரூ. 50 இலட்சத்தைத் தாண்டியதில்லை.

ஆதி திராவிடர்களுக்குத் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வீடுகள் கட்டி இலவசமாக அளிக்கப்படுகின்றன. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அதிகப்படியான வீடுகளை ஆதி திராவிட மக்களுக்கு கட்டித்தர அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது. அதன்படி ஒவ்வொரு வீடும் 207 சதுர அடி பரப்பளவு கொண்டதாக இருக்கும். ஒவ்வொருவீடும் ரூ. 4400 மதிப்பீட்டில் கட்டிடப் பொருள்கள் விலை ஏற்றத்தால் 15% கூடுதல் செலவுடனும் மலைப் பகுதிகளில் 50% அதிக செலவுடனும் 1979-80 மற்றும் 1980—81-ம் ஆண்டிற்கான வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றுக்கு 5000 வீடுகள் வீதம் மொத்தம் 10,000 வீடுகள் கட்ட அரசு உத்தரவிட்டுள்ளது. (இதில் 10% நிர்வாகச் சிலவும் அடங்கும்) 1980—81-ம் ஆண்டில் இதற்காக ரூ. 2.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1981—82-ம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.2. கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகராட்சியில் வேலைசெய்யும் துப்புறவுப் பணியாளர்கள் நகராட்சிக்குச் சொந்தமானவீடுகளில் குடியிருந்தால் அவர்கள் வேலையில் இருக்கும்வரை வாடகை தரவேண்டியதில்லை என அரசு ஆணையிட்டுள்ளது.

தீண்டாமை ஒழிப்புக்காக வேலை செய்த சமூக நல ஊழியர்களின் சேவையை பாராட்டி 176 சமூக நல ஊழியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

குடி தண்ணீர் கிணறு தோண்ட 1977—78-ல் ரூ. 5000-ல் இருந்து, ரூ. 6000/- ஆக உயர்த்தி அனுமதிக்கப்பட்ட அளவு உச்சவரம்பு 1980—81-ல் ரூ.6000-ல் இருந்து ரூ. 7,500 ஆக மேலும் உயர்த்தப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவசமாகத் தொழிற் கருவிகள் வழங்கும்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தொழிலுக்கும் தொழிற் கருவிகளும் சாதனங்களும் வாங்குவதற்கென நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்புத் தொகையைப் பாராமல் தொழிற்கருவிளும், சாதனங்களும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்ட மதம் மாறிய கிருத்துவர்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுவழங்க ஆதிதிராவிட பழங்குடியினர் நல இயக்குநருக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டத்





திலும், சலவைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆதிதிராவிடர்களுக்கு சலவைத்துறைகள் கட்டப்படுகின்றன.

ஏழை ஆதிதிராவிடர் குடும்பத்தில் யாரேனும் இறந்துவிட்டால் அவர்களது ஈமக்கடனை செய்ய ரூ. 50 நிதி உதவி அளிக்கும் புதிய திட்டம் 1978—79-ம்ஆண்டு கொணரப்பட்டு செயல்படுத்தப் பட்டு வருகிறது.

கொத்தடிமையில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன. இதுவரையில் தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களில் 2,929 கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 2,617 நபர்களுக்கு நிலம் வழங்குதல், வேலை வாய்ப்பு அளித்தல், பயன்பாட்டுக்கடன் அளித்தல், வேளாண்மைக்கடன்அளித்தல், கோழிப் பண்ணை வைத்தல், கறவைமாடுகள் வழங்குதல்போன்றதிட்டங்களின் மூலம் மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. மற்றவர்களுக்குத் தகுந்த மறுவாழ்வுதிட்டங்களைசெயல் படுத்துவது அரசின் பரிசிலனையில் உள்ளது.

குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தினை தீவிரமாக செயல் படுத்த ஏற்கனவே உள்ள 6 சுற்றுக் காவல் படைகள் தவிர மேலும் 7 சுற்றுக் காவல்படைகள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டு செயல்படுகின்றன. திருச்சி, மதுரை, திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் (கும்பகோணம்) ஆகிய இடங்களில் 1955-ம் ஆண்டு குடிமை உரிமை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வரும் குற்றங்களை விசாரணை செய்ய ஒரு தனி நீதிமன்றம் நிறுவ அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

குடிமை உரிமை பாதுகாப்புச் சட்டத்தை அமுல்படுத்துவதற்காக மண்டல காவல் துறை அதிகாரி ஒருவரை நியமிக்க அரசுஅனுமதிவழங்கியுள்ளது.

கலப்புமணம் புரிந்து கொண்ட தம்பதியர்களுக்கு, வழங்கப்படும் சலுகையை பன்மடங்கு அதிகரித்து ஆணையிடப்பட்டுள்ளது. ரூ. 4000 அவர்கள்பெயரில் வைப்புத் தொகையாகத்தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் போடப்படுவதுடன் ரொக்கமாக ரூ. 300-ம் தங்கப்பதக்கமும்,பாராட்டு பத்திரமும் வழங்கப்படுகிறது.

ஆதிதிராவிட நலத் துறை மூலம் 150 குழந்தைகள் காப்பகங்கள் திறக்கப்பட்டு செவ்வனேசெயல்படுத்தப்பட்டுவருகின்றன. 1980—81-ம் ஆண்டு 50 குழந்தைகள் காப்பகங்கள் திறக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சிக்கென சேலம், தென்னாற்காடு, வட ஆற்காடு, தர்மபுரி மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் 9 பகுதிகளில் துணை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1977—78-ம் ஆண்டு 144 இலட்சம் ரூபாயும் 1978—79-ம் ஆண்டு 168.84 இலட்சம் ரூபாயும் 1979—80-ம் ஆண்டு 191.90 இலட்சம் ரூபாயும் 1980—81-ம் ஆண்டு 267.52 இலட்சம் ரூபாயும் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ்செலவிடப்பட்டுள்ளன. தோட்டக்கலை, மண்பாதுகாப்பு, கால்நடை பராமரிப்பு, வனம், கூட்டுறவு, சிறு பாசனம்,கல்வி,மருத்துவம், கதர் மற்றும் கிராமக்கைத் தொழில், பட்டுப்பூச்சி வளர்த்தல், மின்வயப் படுத்துதல், சாலை அமைத்தல், குடிநீர் வசதி அமைத்துக் கொடுத்தல் முதலிய திட்டங்கள் இதில் சேரும்.

தன்னிறைவுத் திட்டத்தை செயல்படுத்திட 80—81-ல் முதன் முதலாக 69 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இத்திட்டம் 16—7—80 முதல் மேலும் 100 வட்டாரங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஆதி திராவிட குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதிஅளித்தல்,குடியிருப்பு மற்றும்இடுகாட்டிற்கு பாதை அமைத்தல்,பள்ளிக்கட்டிடம் கட்டுதல்ஆகியவேலைகள்செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 80—81-ம் ஆண்டு ரூ. 66.23 இலட்சம்செலவிடப்பட்டது. நடப்பு ஆண்டில் இதற்காக ரூ. 75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய அரசு கொடுத்துள்ள வழிகாட்டி குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு, ஆதி திராவிடர் மக்களுக்காக இவ்வரசு சிறப்புக் கூட்டமைப்புத் திட்டம் (Special Component Plan) தயாரித்துள்ளது.இதன்படி பல்வேறு வளர்ச்சித் தலைப்புகளின் கீழ் பொதுத் துறையில் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஒதுக்கீட்டில் சுமார் 17.8 விழுக்காடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்குக் கிட்ட வேண்டும். 1981—82-ல் ஆதி திராவிடர்கள் நலனுக்காக செலவிட ரூ. 83.04 கோடிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆண்டு ஒன்றுக்கு 1.8 இலட்சங்கள் வீதம் 9 இலட்சம் ஆதிதிராவிடர்கள் வறுமைக் கோட்டினைத் தாண்ட 1980—85 ஆகிய 5 வருடங்களில் ரூ.535கோடிகளைசெலவிட வேண்டும் என்பது சிறப்புக் கூட்டமைப்புத்திட்டத்தின் நோக்கம். 1980—81-ம் மத்திய அரசு தமிழ்நாடு அரசுக்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 9.56 கோடிகள் அளித்துள்ளது. 1981—82-ல் ஆதிதிராவிடர்கள் பொருளாதார முன்னேற்றத் திட்டத்திற்காக ரூ. 4.64 கோடிகள் மத்திய அரசின் சிறப்பு உதவித் தொகையாக அளித்துள்ளது.





# தாகம் தீர்க்கும் பணியில்

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாட்டில் உள்ள மாநக ராட்சிகள், நகராட்சிகள், பேரூ ராட்சிகள் மற்றும் ஊராட்சி களுக்கான புதிய குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களை ஆய்வு செய்யவும், திட்டமிட்டு செயல் படுத்துவதற்கும், 1971ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் தேதி ''தமிழ் நாடு குடிநீர் மற்றும் வடி கால் வாரியம்'' தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்டது. பொது சுகாதாரப் பொறியியல் துறை நிறைவேற்றி வந்த குடிநீர் மற் றும் வடிகால் திட்டங்களையும் இந்த வாரியம் செயல்படுத்தி வருகிறது.

கிராம மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்திடும் வகையில் 1971ம் ஆண்டிலிருந்து கிராமப்புறக் குடிநீர்த் திட்டங் களைச் செயல்படுத்தி வருகிறது.

1976ம் ஆண்டு தமிழ் நாட் டில் உள்ள எல்லா குடியிருப்பு களையும் பஞ்சாயத்து ஒன்றிய அலுவலர்கள் பார்வையிட்டு, குடிநீர் இல்லாத, பற்றாக்குறை கிராமங்கள், குடிநீர் வசதி 1 கிலோ மீட்டர் வரை இல்லாத கிராமங்கள், குடிநீர் உள்ள கிரா மங்கள் கணக்கிடப்பட்டன. தமிழ் நாட்டில் 17969 கிராமங் கள் குடிநீர் இல்லாத ,பற்றாக் குறை குடியிருப்புகள் இருக்கின் றன. 29106 குடியிருப்புக்களில், குடிநீர் வசதி இருக்கின்றது.

1977-78ம் ஆண்டு முதல் 17969 குடிநீர் இல்லாத, பற் றாக்குறை கிராமங்களுக்குக் குடி நீர் அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுவருகின்றன.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசால் முதற் கட்டமாகத்தேர்வுசெய்யப்பட்ட 69 ஊராட்சி ஒன்றியங்கள் அடங் கிய 2208 குடியிருப்புகளுக்கு 1981 நவம்பர் வரை, 1,765 குடி யிருப்புகளுக்குப் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கப்பட்டுவிட் டது. தன்னிறைவுத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாகத் தேர்வு செய்யப்பட்ட 150 ஒன்றியங் களில் அடங்கியுள்ள 4,076 குடி யிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ரூ. 3,000 இலட்சம் செலவிடப்பட்டு இது வரை 992குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங் கப்பட்டுவிட்டது. மார்ச் 1982க் குள் 1,018 சிற்றூர்களுக்குப் பாது காக்கப்பட்ட குடிநீர் வழங்கிடும் திட்டப்பணிகள் விரைவுபடுத்தப் பட்டுள்ளன. எஞ்சியுள்ள 2,076 குடியிருப்புகளுக்கு 1982ம்ஆண்டு இறுதிக்குள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுவிடும். தன் னிறைவுத் திட்டத்தின் மூன்றா வது கட்ட பணியாக ,157 பஞ்சா யத்து ஒன்றியங்களில் குடிநீர் வழங்கத்திட்டமிட்டு செயல்படுத் தப்படும்.

1981-82ம் ஆண்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ. 800.00 இலட்சம் செலவில் 6,208 இடங்களில் ஆழ்துளை கிணறுகள் ஏற்படுத்தி கையிரைப் பான்கள் பொறுத்தப்பட்டு பாது காக்கப்பட்ட குடிநீர் வழங்கப் பட்டு வருகிறது.

| ஆண்டு | பயனடையும் கிராமக் குடியிருப்புகள் எண்ணிக்கை | செலவினம் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1971-72 | 2 | 2.15 |
| 1972-73 | 220 | 159.72 |
| 1973-74 | 737 | 156.72 |
| 1974-75 | 2649 | 505.62 |
| 1975-76 | 4037 | 503.75 |
| 1976-77 | 8472 | 888.00 |
| | | 2224.96 |
| 1977-78 | 1140 | 715.00 |
| 1978-79 | 1404 | 860.50 |
| 1979-80 | 843 | 1022.31 |
| 1980-81 | 2300 | 1807.00 |
| 1981-82 | 3658 | 3291.00 |
| | 6208(5) | 800.00 |
| | 15553 | 9495.81 |

# தொலைபேசிக்கு வயது 100!






**1882** ஜனவரி 28ம் தேதி சென்னையில் தொலைபேசி முதன் முதலாக ஒலித்தது! அப்பொழுது அந்த நிறுவனத்தின் பெயர் 'ஓரியண்டல் டெலிபோன் அண்ட் எலக்ட்ரிக் கம்பெனி, இரண்டு டஜன் பேர்களுக்கு அது சேவை புரிந்தது.

ஆரம்பத்தில் சென்னைவாசிகளிடம் அதைப் பிரபலப்படுத்துவது மிகச் சிரமமாக இருந்தது. இந்தப் புதிய கருவியைவிட சைக்கிளில் ஆட்கள் மூலம் தகவல் அனுப்புவதையே அவர்கள் விரும்பினார்கள். வக்கீல்களுக்கும், சுதேசி வியாபாரிகளுக்கும், கனவான்களுக்கும் விசேஷக் கட்டண விகிதங்கள் அளிக்கப்படும் என்று சலுகை காட்டி 1900 ஜனவரி 12ம் தேதி பத்திரிகையில் விளம்பரமும் செய்யப்பட்டது. இவ்வாறு துவக்கத்தில் மக்களை 'டெலிபோன் கம்பெனி' கவர வேண்டியதாயிற்று, 1923ஆம் ஆண்டுக்குள் தொலைபேசி மக்களை ஈர்த்தது. 1515 வாடிக்கையாளர்களைப் பெற்றது.

1923ல் இலண்டனிலிருந்து நிர்வகிக்கப்பட்ட ஓரியண்டல் அண்ட் எலக்ட்ரிக் கம்பெனிக்குப் பதிலாக மதராஸ் டெலிபோன் கம்பெனி நிறுவப்பட்டது. அது நவீனமாக்கும் திட்டத்தை மேற்கொண்டது. முதல் தடவையாக ''மீட்டர்'' முறை அமலுக்குக் கொண்டு வரப்பட்டது. இது வாடிக்கையாளரிடம் சிக்கனப் பழக்கத்தை ஏற்படுத்தியது. தான் இல்லாதபோது வேறு யாரும் பயன்படுத்தாதிருக்க ஒருவர் தொலைபேசிக் கருவியைத் தான் வெளியே சென்ற போது கோட்டில் 'போட்டுக் கொண்டு சென்ற சம்பவமும் நிகழ்ந்திருக்கிறது!




1925ல் மிக மலிவு விலையில் சைனா பஜாரில் 21,000 சதுர அடி நிலத்தைக் கம்பெனிக்கு அரசு விற்றது. விரைவில் கம்பெனி ஓர் அழகிய கட்டடத்தைக் கட்டியது. அது ''டெலிபோன் ஹௌஸ்'' என்ற பெயரில் இன்றும் இருக்கிறது. இங்கு 1926 ஏப்ரலில் முதல் தானியங்கி 'டெலிபோன்' எக்ஸ்சேஞ்சு ஏற்படுத்தப்பட்டது.

1943ல் டெலிபோன் கம்பெனி அரசுடைமையாக்கப்பட்டது. இந்திய அஞ்சல் தந்தித் துறையின் பிரிவான சென்னைத் தொலைப் பேசி மாவட்டம் ஏற்பட்டது. அப்பொழுது மத்திய, மவுண்ட் ரோடு, மாம்பலம் ஆகிய மூன்று எக்ஸ்சேஞ்சுகளே இருந்தன. 3200 தொலைபேசிகள் இயங்கின. 1946ல் டிரங்க் எக்ஸ்சேஞ்ச் ஏற்கப்பட்டது. 1947ல் 1500 லைன்கள் கொண்ட புதிய மவுண்ட் ஆட்டோ எக்ஸ்சேஞ்சு அமைக்கப்பட்டது.




சுதந்திரத்திற்குப் பிறகு சென்னைத் தொலைபேசித் துறை வேகமாக விரிவாக்கமும் நவீனமாக்கலும் கண்டது. 1955ல் மைலாப்பூரிலும் கீழ்ப்பாக்கத்திலும் தலா 700 லைன் கொண்ட தானியங்கி எக்ஸ்சேஞ்சுகள் செயல்பட்டன. 1959ல் மைலாப்பூர் எக்சேஞ்ச் 2000 லைன்களாக விரிவாக்கப்பட்டது. 1961இல் குரோம்பேட்டையில் 300 லைன் எக்ஸ்சேஞ்ச் ஏற்பட்டது. 1963, 1964, 1965ல் முறையே கல்மண்டபம், செங்குன்றம், பூந்தமல்லி, அம்பத்தூர் ஆகியவற்றில் ஆட்டோ எக்ஸ்சேஞ்சுகள் அமைக்கப்பட்டன. 1965ல் மத்திய மேற்கு எக்ஸ்சேஞ்சும், பிறகு தாம்பரம், மாதவரத்திலும் எக்ஸ்சேஞ்சுகள் நிறுவப்பட்டன.

1967ல் 5000 லைன் கொண்ட மாம்பலத்தில் கிராஸ்பார் எக்ஸ்சேஞ்சு அமைக்கப்பட்டது. துவக்கத்தில் இந்தப் புதிய முறை தொல்லை கொடுத்தது. ஆனால் இடர்ப்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, களையப்பட்டன. சென்னை டெலிபோன் துறையில் இது சிறந்ததாக விளங்கியது. 1974ல் ஆவடி, அடையாறு, கோடம்பாக்கம், கெல்லிஸ் ஆகிய இடங்களில் நான்கு கிராஸ்பார் எக்ஸ்சேஞ்சுகள் அமைக்கப்பட்டன. 1976ல் புதிய அண்ணா சாலை எக்ஸ்சேஞ்சு ஏற்பட்டது.

டிரங்க் சர்வீசிலும் வளர்ச்சி காணப்பட்டது. 1966ல் சென்னை பெங்களூர் இடையே சந்தாதாரர் டிரங் டயலிங் முறை அமலாக்கப்பட்டது. 1980ல் பிரிட்டனுக்குச் சந்தாதார் டிரங் டயலிங் முறை கொண்டு வரப்பட்டது. 1963ல் டெலக்ஸ் என்ற புதிய முறை அமலுக்கு வந்தது.

இவ்வாறு எளிய ஆரம்பத்திலிருந்து நூறாண்டுக் காலத்தில் சென்னைத் தொலைபேசித் துறை 82,280 தொலைபேசிகளுக்குத் தொண்டு செய்யும் 19 எக்ஸ்சேஞ்சுகள் கொண்ட மாபெரும் அமைப்பாக வளர்ந்துள்ளது. 272 இடங்களுக்குச் சந்தாதார் டயலிங் வசதியையும் அளிக்கிறது.

எதிர் காலம் இன்னும் பரப்பான வாய்ப்புகளை அளிக்கும் நிலையில் தொலைபேசித் துறை உள்ளது. எலக்ட்ரானிக், டிஜிடல் முறை விரைவில் வரவிருக்கிறது. நுங்கம்பாக்கத்தில் 10,000 லைன்கள் கொண்ட எலக்ட்ரானிக் எக்ஸ்சேஞ்சு அமைக்கப்படும். அதில் நவீன கம்ப்யூட்டர் முறையும், நுட்ப எலக்ட்ரானிக் தொழிலும் புரட்சிகரமான பங்குவகிக்கும்.

கே. ஆ. ராமநாதன், பொது மேலாளர், சென்னைத் தொலைபேசித் துறை



# 33-வது குடியரசுத் திருநாளில் 33 கலைஞர்களுக்கு விருது

ஜனவரித் திங்கள் 26ஆம் நாள்!

33வது குடியரசுத் திருநாள்! அன்றைய தினம் 33 கலைஞர்களுக்குக் 'கலைமாமணி' விருது வழங்கும் விழாவும் மிகச் சிறப்பாக நடந்தது.

சென்னைக் கலைவாணர் அரங்கில், அன்று காலை நடந்த விழாவில், மண்டபமே நிரம்பி வழிந்தது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் ஆண்டுதோறும் பல்துறைக் கலைஞர்களுக்குக் 'கலைமாமணி விருது வழங்கிச் சிறப்பிக்கப்படுகின்றது. இவ்வாண்டு (1981-82) பல்வேறு துறைகளைச் சேர்ந்த 33 கலைஞர்கள் விருது பெற்றார்கள்.

மாயூரம் சகோதரர்கள் திரு எஸ்.ஆர்.ஜி.எஸ். வசந்தகுமார், திரு எஸ். ஆர் ஜி.எஸ். மோகன் தாஸ் ஆகியோரின் நாதசுர நிகழ்ச்சியுடன் விழா தொடங்கியது.

## சொந்தக்கட்டடம்

மன்றத் தலைவரும், சென்னை உயர்நீதி மன்றத் தற்காலிகத் தலைமை நீதிபதியுமான மாண்புமிகு பு.ரா. கோகுல கிருஷ்ணன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அவர் பேசுகையில்,

''ஆண்டுதோறும் இயல் இசை நாடக மன்றம் சிறந்த கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது அளித்து வருகிறது. அகில இந்தியாவில் இந்த மன்றம் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ளது. 25 ஆண்டுகளுக்கும் மேலாக அரசின் ஆதரவோடும், பொது மக்களின் ஆர்வத்தோடும், கலைஞர்களின் ஒத்துழைப்போடும் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. கலை ஒன்றுதான், கவலையில் வாடும் மக்களுக்குப் புத்துணர்ச்சி அளிக்கிறது.

''வளர்ந்து வரும் கலைகளை, வருங்காலச் சந்ததிகளுக்குத் தெரிவிக்க இந்த மன்றத்துக்கென தனியாக ஒரு கட்டடம் தேவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.''

## 538 கலைஞர்களுக்கு

மன்றச் செயலாளர் திரு டி.வி. நாராயணசாமி அவர்கள் ஆண்டறிக்கை படித்தார். அப்போது அவர், ''கலைமாமணி விருது பெற்று வறுமையில் உள்ள கலைஞர்களுக்கு ஆயிரம் ரூபாய்பொற்கிழி வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரையில் 71 கலைஞர்களுக்குப் பொற்கிழி வழங்கப்பட்டுள்ளது. நலிவுற்ற கலைஞர்கள் இறந்துவிடும்போது அவர்களது ஈமச்சடங்கு செலவுகளுக்காக 200 ரூபாய் மானிய உதவி மன்றத்தின் சார்பில் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரையில் 538 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது வழங்கப்பட்டுள்ளது'' என்று குறிப்பிட்டார்.

## தமிழ்நாட்டு மக்கள்

விழாவுக்குத் தலைமை வகித்த மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். சாதிக் அலி அவர்கள் பல்வேறு துறைகளைச் சேர்ந்த கலைஞர்களுக்கு பொற்பதக்கம் வழங்கிப் பேசினார் அவர் பேசுகையில் குறிப்பிட்டார்;

நிகழ்ச்சித் தொகுப்பு :
**பி. வி. கிரி**



''தமிழ்நாட்டில் கலை வளர்ச்சிக்குக் கல்விக் கூடங்கள் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றன. கலைஞர்கள்பலமாநிலங்களுக்குப் பயணம் செய்து நமது மாநிலக் கலையை, அம்மாநில மக்களுக்கு அறிமுகம் செய்வதோடு, அங்குள்ள கலைகளை அறிந்து வர வேண்டும்.

''நமது நாட்டிற்கு உள்ள நீண்ட நெடிய கலாச்சாரப்பாரம்பரியத்தை மேலும் பேணிப் பாதுகாக்க வேண்டும். தமிழ் நாட்டு மக்கள் கலை ஆர்வம் உள்ளவர்களாக உள்ளனர். நல்ல தரமான கலைகளை வளர்ப்பதில் அவர்கள் அக்கறை காட்டுவது பாராட்டுக்குரியது''.

'கலைமாமணி' விருது பெற வந்த கலைஞர்களுக்கு மேதகு ஆளுநர் அவர்கள் பொற்பதக்கம் வழங்க, மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் விருது அளிக்க, மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் சால்வை அணிவிக்க, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

**நூறு கலைஞர்களுக்கு ஒய்வு ஊதியம் !**

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மறைந்த கலைமேதைகள் 14 பேர்களின் திருவுருவப்படங்களைத் திறந்து வைத்துப் பேசும்போது குறிப்பிட்டதாவது:

''இந்தியாவில் உள்ள 22 மாநிலங்களில், கலை உள்ளம் கொண்ட மக்கள் இருப்பது தமிழகம்தான்: வழிவழியாக அழியாத தன்மையோடு கலை இங்கு வளர்ந்து வருகிறது.



''கலைஞர்களைப் பாராட்டித் தங்கப் பதக்கங்களைத் தொடர்ந்து வழங்கி வருகிறோம். வறுமையில் வாடும் கலைஞர்





களுக்கான ஒய்வு ஊதியத்தொகை 50, 75 ரூபாய் என்று முன்பு வழங்கப்பட்டு வந்தது: தற்போது 150 ரூபாயாக ஆக்கப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 21 இலட்சம் ரூபாய் செலவாகிறது.

''இந்த ஆண்டு மேலும் 100 கலைஞர்களுக்கு ஒய்வு ஊதியம் வழங்கப்படும். இதனால் மேற்கொண்டு ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவாகும்.

''மனிதனைப் பண்பாடு உடையவனாகச் செய்வது கலை

## 1981–82ல் 'கலைமாமணி' விருது பெற்ற கலைஞர்கள்

| | |
|---|---|
| புரிசை திரு சு. முருகேச முதலியார் .. | இயற்றமிழ்க் கலைஞர் |
| மதுரை திரு என். கிருஷ்ணன் .. | இசைக் கலைஞர் |
| டாக்டர் சேலம் எஸ். ஜெயலட்சுமி .. | இசை ஆராய்ச்சிக் கலைஞர் |
| திரு எம். சந்திரசேகரன் .. | வயலின் கலைஞர் |
| நாகூர் திரு. டி. எஸ். அம்பி அய்யர் .. | மிருதங்கக் கலைஞர் |
| திரு டி. எச். விநாயக்ராம் .. | கடம் கலைஞர் |
| புதுக்கோட்டை திரு எஸ். மகாதேவன் .. | முகர்சிங் கலைஞர் |
| திரு செந்தில் எம். கே. சின்னசுப்பையா .. | நாதசுரக் கலைஞர் |
| வடபாதிமங்கலம் திரு வி. என். ஜி. தட்சிணாமூர்த்தி .. | தவில் கலைஞர் |
| திரு கே. வீரமணி .. | இறையருள் பாடல் கலைஞர் |
| சுவாமிமலை திரு எஸ். கே. ராஜரத்தினம் .. | பரதநாட்டிய ஆசிரியர் |
| செல்வி சாமுண்டீஸ்வரி .. | பரதநாட்டியக் கலைஞர் |
| திருமதி அபயாம்பிகா .. | பரதநாட்டியக் கலைஞர் (சிறப்பு) |
| திரு டி. ஜி. பாவுப்பிள்ளை .. | பரதநாட்டிய மிருதங்கக் கலைஞர் |
| திரு ராஜராஜா ஏ. பி. பெருமாள்ராஜ் .. | நாடக நடிகர் |
| செல்வி எஸ். ஆர். சிவகாமி .. | நாடக நடிகை |
| திரு எஸ். கே. கரிக்கோல்ராஜ் .. | நாடக நகைச்சுவைக் கலைஞர் |
| திரு பட்டுக்கோட்டை குமாரவேல் .. | நாடக ஆசிரியர் |
| திரு சி. வி. ரங்கசுவாமி .. | நாடகத் தயாரிப்பாளர் |
| பேராசிரியர் திரு ந. சுந்தரம் .. | நாடகத் தனி நடிப்புக் கலைஞர் |
| திரு ஸ்ரீகாந்த் .. | திரைப்பட நடிகர் |
| செல்வி ஏ. ஸ்ரீதேவி .. | திரைப்பட நடிகை |
| திரு ரவீந்தர் .. | திரைப்பட வசன கர்த்தா |
| திரு தஞ்சைவாணன் .. | திரைப்படப் பாடலாசிரியர் |
| திரு துரை .. | திரைப்பட இயக்குநர் |
| திருமதி டி. வி. இரத்தினம் .. | திரைப்படப் பின்னணிப் பாடல் கலைஞர் |
| திருச்சி திரு லோகநாதன் .. | திரைப்படப் பின்னணிப் பாடல் கலைஞர் |
| திரு எம். வி. கிருஷ்ணப்பா .. | இசை நாடக நடிகர் |
| திருமதி டி. எஸ். ரங்கநாயகி .. | இசை நாடக நடிகை |
| திரு ஏ. எஸ். தங்கவேல் .. | இசை நாடகப் பாடலாசிரியர் |
| திரு ந. மு. க. சண்முக சுந்தரக் கவிராயர் .. | பழம்பெரும் இசை நாடக நடிகர் |
| திரு டி. கே அப்புக்குட்டி பாகவதர் .. | இசை நாடக மிருதங்கக் கலைஞர் |
| திருமதி என். அய்யம்மாள் .. | கிராமியக் கலைஞர் |
| சபா .. | ஸ்ரீ தியாக பிரும்ம கான சபா (வாணி மஹால்) சென்னை |



# 1982--ஆம் ஆண்டு திறந்துவைக்கப்பட்டுள்ள மறைந்த கலைமேதைகளின் திருவுருவப் படங்கள்

பரதநாட்டிய மேதை திரு கே. என். தண்டாயுதபாணிப் பிள்ளை

பரதநாட்டிய மேதை திரு கந்தப்ப நட்டுவனார்

மிருதங்க மேதை பாலக்காடு திரு மணி அய்யர்

இசைமேதை திருப்பாம்புரம் திரு சிவசுப்பிரமணிய பிள்ளை

தவில் மேதை நாச்சியார்கோவில் திரு ராகவப் பிள்ளை

நாதசுர மேதை பெரம்பலூர் திரு அங்கப்ப பிள்ளை

இயற்றமிழ் மேதை திரு அவ்வை துரைசாமிப் பிள்ளை

கவியரசு திரு கண்ணதாசன்

கவிஞர் திரு உடுமலை நாராயணகவி

திரைப்படத் தயாரிப்பாளர், திரு ஏ. வி. மெய்யப்ப செட்டியார்

இசை நாடகப் பாடலாசிரியர் திரு டி. கே. சுந்தர வாத்தியார்

பழம்பெரும் நாடகக் கலைமேதை திரு ராஜா சண்முகதாஸ்

திரைப்பட நகைச்சுவை அரசி திருமதி டி. ஏ. மதுரம்

திரைப்பட நடிகை திருமதி பி. கண்ணாம்பாள்.

---

தான். கலைகள் மூலம்தான் பண்பாடு வளரும். விஞ்ஞானம் மனிதனைத் தொடாது. அது அறிவை வளர்க்கப் பயன்படும். 22 மாநிலங்களிலேயே, பண்பாடு காக்கும் மாநிலம் தமிழகம்தான். அதற்குக் காரணம் கலைதான். அதனால்தான் கலைஞர்களைப் பாராட்டுகிறோம்'' என்று சொன்னார்.

**கலை உணர்வு பெருகிட..**

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள், ஏற்கெனவே கலைமாமணி விருது பெற்று, ஏழ்மையில் வாடும் கலைஞர்கள் 12 பேர்களுக்குப் பொற்கிழி வழங்கிப் பேசினார். அவர். பேசும்போது கூறியதாவது:

''நாட்டு மக்களிடையே கலை உணர்வு பெருக, பள்ளி அளவில் கலைக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டுக் கலைகள் பற்றிய ஆராய்ச்சிகள் அவசியம். புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிக்கு முதலிடம் தரப்படும். விரைவில் செயல்படவிருக்கும் புதிய பல்கலைக் கழகங்களிலும் ஆராய்ச்சிப் பணிகளுக்கு முக்கிய இடம் வழங்கப்படும்.''

துவக்கத்தில் கலைமாமணி விருது பெறுபவர்களைப் பற்றிய விவரங்களை, தமிழ்ப் பழங்கலை இயக்ககஇயக்குநர் திரு மீ.ப சோமசுந்தரம் (சோமு) அவர்களும், கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம் அவர்களும் படித்தார்கள்.

**தமிழகத்தின் பெருமை பரவிட..**

கலைமாமணி விருது பெற்ற கலைஞர்கள் சார்பில், இயற்றமிழ்க் கலைஞர் திரு புரிசை சு. முருகேச முதலியார், டாக்டர் சேலம் எஸ். ஜெயலட்சுமி, திரைப்பட இயக்குநர் திரு துரை ஆகியோர் நன்றி தெரிவித்துப் பேசினார்கள்.

விழாவில் மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள், செய்தி - மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு கே. ஏ. சுந்தரம் ஐ. ஏ. எஸ். அவர்கள், மற்றும் ஏராளமான கலையுலகக் கலைஞர்கள், பல்துறை அறிஞர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

தமிழ்க் கலைஞர்களுக்குப் புத்துயிர் ஊட்டவும், அதன் அருமையினை அகில உலகமும் அறியவும், தமிழ்க் கலைஞர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கவும், அதன் மூலம் தமிழகத்தின் பெருமை தரணியெங்கும் பரவவும், தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றம் தன்னேரில்லாத் தொண்டாற்றி வருகின்றது.

குடியரசுத் திருநாளில் நடந்த இந்தக் குதூகலத் திருவிழா, தமிழ்ப் பெருங்குடி மகனைத் தலை நிமிரச் செய்தது என்றால் அது மிகையல்லவே!

## மாணவர் பக்கம்



## 4 பதக்கங்களைப் பெற்ற கல்லூரி மாணவி

அண்மையில் நடந்த சென்னைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில், நான்கு தங்கப் பதக்கங்களைப் பெற்று புதிய சாதனை ஒன்றைச் சென்னையைச் சேர்ந்த குமாரி அஞ்சலி நாயர் நிகழ்த்தியுள்ளார்.

1981-ஆம் ஆண்டில் சென்னை எத்திராஜ் கல்லூரியில் பி.ஏ., (பொருளாதாரம்) வகுப்பில் படித்த இம்மாணவி முதலாவதாகத்தேறி,பி. சந்திரா ரெட்டி தங்கப் பதக்கம், கோபதி மகாதேரா செட்டி பதக்கம், குப்புசாமி நாயுடு நினைவுப் பதக்கம், எத்திராஜம்மா நினைவுப் பதக்கம் ஆகிய நான்கு தங்கப்பதக்கங்களைப் பரிசாகப் பெற்று சாதனை படைத்துள்ளார். கடந்த முப்பது ஆண்டுகளில் எந்த ஒரு மாணவியும் இது போன்ற ஒரு சாதனையை ஏற்படுத்தவில்லை.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் பன்னிரெண்டு பட்டதாரிகள் இருபது தங்கப் பதக்கங்களைப் பெற்றார்கள். தங்கப் பதக்கம் பரிசு பெற்றவர்களில் ஒன்பது மாணவிகளும் அடங்குவர்.

## இது உங்கள் பக்கம்

மாணவ மணிகளே! இது உங்கள் பக்கம். உங்கள் திறமைகளை வெளிப்படுத்த இந்தப் பகுதி உதவும். கதை, கட்டுரை, கவிதை, துணுக்கு, சித்திரம் முதலானவற்றை நீங்கள் எழுதி அனுப்பலாம். அவை உங்கள் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும். எழுதும் போது உங்கள் பள்ளியின் முழு முகவரியையும் குறிப்பிட வேண்டும்.

—ஆசிரியர்.





## ஆசை!

ஆதவன்போல் அறிவினிலே
ஒளிர வேண்டும்
அனைவரிடம் அன்பாகப்
பழக வேண்டும்.
மேதினியில் மேதையெனப்
புகழ வேண்டும்.
மேன்மைகளாம் அத்தனையும்
பெறவும் வேண்டும்.
சாதனைகள் செய்து நாமும்
சிறக்க வேண்டும்.
சத்தியுடன் அயராது
உழைக்க வேண்டும்.
மாதனமும் மாடுமனை
சேர்க்க வேண்டும்.
மற்றவர்கள் மனிதனெனப்
போற்ற வேண்டும்.
சாதிமத பேதமில்லாப்
பண்பு வேண்டும்.
சத்தியத்தில் சளைக்காத
தெம்பு வேண்டும்.
தீதுதரும் தீண்டாமை
போக்க வேண்டும்.
திருநாட்டின் தவப்புதல்வனாய்த்
திகழ வேண்டும்.

—கலைப்பொழிலன்.



# இலட்சியக் கனவுகள் நனவாக...

சுதந்திர உணர்ச்சியை மக்களிடையே ஊட்டி, நாட்டு விடுதலைக்காக மக்களைத் தட்டி எழுப்பிய மகாகவி பாரதியார் இன்று வாழ்ந்திருந்தால்....

சிறந்த தேசபக்தர்களின் தியாகத்தால் பெற்ற விலை மதிக்க முடியாத, வாராது வந்த சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தை இன்றைய சமுதாயத்தினருக்கும், வருங்காலச் சந்ததியாருக்கும் வலியுறுத்தும் வகையிலே புதிய பள்ளுகள் பாடியிருப்பார்.

சுதந்திரம் பெறுவதற்கு முன்பு அன்னியரின் அடிமைகளாய் வாழ்ந்த நிலை மாறி, குடியரசு நாட்டிலே எல்லாத்துறைகளிலும் பாரதப் பெருமக்கள் தலைமையேற்றுச் செயலாற்றும் சிறப்பு, திறன், வளர்ச்சி கண்டு பெருமைப் பட்டு ஆனந்தக் கூத்தாடுவார்.

பெண்ணினத்திற்குப் பெருமை சேர்க்கின்ற வகையிலே, உரிமைக் குரல் எழுப்பிய பாரதி, ஆசிரியப் பணியிலிருந்து ஆளும் பணிவரை பல துறைகளில் சிறந்து விளங்குகின்ற காட்சியைக் காணும் போது தான் கண்ட கனவு நனவாகி, புதுமைப் பெண்ணுலகம் உருவாகி வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைவதோடு மன நிறைவெய்துவார்.

தொழில் வளர்ச்சியைப்பற்றி, பாரதியின் பாடல்களில் உள்ள கனவுக் கருத்துக்கள், இன்று அரசும், தனியாரும் திட்டமிடுகின்ற தொழில்களுக்கு, வித்தாக, அடித்தளமாக அமைந்திருக்கின்றன. கப்பல் கட்டுதல், காகித ஆலைகள், இரும்புத் தொழிற்சாலைகள், கல்விக் கூடங்கள், அயல்நாட்டு வாணிபம் போன்றவைகளை உதாரணங்களாகக் கொள்ளலாம்.

பல மொழிகள் பேசும் மக்களின் கலாசார வேற்றுமைகளில் உள்ள ஒற்றுமையைக் காணத் தவறாத பாரதி, பொருளாதார வளர்ச்சிக்காக, நாட்டின் ஒற்றுமை உணர்வை வலியுறுத்த, பண்டமாற்று முறையைப் பாங்காக எடுத்துக் கூறுகின்றார். இன்று அந்த முறை, நடைமுறைப் படுத்தப்படுவதைக் காண்கையில் பெரிதும் பாராட்டி மகிழ்ந்திருப்பார். அத்தோடு தேசிய ஒருமைப் பாட்டைக் கண்டு பூரித்திருப்பார்.

தமிழ்மொழியின் வளர்ச்சியில் அளவிலா ஆர்வம் கொண்ட பாரதி, இன்று அம்மொழி அரசுக் கட்டிலில் ஆட்சிமொழியாக அமர்ந்திருப்பதையும், எங்கும் எதிலும் தமிழ் என்றநிலைமையைக் கண்டு இரும்பூதெய்துவார்.

பக்திப் பாடல்களைப் பாடிய பாரதி, பகுத்தறிவுக் கொள்கைகளைப் பற்றிப் பாடவும் தவறவில்லை. அந்த வகையில், பகுத்தறிவுக் கொள்கைகள், சீர்திருத்த எண்ணங்கள் தமிழ் நாட்டில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்படுவதைக் காண, இன்று பாரதி வாழ்ந்திருந்தால் வாயாரப் புகழ்ந்திருப்பார்.

தோத்திரப் பாடல்களைப் பாடிய பாரதி, துவேஷ உணர்ச்சிகள் ஒழிந்து, அனைவரும் இந்தியர் என்ற ஒரே இனம் உருவாக உத்வேகம் ஊட்டினார்.

சமதர்மச் சமுதாயம் அமைக்கப்பட வேண்டும் என்று அன்றே கனவு கண்ட பாரதி, பொருளாதாரம், கல்வி, வேலை வாய்ப்பு போன்ற பலதுறைகளில் எல்லா சாதி மக்களும், ஏற்றம் பெறத் தக்க வகையிலே, சட்ட பூர்வமான வழி வகைகள் செய்யப்பட்டு, செயல் வடிவம் பெறுவதைக் கண்டு களிப்படைந்திருப்பார்.

விடுதலை வேட்கையையே, பெரிதும் ஊட்டிய பாரதி, பொருளாதாரச் சுதந்திரம் பெற வேண்டும் என்ற நோக்கில், நாட்டில் உள்ள எல்லா இயற்கை வளங்களும் பயன்பட வேண்டும் என்றும் மக்கள் அம்முயற்சியில் ஈடுபட வேண்டும் என்றும் பாரதி கனவு கண்டார். எத்தனையோ வளர்ச்சித்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டாலும் இன்னும் உண்மையான பொருளாதாரச் சுதந்திரம் இல்லாத நிலையைக் கண்டு மகா கவியின் மனம் சிறிது வருந்தத்தான் செய்யும். மக்கள் தொகையின் வளர்ச்சிக்கு ஈடு கொடுக்க முடியாத பொருளாதாரத்தைப் பார்த்து, குடும்ப நலத் திட்டப் பிரச்சாரத்தில் குதித்திருப்பார்!!

ஆக, தொலை நோக்கு மகா கவி பாரதி கண்ட கனவுகள் நனவாக, பாரத மக்கள் அரசியல் விடுதலைக்குப் போராடியஅதே வேக உணர்ச்சியோடு, தியாக உணர்வோடு, பொருளாதார விடுதலை பெற்று, வளமோடு வாழ, அனைவரும் மீண்டும் உழைக்க முன் வர வேண்டும் என்று விரும்புவார்.

அவர் எண்ணம் ஈடேற, இலட்சியக் கனவுகள் நனவாக நாம் ஈடுபடுவோம் என்ற உறுதியை மேற்கொள்வோம்.

**ஜி. கணேஷ்,**
**எட்டாம் வகுப்பு,**
**ஸ்ரீ மயிலைக் கற்பகவல்லி சீனியர் செகண்டரி பள்ளி,**
**சாஸ்திரி நகர், சென்னை-20.**

**கார்களுக்கு தானே வழிநடத்தும் கருவி**

தெரியாத இடங்களில் வண்டி ஓட்டுனர் அல்லது வழி மறைத் திருப்பதால் ஓட்ட முடியர்த தொல்லை இனி ஜப்பானில் இராது. தானே வழி நடத்தும் கருவி ஒன்றை ஹொண்டோ மோட்டார் கம்பெனி தயாரித்து உள்ளது.



# மீண்டும் முதலைகள்

நமது முதலைகள் பிழைத்து விடும். கடலோர சதுப்பு நில உப்பங்கழிமுகப் பகுதியில் அவை புது வாழ்வு பெறும்.

இருபதாம் நூற்றாண்டின் பிறப்பு முதலை இனத்தின் இறப்புக் காலமாய் வந்து முடிந்தது. அவற்றின் தோலுக்காக அவை வேட்டையாடப்பட்டன. ஆறுகளில் பெருமளவு பயிற்சிகள் நடப்பது-வெள்ளக் கட்டுப்பாடு நடவடிக்கைகள், முதலைகள் முட்டையிட்டு இனப் பெருக்கம் செய்வதைத் தடுத்து விட்டன.

தண்ணீரில் வாழும் மீன் இனங்களை முதலைகள் தின்றுவிடுகின்றன என்ற தப்பான எண்ணத்தில் மக்கள் அவற்றைக் கண்டபடி கொன்று குவித்தனர். அவற்றின் முட்டைகளை உணவாகப் பயன்படுத்த எடுத்துச் சென்றனர். இதன் காரணமாக 1970-ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் முதலைகள் எண்ணிக்கை மிகவும் குறைந்தன.

எனவே, 1972-ஆம் ஆண்டு முதலை வேட்டையை இந்திய அரசு தடை செய்தது. இதுவரை நடக்க வேண்டிய அழிவுகள் நடந்து விட்டன. நாடு முழுவதும் நூற்றுக்குக் குறைவான முதலைகளே இருந்தன என்பது



1974-ஆம் ஆண்டு நடந்த ஓர் ஆய்வு மூலம் தெரிய வந்தது. முதலை இனமே அழிந்துவிடும் நிலைமை காணப்பட்டது. கடந்த 100 ஆண்டுகளாக வேட்டையாடப்பட்ட நீர்வாழ் உயிரினங்களையும் முதலை இனத்தையும் காப்பாற்ற 1975-ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதி முதலை இனப் பெருக்க நிர்வாகத் திட்டமொன்றுஅரசு ஆதரவில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தியாவில் 3 வகை முதலை இனங்கள் காணப்படுகின்றன. இதில் கரியால் என்ற வகை இமய மலை நதிகளிலும் மகா நதியிலும் மட்டுமே காணப்படுகிறது. இவை 7 மீட்டர் நீளம் வளருகின்றன. இரண்டாவது இனம் உப்பு நீரில் வாழும் முதலைகளாகும். இந்த இன முதலைகள் ஒரு காலத்தில் கொச்சி முதல் சுந்தர்வன காடுகள் வரை உப்பங்கழிகளிலும் சதுப்பு பிரதேசங்களிலும் பெருமளவு காணப்பட்டன. 3-வது வகை 'மக்கர்' என்று அழைக்கப்படும் சிறிய அளவில் வளரும் முதலைகளாகும். இவை 3.5 மீட்டர்வரை தான் வளர்கின்றன. தரையில் நீண்ட தூரம் இவை பயணம்செய்யக்கூடியவை. ஒரு காலத்தில் உள்நாட்டு நீர் நிலைகளில் அதிகம் காணப்பட்டதும் அதிக அளவில் வேட்டையாடப்பட்டதும் இந்த இனமே.

இந்த 3 வகை முதலைகளையும் காப்பாற்ற நான்கு முனை நடவடிக்கை எடுக்க முதலைகள் திட்டம் வழிவகை செய்கிறது. முதலில் முதலைகள் வாழும் பகுதிகள் கண்டறியப்படும். அந்தப் பகுதிகளிலிருந்து முட்டைகள் சேகரிக்கப்பட்டு இயந்திரம் மூலம் பொறிக்க வைக்கப்படும். அவை இந்த நிலையங்களில் 1.2 மீட்டர் வரை வளர்ந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் அளவு பலம் பெற்றதும் தேர்ந்தெடுக்கப்பட்ட நீர் நிலைகளில் விடப்படும்.

உலகத்திலேயே முதன் முறையாக 'திக்கர்படா' 'முதலைகள் நிலையத்தில், இயந்திரம் மூலம் முதலைகள் பொரிக்க வைக்கப்பட்டன. இது நடந்தது 1975-ஆம் ஆண்டு ஜூன் மாதம். இந்த நிலையம்ஒரிஸ்ஸா மாநிலம்தென்கனால் என்ற இடத்தில் உள்ளது. முன்கூட்டியே திட்டமிட்டபடி பிப்ரவரி மாதம் பருவ மழை ஆரம்பிக்கும் நேரத்தில்முதலைக் குஞ்சுகள் நீர் நிலைகளில் விடப்படுகின்றன.

தற்போது நாட்டில் 8 மாநிலங்களில் 16 முதலை நிர்வாக நிறுவனங்கள் உள்ளன. மற்றும் 5 நிலையங்கள் மறுவாழ்வுப் பகுதிகளாகச் செயல்படுகின்றன. முதலை நிர்வாகத்தில் தமிழ்நாடு ஒரிஸ்ஸா, மத்திய பிரதேசம், உத்திர பிரதேசம், இராஜஸ்தான் ஆந்திர பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகியவை கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளன.

உப்பு நீர் முதலை இன நிர்வாகத்தில் அந்தமான் நிக்கோபார் தீவுகள் ஒரு நல்ல தொடக்கத்தை மேற்கொண்டுள்ளது. முதலையின் பழக்க வழக்கங்கள் பற்றி அந்தப் பகுதி மக்களுக்கு அறிவூட்டுவதற்கான அனைத்து முயற்சிகளும்எடுக்கப்படுகின்றன. மீன்களைத் தின்கின்ற ஒருவகை மீன்களை மட்டுமே முதலை வேட்டையாடுகிறது.

# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
# தொழில் வளர்ச்சிக்குத் தேவை
# டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

## டான்சி
### தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR

# தசைக் கலை - வனப்பயிர் உற்பத்தியில் புதிய முறை!



**1981**-ம் ஆண்டு சூன் திங்கள் 27-ம் நாள் வனத்துறை வரலாற்றில் ஒரு முக்கிய நாளாகும். அன்று தசைக்கலை மூலம் உற்பத்தி செய்யப்பட்ட நீலகிரிதைல மரக்கன்று ஒன்று வைகை அணையில் உள்ள கானியல் பயிற்சிப் பள்ளியில் நடப்பட்டது. அது ஒரு பொன்னாள்.

சில உபயோகங்களுக்கான குறிப்பிட்ட மரவகைகளின் தேவையும், பொது உபயோகத்திற்கான மரங்களின் தேவையும் பல மடங்கு அதிகர்த்துக் கொண்டே வருகின்றன. இதுநாள் வரை மரத்தோட்டங்கள் பொது உபயோகத்திற்கெனவே உற்பத்தி செய்யப்பட்டன. இந்தியாவின் சில மாநிலங்கள் நீங்கலாக வனவளம் குறைவாகஉள்ள இதரபகுதிகளிலும் வனத்தினைப் பெருக்கி உற்பத்தியை அதிகரிக்க போதிய இடம் குறைவாகவே உள்ளது என்பது உண்மையாகும். ஒரு சிறு நிலப் பகுதியையும் மர உற்பத்திக்கெனப் பயன்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும்.

ஐரோப்பா, கிழக்குஆப்ரிக்கா, தென் அமெரிக்க நாடுகளின் தோட்டங்களுடன் ஒப்பிடும் போது, நீலகிரி தைலமரம் உள்ளிட்ட நமது மரத்தோட்டங்கள் குறைந்த உற்பத்தி உடையனவேயாகும். ராஜஸ்தான் மாநிலப் பாலைவனப் பகுதி நீங்கலாக மற்றைய பகுதி வளவளத்தை உற்பத்திக்குக் குறைவானதாக மதிப்பிட முடியாது. சிறப்பான தன்மைகள் அமையப்பெற்ற தக்க மரவகைகளைத் தேர்ந்தெடுத்தலும், தற்கால உற்பத்திக் கலை நுணுக்கங்களைப் பயன்படுத்துதலும் கூர்ந்து நோக்க வேண்டியவை ஆகும்.

இந்நாளைய மரத்தோட்டம் என்பது கிடைக்கும் உற்பத்தி அளவு எவ்வளவு என்பதை எவராலும் நிச்சயமாகக் கூறமுடியாத பயமற்ற கூட்டங்களேயன்றி வேறில்லை.

**எஸ். கொண்டாஸ், இ.வ.ப.**
**நிர்வாக இயக்குநர்,**
**தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம்,**
**திருச்சிராப்பள்ளி.**

1950-ம் ஆண்டு வாக்கில் வேளாண்மைத் துறையில் ஏற்பட்ட பயிர் முன்னேற்றம் மரத்தோட்டங்களுக்கு இன்னும்நடைமுறைக்கு வர உள்ளது. உள்நாட்டு வகை மரங்களானாலும், அயல் வகை மரங்களானாலும் குறிப்பிட்ட உபயோகத்திற்குத் தக்கவாறு, சீர்திருத்தி மாற்றியமைக்கப்படாமலும், நேர்த்தியாக்கப்படாமலும், ஆதிகாலத்தில் இருந்த நிலையிலேயே இன்றளவும் இருந்து வருகிறது. இதன் விளைவாக நல்ல உற்பத்தி தரக்கூடிய இடங்களும் பேப்பர் மற்றும் ரயான் உற்பத்திக்கான முக்கிய கச்சாப் பொருளான மரக்கூழ் தரும் நீலகிரி தைல மரம் எட்டு ஆண்டுக் காலவெட்டுத் தவணையில் ஹெக்டருக்கு 5 முதல் 50 சன்னுக்குக் குறைவாக உற்பத்தி தருகிறது. அதிக சக்தி உடைய சில கலப்பின மரங்களும் ஒரு குறிப்பிட்ட உபயோகத்திற்கெனவே பயன்படுத்தப்படுகின்றன. இம்மரவகைகளை அவைகளின் தரம் மாறாமல் அதிக அளவில் எவ்வாறு உற்பத்தி செய்வது என்பதை ஒவ்வொரு வன

அலுவலரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பயிர் முன்னேற்றம் மிக அதிக வேகத்தில் செயல்படுத்தப்பட வேண்டும். நடைமுறையில்உள்ள இனப்பெருக்க முறையினைச் செம்மைப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு இருபத்தைந்து ஆண்டுகள் ஆகலாம் எனக் கூறப்படுகிறது. இம்முறைகளின் தன்மை எப்படியிருப்பினும் பெருகிவரும்தேவையின் அளவை ஈடு செய்ய இயலாத நிலைமையுள்ளது.

ஆதிகாலம் தொட்டு பழமரங்கள் மற்றும் தோட்டச்செடிகள் பெருக்கத்திற்கு தாவர வளர்முறையே செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால்நன்குஅமையப்பெற்ற தசைகள், முளைபிரித்தெடுக்கப்பட்ட குருத்து, நன்கு அமையப்பெறாத மிருதுத்தன்மையுடைய தசை ஆகியவை மூலமான மறு உற்பத்தியே சமீபத்திய உற்பத்தி முறையாகும். தசைக்கலை உற்பத்தி என்னும் ஒரு முனையிலிருந்து பலநூறு கன்றுகளை உற்பத்தி செய்யும் சாத்தியக்கூறு செயலாக்கப்பட்டு அது தற்சமயம் பலனளித்து வருகிறது. ஆப்பிள், காலிபிளவர் போன்ற காய்கறிவகைகள், காரநேஷன் போன்ற அழகு தரும் செடி வகைகளின் உற்பத்தியை அதிகரிக்கவும் பலதன்மைகளடங்கிய ஒரு முளையிலிருந்து பல நூறு செடிகளை உற்பத்தி செய்யக்கூடிய தசைக்கலை செயலாக்கப்பட்டு வருகிறது. அன்னாசி, முட்டைக்கோஸ் உருளைக்கிழங்கு போகன்வில்லா போன்ற இதர இனங்களிலும் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

புனாவிலுள்ள தேசீய ரசாயன கூடத்தைச் சார்ந்த டாக்டர் வி. ஜெகந்நாதன் என்பவரின் தலைமையில் பணியாற்றும் சில தசைக்கலை விஞ்ஞானிகளது கவனம் வனமரங்கள்பால் திரும்பியுள்ளது. நூறாண்டு முதிர்ந்த எல்லாவற்றிலும் சிறந்த அலப்பள்ளித்தேக்குமரங்களின் முளைகளிலிருந்து பலதன்மைகளுடைய தசைகள் எடுக்கப்பட்டு மஹாராஷ்டிர வனத்தோட்டக் கழகத்திற்கு உயர்வகை தேக்கு உற்பத்திக்கென வழங்கப்பட்டுள்ளன. இளம் செடிகளிலிருந்து முளைகளைப் பிரித்தெடுப்பது சுலபமாகும். ஆனால் வயது முதிர்ந்த மரங்களிலிருந்து கிடைக்கப்பெறும் சக்திக் குறைவான முளைகளை வெற்றிகரமாகப் பிரித்து வளர்க்கும்போதுதான் உண்மையில் கடினம் ஏற்படுகிறது. சிறப்பான தன்மைகளைப் பெற்ற குறிப்பிட்ட மரங்கள் நன்கு உருவாவதுடன் மீண்டும் உற்பத்தி செய்யவும் நிச்சயம் இயலும். ஆனால் இளஞ்செடிகளிலும், சிறப்பான தன்மைனயற்ற மரங்களிலும் இந்நிலை இல்லை. இனப்பெருக்க முறைக்கு நீலகிரி தைலமரம் கடினமானது ஆகும். சுமார் ஒரு ஆண்டுடைய செடிகளில் மட்டும் என்னால் வெற்றி காண முடிந்தது. தேசீய ரசாயனக் கூடம் நான்கு ஆண்டுகள் ஆகிய ''யூக்காலிப்டஸ் சிட்ரியோடரா'' என்னும் மர வகையின் ஒரு முளையிலிருந்து பல நூறாயிரம் கன்றுகளை உருவாக்குவதில் வெற்றி கண்டுள்ளது.

விஞ்ஞானிகள் குழுவொன்று டாப்சிலிப்பில் உள்ள சில நல்ல தோட்டங்களைப் பார்வையிட்டு 20 ஆண்டு நிரம்பப்பட்ட ஒரு நீலகிரி தைல மரத்திலிருந்து முளைகளை வளர்த்து பெருக்குவதில் வெற்றி கண்டது. வன இயலில் இதுவரை தெரியாமல் இருந்த இம்முறை மர உற்பத்தி அதிகரிப்புக்குப் பெரிதும் உதவும். தசைகள் மூலம் உற்பத்தியாகும் கன்றுகள் பிறப்பின மரபையே ஒட்டியவையாதலால் பூச்சிகள் மற்றும் நோய்களாலும் பெருமளவில் அழிந்துவிடக்கூடிய அபாய நிலை உள்ளது. சிறப்பான தன்மைகள்மையப்பெற்ற மரங்களைத் தேர்ந்தெடுப்பதின் மூலம் இதனை நீக்கலாம்.



நீலகிரி தைலமரம், முந்திரி முதலிய முக்கிய வனப்பயிர்கள் தசைக்கலை மூலம் பெருமளவில் உருவாக வாய்ப்பு உள்ளது. விதைகள் மூலம் உருவாக்கப்பட்ட தற்சமய தைலமரத் தோட்டங்களில் நதிப்படுகைகளில் உள்ளவை உற்பத்தி அளவு 80 முதல் 100 டன்னும், 700 மி.மி. அளவில் மழைகிடைக்கப் பெறும் இதர பகுதிதோட்டங்களில் 8 முதல் 40 டன்னாகவும் பரந்த அளவில் வேறுபாடுகொண்டுள்ளது. பல ஆயிரக் கணக்கான கலப்பின மரங்களிடையே சிறந்த தன்மையமையப் பெற்றுக் காணபடும் ஓரிரு மரங்களை தசைக்கலைக்கென நிறுத்திக் கொண்டால் அம்மாதிரியான உற்பத்தி தோட்டங்களில்நதிப்படுகைகளில் 300 டன்னும் அதற்கு மேலும், இதர பகுதிகளில் 60 முதல் 100 டன்னாகவும் உற்பத்தி அளவு உயர வாய்ப்புள்ளது. நடப்படும் கன்றுகள் யாவும் சிறப்பான தன்மையைப் பெற்றிருப்பின் ஹெக்டருக்கு 2500 கன்றுகளுக்கு பதிலாக 1500 மட்டுமே நட்டால் போதுமானதுடன் 2-3 பங்கு செலவில் தற்சமயம் கிடைத்து வரும் உற்பத்தி அளவைவிட மூன்று அல்லது நான்கு மடங்கு அதிக மகசூல் கிடைக்கும். தற்சமயம் 100 டன் காகித உற்பத்தித் திறன் கொண்ட ஆலை அதனுடைய தேவைக்கான மரங்களை அதிக அளவில் செலவிட்டு 240 கி.மீ. சுற்றுவட்டாரத்திலிருந்து பெற வேண்டியுள்ளது. சிறப்பான தன்மைகள் அமையப்பட்ட நதிபடுக்கையிலுள்ள மரத்தோட்டங்களின் சிறிய பகுதியிலிருந்து மொத்த தேவையை ஈடு செய்ய இயலுவதுடன் அன்றைய தேவைக்கு ஒரு ஹெக். மட்டுமே வெட்டினால் போதுமானது. தசைக்கலை மூலம் உற்பத்திவன இயல் தன்மையையே மாற்றியமைக்கக் கூடியதாகலாம். தேக்கு மரத்தைப் பொறுத்தவரை இறுதியாக வெட்ட நிறுத்திக்கொள்ளப்படும். மரங்களை மட்டும்சிறப்பான தன்மைகளைப் பெற்ற மரங்களாகவும், இதர மரங்களுக்குச் சாதாரண தேக்கு அல்லது வேறு வகை மரங்கள் மூலமும், நடவு செய்து அதிக செலவைக் குறைக்கலாம். மற்றொரு முக்கிய பயிரான முந்திரி அதிக அளவில் ஹெக்டேருக்கு 1103 கிலோ உற்பத்தி கேரளாவிலும், அகில இந்திய ரீதியில் 450 கிலோவும் கொடுக்கிறது. இந்த உற்பத்தி அளவு தேர்ந்தெடுக்கப்பட்ட சில மரங்களின் வளமையிலிருந்து அளவிடப்பட்டுள்ளது. தசைக்கலை மூலம் 1 ஹெக்டேரில் 5 டன் உற்பத்தி செய்யக்கூடிய சாத்தியக் கூறு உள்ளது. தற்சமயம் வனத்தோட்டக்கழகத்தில்1 ஹெக்டேருக்குக் கிடைக்கும் 67 கிலோவுடன் ஒப்பிடும்போது இந்த அதிக அளவு உற்பத்தி வியக்கக்கூடியதுஆகும்.

தசைக்கலை மூலம் உற்பத்தி முறை வனம் மற்றும் பண்ணைக் காடுகளிலுள்ள விறகுமரம், மென்மரம், பொருள்களை அடைக்கத் தேவைப்படும்மரம், எண்ணெய்வித்துக்கள் மற்றும் வனப்பண்ணைக் காடுகளுக்கு உடனடியாகத்தேவைப்படுகிறது. சிறப்பான தன்மைகளைப்பெற்ற மரங்களைக் கண்டுபிடிப்பது பல மரவகைகளில் அதிக வேகமாக செயல்பட்டுவருகிறது. தசைக்கலை மூலம் உற்பத்தி அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒன்றாகும்.



# வேலூரில் அரசுப் பொருட்காட்சி

— மருது

அரசின் திட்டங்கள் ஆக்கப் பணிகளை விளக்கும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் செய்தி மக்கள் தொடர்புத்துறையினாலே சிறப்புமிகு பொருட்காட்சிகள் தொடர்ந்து நடத்தப்பெற்று வருகின்றன.

அந்த வகையில், வட ஆர்க்காடு மாவட்டத் தலைநகரான வேலூரில், அண்மையில் (24.1.82) அரசுப் பொருட்காட்சி '82ன் துவக்க விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு எம். விஜயசாரதி ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.

விழா நாளன்று வேலூர் கோட்டை மைதானத்தின் முன்பு உள்ள மரங்களும் கட்டடங்களும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. வடஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ந. நாராயணன் (இ.ஆ.ப) அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி பேசுகையில் குறிப்பிட்டதாவது: ''ஆரம்பத்தில் இந்தப் பொருட்காட்சி எப்படித் துவக்க முடியும் என்று நினைத்தேன். என்னுடன் பணியாற்றிய அலுவலர்களின் முழு ஒத்துழைப்பில்தான் இந்தப் பொருட்காட்சியை இந்த நாளில் திறக்க முடிந்தது. அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

நாட்றம்பள்ளி சட்டமன்ற உறுப்பினர் திரு அன்பழகன் அவர்கள்-சென்னையைப் போல் ஆண்டுதோறும் இங்கும் பொருட்காட்சி நடத்தவேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொண்டார். பொருட்காட்சியில் மலிவு விலையில் பல பொருட்கள் கிடைக்கின்றன என்றும் குறிப்பிட்டார்.

குடிநீர் வடிகால் வாரியத்தலைவர் திரு அரங்கநாதன் அவர்கள் பேசுகையில் - ''பல ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக இங்கு அரசுப் பொருட்காட்சி நடை பெறுவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். பொருட்காட்சி மூலம் கிடைக்கும் வருவாயை இந்த மாவட்ட வளர்ச்சிக்குப் பயன்படுத்துவது குறித்து மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்'' என்று குறிப்பிட்டார்.

கைத்தறித்துறை இயக்குநர் திரு வரதராசன் அவர்கள் பேசுகையில் ''கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 85 அங்காடிகள் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. குறைந்தது ஒரு வருடத்திற்கு ரூ.20க்காவது மக்கள் கைத்தறித் துணிவாங்க வேண்டுகின்றேன்'' என்றார்.

ஜனதாக் கட்சித் தலைவர் திரு கே. பி. நலக்கோட்டி அவர்கள் தம் உரையில் ''இந்த மாவட்ட மக்கள் குறைந்த செலவில் தன்னுடைய மாவட்ட விவரங்களை இப்பொருட்காட்சி மூலம் பார்க்க முடிகின்றது. கண்காட்சி மூலம் நல்ல முறையில் உண்மை நிலை விளக்கிக் கூறப்பட்டுள்ளது. இந்நகரப்பொழுது போக்கிற்காகக் கோட்டையைச் சுற்றி பூங்கா அமைக்க வேண்டும் என்றார்.

மார்க்சிஸ்ட் கட்சியைச் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினர் திரு பூங்காவனம் அவர்கள் பேசுகையில் ''இங்கு பொருட்காட்சி நடைபெற ஏற்பாடு செய்த செய்தி மக்கள் தொடர்புத் துறையைப் பெரிதும் பாராட்டுவதாகக்''குறிப்பிட்டார்.

போளூர் சட்டமன்ற உறுப்பினர் திரு பலராமன் அவர்கள் பேசுகையில், ''இந்த மாவட்டத்தில் உள்ள எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் இங்கு பொருட்காட்சி வர விரும்பினார்கள். இந்தப் பொருட்காட்சி





மூலம் இந்த மாவட்டத்தை நாளடைவில் தொழில் மாவட்டமாக மாற்ற முடியும் என்று நம்புகின்றேன்'' என்றார்.

ஆர்க்காடு சட்டமன்ற உறுப்பினர் திரு சேதுராமன் அவர்கள் ''இப்படிப்பட்ட பொருட்காட்சி மூலம் அரசின் பல்வேறு துறைகளில் நடப்பது மக்களுக்குத் தெரியப்படுத்தப்படுகின்றது'' என்று தமது உரையில் கோடிட்டுக் கூறிப் பாராட்டினார்.

சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் திரு கோபால் அவர்கள் பேசுகையில் கூறியதாவது ''மாவட்டத்தின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது இப்பொருட்காட்சியாகும். இந்த மாவட்டத்தின் வளர்ச்சி, மூலை முடுக்குகளில் எல்லாம் எப்படி வளர்ச்சி பெற்றுள்ளது என்று இப்பொருட்காட்சிமூலம் தெரிகின்றது. சோளிங்கரில் உள்ள கோவிலுக்கு மலை ரயில் விட அரசைக் கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

ஆரணி சட்டமன்ற உறுப்பினர் திரு சண்முகம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது: ''இப்பொருட்காட்சி வரலாற்றுச் சிறப்பு மிக்க பொருட்காட்சியாகும். சென்னையில் நடைபெறும் பொருட்காட்சிபோன்று இந்தப் பொருட்காட்சி இன்னும் சிறந்த அளவில் நடைபெற விரும்புகின்றேன். சூதாட்டங்கள் இல்லாமல் இந்தப் பொருட்காட்சி நடைபெறுவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்''

அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் திரு விசுவநாதன் அவர்கள் குறிப்பிட்டதாவது: ''எவ்வளவு சாதனைகள் செய்தாலும் அதை மக்கள் மறந்துவிடுவார்கள். ஆதலால் செய்கின்ற சாதனைகளை இப்படி மக்களுக்கு விளம்பரத்தின் மூலம் தெரியப்படுத்த வேண்டும். இதற்கு முன் பொருட்காட்சி என்றால் பெரும்பாலும் சூதாட்டம் தான் இருக்கும். ஆனால் இப்பொழுது அப்படி இல்லை. இந்த மாவட்டத்தில் பல்வேறு வளங்கள் அதிகமாக உள்ளன. அதை நல்ல முறையில் பயன்படுத்தி தொழில் மாவட்டமாக மாற்ற வேண்டும் என்றுஅரசைக்கேட்டுக் கொள்கிறேன்'' என்று தெரிவித்தார்.







விழாவுக்குத் தலைமையேற்றும், கைத்தறிப் பொருட்காட்சியைக் குத்துவிளக்கு ஏற்றி வைத்தும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு எம். விஜயசாரதி அவர்கள் ஆற்றிய உரை விவரம் வருமாறு:''மாவட்டத்தின் எல்லாப் பிரச்சினைகளையும் இங்கே எல்லாரும் கட்சி வித்தியாசமின்றி எடுத்துக் கூறினார்கள். இதுவரை பல்வேறு பொருட்காட்சிகளில் கேளிக்கை நிகழ்ச்சிகளும், சூதாட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன.



1978ஆம் ஆண்டு முதல் மாவட்டங்களில் நல்ல முறையில் இது போன்ற பொருட்காட்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

கைத்தறித்துறை சார்பில் இங்கே பல அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. நாம் ஒவ்வொருவரும் கைத்தறித் துணியினை வாங்கினால் அது ஏழை கைத்தறி நெசவாளரின் வீட்டில் அடுப்பு ஏற்றி வைப்பதாகும். இம்மாவட்டப் பொது மக்கள் அதிக அளவில் வந்து அரசுப் பொருட்காட்சி சிறப்புடன் நடைபெறச் செய்திட வேண்டும்.

பொருட்காட்சியினைத் திறந்து வைத்து மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் ஆற்றிய உரையில் குறிப்பிட்டதாவது.

முதல் முறையாகத் தமிழக அரசின் சார்பில் இப்பொருட்காட்சி, இங்கே எழுச்சியுடன் நடைபெறுவது குறித்து அத்துணைப்பேருக்கும் நன்றி தெரிவிக்க நான் கடமைப்பட்டு இருக்கின்றேன். இதுபோன்று மற்ற இடங்களில் நடைபெறும் பொருட்காட்சியை மக்கள் மனமுவந்து பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

சென்னையில் பொருட்காட்சி நடைபெறும்பொழுது மற்ற இடங்களில் அப்படி நடத்த முடியாத நிலை முன்பு இருந்தது. அந்த நிலைமையை மாற்றி மற்ற மாவட்டத் தலைநகரிலும் அதே நேரத்தில் நடைபெற இப்போது அரசு ஏற்பாடு செய்துள்ளது.

வேலூர் மாநகர மக்கள் இவ்வளவு ஆர்வத்துடன் இவ்விழாவில் கலந்து கொண்டதை மிகவும் பாராட்டுகின்றேன். இருபது லட்சம் ரூபாய் முதலீட்டில் பொருட்காட்சி தொடங்குகிறோம்; அது எப்படியிருக்குமோ என்று நினைத்து வந்தேன். ஆனால் இங்குவந்து பார்த்த பிறகு அப்படிப்பட்ட மனக்கவலை எனக்கு இல்லை என்று வேலூர் மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களுக்குரிய பணத்தைச் செலவழிக்கும்போது அது எப்படி கவனத்தோடு செலவிடப்படுகின்



றது என்று பார்ப்பேன். இந்தப் பொருட்காட்சியின் ஆரம்ப நாளான இன்று ஏறத்தாழ பதினைந்தாயிரம் பேர் பார்த்து இருப்பது பற்றி மகிழ்ச்சியடைகின்றேன்.

தனியார் பொருட்காட்சி நடத்திப் பிழைப்பதைக் கெடுக்கவே அரசு பொருட்காட்சி நடத்தி வருகிறது என்பது தவறு. அது எங்கள் நோக்கம் அல்ல. பொருட்காட்சி மக்களுக்கு நல்ல முறையில் பயன்படுவதாக இருக்க வேண்டுமென்பதுதான் அரசின் நோக்கம்.

இங்கு நடைபெறும் பொருட்காட்சியினால் லாபம் என்ன? இந்தப் பகுதியில் மக்கள் ஏராளமானோருக்கு இதனால் வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது. தொடர்ந்து இங்கே கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள் நடைபெறுவதால் நலிந்த கலைஞர்கள் பலர் பயன் பெறுகிறார்கள். இந்த மாவட்டத்தில் கிரர்மத் தொழில் வளர்ச்சியடையவில்லை என்று கூறினார்கள். படித்த இளைஞர்கள் இப்பொருட்காட்சியைக் கண்டு சொந்தத் தொழிலில் ஈடுபடுவதற்குரிய வழிவகைகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்."



விழா இறுதியில் பொருட்காட்சி துணை இயக்குநர் திரு ஆர்.கே. கிருட்டிணமூர்த்தி அவர்கள் நன்றி கூறினார்.

# சோவியத் நாட்டில் பாரதி நூற்றாண்டு விழா!

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நூற்றாண்டு விழாவை சோவியத் நாடெங்கிலும் சிறந்த முறையில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் முதல் கட்டக் கூட்டம், அண்மையில் மாஸ்கோ நட்புறவு மாளிகையில் நடைபெற்றது.

பாரதியார் பாடல்களை சோவியத் யூனியனில் பரப்புவதே குழு நடவடிக்கைகளில் முக்கிய இடம் வகிக்கும் எனக் கருதப்படுகிறது.

சோவியத் விஞ்ஞானப் பேரவையின் கீழ் திசை இயல் கழகத்தைச் சேர்ந்த ஒய். செலிஷேவ் பேசுகையில், ''கவிஞரும் சர்வதேசியவாதியுமான சுப்பிரமணிய பாரதி, ரஷ்யாவில் நடைபெற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியை வரவேற்றுப் பாடிய முதல் இந்தியக் கவிஞர்களில் ஒருவர்'' என்று கூறினார்.



சோவியத் நாடெங்கும் பாரதியார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கான திட்டத்தைக் குழு அங்கீகரித்தது. பாரதி கவிதைகளின் புதிய மொழிபெயர்ப்புக்கள், மிகப் பெரிய இலக்கிய, சமுதாய-அரசியல் இதழ்களில் வெளியாகும்.

பாரதி நூல்கள் பற்றிய ஆராய்ச்சிகள், ''கீழ்த்திசைப் புலவர்களும் எழுத்தாளர்களும்'' என்ற நூல் வரிசையில் வெளியிடப்படும். பாரதி பற்றிய கட்டுரைகள், பிரபல சோவியத் இதழ்களிலும் பத்திரிகைகளிலும் வெளியிடப்படும். பாரதியார் பற்றிய சோவியத் இந்தியவியலாளர்களின் கட்டுரைத் தொகுப்பு ஒன்று, இந்தியாவில் அச்சிடப் பெறும்.



# அண்ணா பிறந்த மண்ணில் பெரியார் நினைவுத் தூண்

**மாமூலன்**

பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூண் திறப்பு விழா காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா நினைவு நாளான பிப்ரவரி 3ஆம் நாள் நடைபெற்றது.

காஞ்சிபுரம் காந்தி சாலையில் அமைக்கப்பட்டிருந்த அந்த நூற்றாண்டு நினைவுத் தூணின் முன்பக்கத்தில்—

பகுத்தறிவுத் தந்தை பெரியார் ஈ. வெ. ராமசாமி நூற்றாண்டு நினைவுத் தூண் என்று மேலே பெரிய எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருந்தது. அதற்குக் கீழே—

''ஈ.வெ. இராமசாமி என்கிற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி, உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன்'' என்ற பெரியாரின் மொழி அவருடைய கையொப்பத்துடன் பொறிக்கப்பட்டிருந்தது.

தோற்றம்: 17.9.1879

மறைவு : 24.12.1973

நூற்றாண்டு நிறைவு: 17.9.1979 என்றும் அதன்கீழே பொறிக்கப்பட்டுள்ளது.

**இடது பக்கத்தில்—**

* மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு.
* மக்களின் ஒழுக்கத்தையும் மதியையும் கெடுப்பது மது.
* சிந்திக்கும் தன்மையின் கூர்மையே பகுத்தறிவு.
* கல்வியும் அறிவும் பெறுவது மனிதன் மற்றவர்க்குத் தொல்லை கொடுக்காமல் மனிதத் தன்மையோடு வாழவே.
* மாணவர்களை ஆசிரியர்கள் மதவாதிகளாக ஆக்கக் கூடாது; அறிவாளிகளாக ஆக்கவேண்டும்.
* பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு அளவுக்கு மீறிய நாணயமும் கட்டுப்பாடும் உறுதியும் தியாக உணர்வும் வேண்டும்

என்று பொறிக்கப்பட்டிருந்தது.

**வலது புறத்தில்—**

* பகுத்தறிவு நெறியே பண்பட்ட நெறி
* விதியை நம்பி மதியை இழக்காதே.
* பக்தி இல்லாவிட்டால் இழப்பில்லை; ஒழுக்கம் இல்லாவிட்டால் எல்லாம் பாழ்.
* பல பகுத்தறிவு மணிகளால் ஆன அறிவுக் களஞ்சியம் திருக்குறள்.
* ஒழுக்கக் குறைவுக்கும் மூட நம்பிக்கைக்கும் எப்படிப்பட்ட கலையும் பயன்பட்டு விடக் கூடாது.
* எண்ணங்களை வெளியிட எவருக்கும் உரிமையுண்டு; அதனைத் தடுக்க எவருக்கும் உரிமையில்லை.

என்று பொறிக்கப்பட்டிருந்தது.

**பின் புறத்தில்—**

* பகுத்தறிவின் எல்லை பொதுவுடைமை ஆகும்.
* பிறருக்குத்தொல்லை தராத வாழ்வே ஒழுக்க வாழ்வு.
* பிறக்கும்போது மனிதன் சாதி அடையாளத்தோடு பிறப்பதில்லை.
* தீண்டாமை ஒழிய வேண்டுமானால் சாதி ஒழியவேண்டும்.
* பெண்கள் மனிதனுக்குரிய சொத்தல்ல; அவனைப் போன்ற உணர்ச்சியுள்ள உயிர்களே.
* சமூக நீதி பெற சமுதாயப் புரட்சி தேவை.
* மனிதப் பண்பை வளர்ப்பதே என் வாழ்நாள் பணி
* மூட நம்பிக்கையும் குருட்டுப் பழக்கமும் சமூகத்தின் முதல் பகைகள்.

என்று பொறிக்கப்பட்டிருந்தது.

பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூணை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

செய்தி - மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு கே. ஏ. சுந்தரம் அவர்கள் விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். அவர் தமது வரவேற்புரையில், 'பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூண் சுமார்



ரூ. 30,000 செலவில் அமைக்கப்பட்டது. பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூண் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் அமைக்கப்படும்

''முதல் நினைவுத்தூணைப் பெரியார் அவர்களின் சீர்திருத்தப் பணிகளுக்கெல்லாம் பாசறையாகத் திகழ்ந்த திருச்சிராப்பள்ளியில் திறந்து வைக்கப்பட்டது.

''இரண்டாவது நினைவுத்தூண் பெரியார் பிறந்த ஈரோட்டில் திறந்து வைக்கப்பட்டது.

''இப்பொழுது மூன்றாவதாக தந்தை பெரியாரின் பிரதம சீடரான பேரறிஞர் அண்ணா பிறந்த ஊரான காஞ்சியில் அமைக்கப்பட்டுள்ளது. அடுத்து தஞ்சாவூரில் நூற்றாண்டு நினைவுததூண நிறுவப்படும்'' என்பதைக் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு. மோகனரங்கம் எம்.பி. விழாவுக்குத் தலைமையேற்றார்.

தந்தை பெரியார் அவர்களின் தொண்டால் தமிழ்ச் சமுதாயம் அடைந்த முன்னேற்றங்களை விளக்கினார். இந்த நூற்றாண்டின் தலைசிறந்த சிந்தனையாளருள் பெரியாரும் ஒருவர் என்பதை விளக்கினார்.

மாநிலங்களவை உறுப்பினரும் தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக்குழு உறுப்பினருமாகிய திரு. ஏ.பி.சனார்த்தனம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'பெரியாரின் பரம்பரை வாழையடி வாழையாக வளர்ந்து வருகிறது. பெரியாரின் கருத்துக்கள், சிந்தனைகள் எங்கும் பரவிட பேரறிஞர் அண்ணா பாடுபட்டார். அவர் நினைவு நாளில் கூடியுள்ள நாம் பெரியார் கருத்துக்களைப் பரப்பிட வேண்டும்.

பெரியார் நூற்றாண்டு விழாக் குழு உறுப்பினர் திரு ராஜகோபாலன், காஞ்சிபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு வெங்கடசுப்பிரமணியம், அனகாபுத்தூர் திரு. ராமலிங்கம் எம்.எல்.சி ஆகியோர் பேசிய பிறகு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ.செ. குழந்தைசாமி உரையாற்றினார்.

அவர் தமது உரையில், பெரியார் தமிழ் இன உணர்வுக்கும், தமிழ் இனவளர்ச்சிக்கும் உதவினார்.

''ஒரு தமிழன் உயர்வதைக் கண்டால் இன்னொரு தமிழன் சகித்துக் கொள்ள மாட்டான்' என்றும் தந்தை பெரியார் கூறினார். அதை நாம் இன்றும் நிரூபித்து வருகிறோம். எந்தச் செயலைச் செய்தாலும் அது மனித முன்னேற்றத்துக்கு உதவுகிறதா? மனித சுபாவத்திற்கு உதவுகிறதா? என்ற அடிப்படையிலேயே பெரியார் அணுகினார்'' என்றார்.

பெரியார் நூற்றாண்டு விழாக் குழு உறுப்பினரான திரு[illegible]



கே. தங்கராசு பேசுகையில் ''பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துக்களாலேயே சமுதாய மறுமலர்ச்சி யுருவாக முடியும். ஆகவே நாம் அனைவரும் தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துக்களைப் பின்னபற்றவேண்டும்'' என்றார்.

பெரியார் நூற்றாண்டு விழாக் குழு உறுப்பினரும் முன்னாள் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தருமான திரு. என். டி சுந்தரவடிவேலு பேசுகையில் குறிப்பிட்டதாவது;—

''பெரியார் தான் நம் நாட்டிலே முதன் முதலில் சமதர்மத் திட்டத்தைப் பரப்பினார். இன்றைய முற்போக்குத் திட்டங்களனைத்துக்கும் வித்திட்டவர் அவரே. தமது 95-வது வயதில் 98 நாட்கள் வாழ்ந்தார். அதில் 35 நாட்கள் சுற்றுப்பயணத்தில் இருந்தார். தமிழ்ச் சமுதாயத்தின் நல்வாழ்வுக்கு பாடுபட்டவர்க்கு நன்றி செலுத்தும் வகையிலே தமிழ்நாடு அரசு இங்கு விழா எடுக்கின்றது.''

''திருக்குறள் முனுசாமி அவர்கள் பேசுகையிலே குறிப்பிட்டதாவது—

''பெரியார் மானத்தோடு வாழச் சொன்னார். மானம் என்றால் 'அளவு' என்று பொருள். எதிலும் அளவோடு வாழ வேண்டும் என்பதைப் பெரியார் வலியுறுத்தினார்.

''தந்தை பெரியார், சிந்தனை செய்ய வேண்டும் என்றார். எனக்குப் பட்டதைச் சொல்லுகிறேன். உங்களுக்குப் பட்டதை எடுத்துக்கொள்ளுங்கள் என்றார். பெரியார் கருத்துக்களைப் பின்பற்றி நாம் முன்னேற வேண்டும்.''

மாநில திட்டக்குழுத் துணைத் தலைவர் பாவலர் மா. முத்துசாமி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''திருவள்ளுவர் எக்காலத்துக்கும் எல்லாருக்கும் பொருந்தும் வகையில் திருக்குறளை அளித்தது போல எக்காலத்துக்கும் எந்நாட்டவர்க்கும் பொருத்தமான கருத்துக்களை பெரியார் கூறினார். பெரியார் சிந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் தமிழ்ச் சமுதாயம் முன்னேற முடியும்.''

**மாண்புமிகு நிதியமைச்சர்**

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''சமுதாயத்தின் சீர்கேடுகளைக் களைய பெரியார் அரும்பாடு பட்டார். பெரியார் பழைய உலகத்தை அழித்தார். பேரறிஞர் அண்ணா தேவையான புதிய உலகத்தைப் படைத்தார். தந்தை பெரியாருக்கு மாவட்டத் தலை நகரங்களில் நூற்றாண்டு நினைவுத் தூண் அமைத்தபிறகு சென்னையில் 95 அடி உயரத்தில் நினைவுத்தூண் அமைக்கப்படும். பெரியாருக்கு நன்றி செலுத்தும் வகையில் பெரியாரின் கருத்துக்களைப் பரப்பிட தமிழ்நாடு அரசு பாடுபடும் என்றார். விழா முடிவில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் எச். ஜே. ராமச்சந்திரன் நன்றி கூறினார்.

பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சித்திருநகரில் அவரது 13 வது நினைவு நாளில் பெரியாருடன் பேரறிஞர் அண்ணா அவர்களை நினைவுகூர்வது போல பெரியார் நூற்றாண்டு நினைவுத்தூண் திறப்பு விழா அமைந்திருந்தது.



மொழிஞாயிறு தேவ நேயப் பாவாணர் அவர்கள் பிறந்தநாள் பிப்ரவரி ஏழு

# பல்கலை அறிஞர் பாவாணர்

— தே. மணி

பாவாணர் சிறப்பியல்புகளை அன்னாரின் மகன் நினைவுகூர்கிறார்

பாவாணர் அவர்கள் தம் தனித் தமிழ்க் கொள்கையை வெறும் வாய்ச்சொல்லாக வைத்துக் கொள்ளாமல், இறுதி மூச்சுவரை முழுமையாக நடைமுறையிற் கைக்கொண்டு வந்தார்கள். பிற சொற் கலவாமல் தனித் தமிழி லேயே பேசமுடியும், எழுதமுடி யும் என்று மெய்ப்பித்தும் வந் தார்கள். தம் மக்கள் அனைவ ருக்கும் தனித்தமிழ்ப் பெயர் களையே சூட்டினார்கள்.

மொழிஞாயிறு அவர்கள் தனித் தமிழிற் பேசும்போது, தமிழில் மட்டுமல்ல அவர்தம் பேச்சிலும் ஓர் இனிமையைக் காணலாம். தமிழிற் பேசும்போதுதான் அப் படி என்று நினைக்கின்றீர்களா? இல்லை! ஆங்கிலத்திற் பேசும் போதும் அப்படித்தான்! ஆங்கி லத்திற் பேசும்போது அவர்களு டைய ஒலிக்குறிப்பே ஒரு தனி அழகுதான்! அது நேரிற் கண்ட வர்க்கே விளங்கும்.

பாவாணர் அவர்கள் பள்ளியிற் படித்துக் கொண்டிருக்கும் காலத் தில் மாணவர் ஆங்கில இலக்கிய மன்றச் செயலாளராக இருந்தார்கள் என்றும் அந்நாட் களில் பிறர் தம்மைச் 'சான் சன்' ( Johnson ) என்றே அழைப்பது வழக்கம் என்றும் கூறுவார்கள். அதற்கேற்றாற் போல், ஆங்கிலத்தில் ஏராளமான சொற்களைத் தெரிந்து வைத்தி ருந்தார்கள். ஆங்கிலத்திற் பேசும் போதும் சரி, எழுதும்போதும் சரி முறையாக எந்தச் சொல்லைப் பயன்படுத்த வேண்டுமோ அதைத் தான் பயன்படுத்துவார்கள். இது தவிர, இந்திய மொழிகள், மேலை நாட்டு மொழிகள் ஆக மொத்தம் பதினேழு மொழிகளின் இலக்க ணங்களையும் கற்றிருந்தார்கள்.

என் தந்தையார் அவர்கள் மொழித்துறையில் மட்டுமல்லாது கலைத்துறையிலும் இசைத்துறை யிலும் கூட மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் கொண்டிருந்தார்கள்.

ஒரு சமயம் நான் துவக்கப் பள்ளியிற் படித்துக் கொண்டிருக் கும் காலம்—நானும் என் தமக் கையாரும் களிமண்ணால் குடம், உரல் போன்ற விளையாட்டுப் பொருட்களைச் செய்துகொண்டி ருந்தோம். அதைப் பார்த்துக் கொண்டிருந்த எம் தந்தையார் அவர்கள் உடனே எங்களை அழைத்து, உரல் இப்படியாயிருக் கும், குடம் அப்படியாயிருக்கும் என்று கேட்ட வண்ணமே சில நிமிட நேரத்திற்குள் அவற்றைப் புதிதாய்ச்செய்துகாட்டினார்கள். மறுநாள் அப்பொருட்களைநாங் கள் பள்ளிக்குக் கொண்டுசென் றோம். அவ்வளவுதான்! அவற் றைக் கண்ணுற்ற எங்கள் ஆசிரி யர் உடனே எங்களிடமிருந்து அப்பொருட்களை வாங்கிக் கொண்டுபோய் பள்ளியின் பொருட்காட்சியறையில் வைத்து விட்டார்கள். அதற்குக் காரணம் அவை அவ்வளவு அழகான-இயல் பான தோற்றத்தில் இருந்த மையே! பாவாணர் அவர்கள் ஓவியமும் நன்றாகத் தீட்டுவார் கள். பள்ளியிற் பயிலுங்காலத் தில் ஓவியப் போட்டிகளிலெல் லாம் முதற்பரிசே வாங்கிய தாகவும் கூறுவார்கள்.

மொழிஞாயிறு அவர்கள் சேலம் நகராட்சிக் கல்லூரியிற் பணி யாற்றிவந்த காலத்தில், கல்லூரி வளாகத்திலேயே எங்கள் இல்லம் அமைந்திருந்தது. வீட்டின் முன் புறம் பரந்த நிலமும் இருந்தது. அந்நிலத்திற் பாவாணர் அவர்கள் ஓர் அழகிய பூந்தோட்டத்தையே அமைத்திருந்தார்கள். அதிற் கண்ணைக் கவரும் வண்ண மலர் கள் வகை வகையாகக் காட்சி யளித்துக் கொண்டிருக்கும். அதை ஒரு மலர்க் கண்காட்சியென்று சொன்னால் மிகையாகாது! அது மட்டுமா? எந்த ஊருக்குப்போ னாலும், அங்கெல்லாம் வீட்டிற் குத் தேவையான காய்கறித் தோட்டத்தை உடனே உருவாக்கி விடுவார்கள். நாள்தோறும் காலையும் மாலையும் அதிலுள்ள செடிகளைப் பார்வையிடுவதும், அவற்றிற்குத் தாமே தண்ணீர் கொண்டுபோய் ஊற்றுவதும் அவ ருக்கு ஒரு பொழுதுபோக்கு.

அடுத்து, இசைத் துறையில் நரம்புக் கருவிகளான சித்தார், வீணை இவ்விரண்டையும் இயக் கக் கற்றிருந்தார்கள். இவை தவிர ஆர்மோனியம், கின்னரம் (ஜலதரங்கம்), மிருதங்கம், தபலா, முதலிய இசைக் கருவி களையும் இயக்குவார்கள். இவ் விசைக் கருவிகள் அனைத்தும் அவர்தம் வீட்டிலே வைத்திருந் தார்கள். நன்றாகப் பாடவும் செய்வார்கள்.



# சக்தியும் பயிர் வளர்ச்சியும்

சக்தி என்பது வேலை செய்யும் திறன். உலகத்தில் உயிர் வாழும் இனங்கள் அனைத்தும் சூரியனிடமிருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சக்தியை அடைகின்றன. சூரிய வெளிச்சம் இல்லையேல் உயிரினங்கள் வாழ முடியாது. சூரியனிடமிருந்து சக்தி தொடர்ச்சியாக வெளிப்பட்டுக் கொண்டு இருக்கிறது. இச்சக்தியை தாவர இனங்கள்தான் நேரடியாகப்பயன்படுத்திக் கொள்கின்றன. மனிதனும், மிருகங்களும் இதை நேரடியாகப் பயன்படுத்த முடியாததால் தாவரங்கள் சேர்த்து வைக்கும் சக்தியை தங்கள் தேவைகளுக்கு உபயோகப்படுத்திக் கொள்கின்றன. எனவே இவ்வுலகில் தாவரங்கள் இல்லையேல் மனிதனும், மிருகங்களும் பூண்டோடு அழிந்து போய்விடும்.

சூரியனிடமிருந்து சக்தியானது ஒளிமயமாக பூமியை அடைகிறது. இந்த ஒளி மின்காந்த அலைகளாக வெளிப்படுத்தப்படுகிறது. சூரியஒளியில் காஸ்மிக் ஒளி, எக்ஸ்ரே, அல்ட்ரா வயலட் ஒளி மற்றும் இன்ப்ரா ரெட் ஒளி போன்ற கதிரியக்கங்கள் வானத்தில் காற்று மண்டலத்திற்கு மேலே உள்ள ஓசோன், மேகங்கள் முதலியவற்றால் வடிகட்டி நீக்கப்படுவதால் பூமியை அடைவதில்லை. இக்கதிரியியக்கங்கள் பூமியை அடைந்தால், மனிதன், விலங்கினம், தாவரம் முதலிய உயிரினங்கள் தாக்கப்பட்டு, விரைவில் அனைத்தும் அழிந்து விடும். எனவே இத்தகைய கதிர்கள் நீக்கப்பட்டு எஞ்சியுள்ள சுமார் 50 சதம் சக்திதான் பூமியை அடைகிறது. தாவரங்கள் இவ்வாறு பூமியை வந்தடையும் சக்தியின் உதவியால் காற்றிலுள்ள கரியமில வாயுவையும், பூமியில் உள்ள தண்ணீரையும் பசுங்கனிகத்தில் ஒன்று சேர வைத்து மாவுப் பொருட்களைத் தயாரிக்கின்றன. இதை 'ஒளிச் சேர்க்கை' என்று அழைக்கிறோம்.

பூமியை அடையும் ஒளியில் ஏழு வித வண்ணங்கள் அடங்கியுள்ளன. அவற்றில் நீலம், ஆரஞ்சு சிவப்பு நிறங்கள் மட்டும்தான் ஒளிச்சேர்க்கைக்கு அதிகமாகப் பயன்படுகின்றன. எல்லாத் தாவரங்களிலும் ஒரே அளவாக ஒளிச்சேர்க்கை நடப்பதில்லை. ஒவ்வொரு தாவரத்திற்கும் ஒரு குறிப்பிட்ட குறைந்தபட்ச அளவு ஒளி தேவைப்படுகிறது. இதற்கு அதிகமாக ஒளி இருந்தால் ஒளிச் சேர்க்கையில் வேகம் குறைகிறது. மிக அதிக அளவு ஒளியில் பசுங்கனிகம் அழிந்து ஒளிச்சேர்க்கை முற்றிலும் நின்றுபோகிறது. மேலும் இலையின் தன்மையைப் பொருத்தும் ஒளிச்சேர்க்கை பாதிக்கப்படுகிறது. இலையின் பரப்பளவு, வயது, இலையில் உள்ள பசுமையின் அளவு, இலைகள் செடியிலே அமைந்துள்ள விதம் ஆகியவை ஒளிச் சேர்க்கையின் அளவைக் கட்டுப்படுத்துகின்றன. இத்துடன் காற்றில் உள்ள கரியமிலவாயுவின் அடர்த்தியும், பூமியில் உள்ள நீரைப் பொறுத்தும் இது மாறுபடும். எல்லாவற்றையும் கணக்கிடும் பொழுது பூமியை அடையும் சூரிய வெளிச்சத்தில் கிட்டத்தட்ட 2 சதவீதத்திற்கும் குறைவாகவே பயன்படுத்தப்படுகிறது. மீதம் உள்ள சக்தி வீணாகிறது.

ஒளிச்சேர்க்கையால் தாவரங்கள் சேகரிக்கும் சக்தியில் சுமார் 30 சதம் சுவாசிப்பதற்கு உபயோகப் படுத்தப் படுகிறது. மீதம் உள்ள சக்தி வேர், தண்டு, இலை, தானிய மணி முதலிய பகுதிகளில் சேர்த்து வைக்கப்படுகிறது. இவ்வாறு மணியாகவோ, கிழங்காகவோ, கனியாகவோ அல்லது தழையாகவோ சேர்த்து வைத்துள்ளதை மனிதனும் விலங்கினங்களும் உட்கொண்டு தங்களுக்குத் தேவையான சக்தியைப் பெறுகின்றன.

ஒரு மனிதன் ஒரு நாளைக்கு சராசரி 1.8 பவுண்டு தாவரப் பொருளை உட்கொள்ள வேண்டும். அதில் குறைந்தது 0.7 பவுண்டு கார்பன் என்னும் கரிப் பொருள் அடங்கி இருக்க வேண்டும். ஆண்டிற்கு ஒரு நபருக்கு 260 பவுண்டு தாவரப் பொருள் தேவைப்படுகிறது. எனவே உலகத் தேவை 36 லட்சம் டன். ஆனால் பலவகை சேதங்களால் நாம் ஆண்டொன்றிற்கு 4 மில்லியன் டன் கரிப்பொருள் உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது.

ஒரு சதுர மீட்டர் பூமியில் ஒரு நாளில் விழும் வெளிச்சம் ஒரு மனிதனுககு ஒரு நாளைக்கு வேண்டிய சக்திக்குச் சமமாகும். ஆனால், தாவரங்கள் முழு சூரிய சக்தியையும் உபயோகப்படுத்த முடியாமல் சுமார் ஒரு சதம் தான் உபயோகப்படுத்த முடிகிறது. தாவர வகைகளில்

டாக்டர்
ஆர். குழந்தைவேலு.

உழவியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,

கோவை.

காடுகள் சூரியனுடைய சக்தியை அதிகமாகச் சேகரித்து வைக்கின்றன. ஆனால் மரங்களை மனிதன் உட்கொள்ள முடியாததால் பயிர்களைத்தான் உற்பத்திச் செய்ய வேண்டியுள்ளது. தொன்று தொட்டு மனிதனுடைய முயற்சியாலும், பழக்கத்தாலும் சில பயிர்களைச் சாகுபடி செய்யக் கற்றுக் கொண்டான். தற்பொழுது பயிராகும் முக்கியப் பயிர்களில் கரும்பு, சோளம், மக்காச்சோளம், ஆகிய பயிர்கள் அதிக அளவுக்கு சூரியனுடைய சக்தியைச் சேர்த்து வைக்கும் திறன் படைத்துள்ளன. ஆனால் இப்பயிர்களில் அதிக அளவு மாவுச்சத்து அடங்கியுள்ளது. மனிதனுக்குப் புரதம், எண்ணெய், மற்ற தாதுப்பொருட்களும் தேவைப்படுவதால் பயறு எண்ணெய் வித்துக்கள், காய்கறிகள் போன்ற மற்ற பயிர்களையும் பயிரிடுவது அவசியமாகிறது. வளர்ந்து வரும் மக்கட்தொகையின் தேவைகளை பூர்த்தி செய்ய, நாம் சூரிய ஒளியைப் பெருமளவு சேகரித்து வைக்கும் பயிர் வகைகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றைப் பக்குவமாகச் சாகுபடி செய்வது முக்கியம். இதற்கான முறைகளைக் கீழே காண்போம்.

**புதிய பயிர்வகைகள்:**

பயிர்கள் அதிக அளவு சூரிய ஒளியைச் சேகரித்து வைத்தால் மட்டும் போதாது. அவை மனிதனுக்குப் பயன்படக்கூடிய விதத்தில் சேகரித்து வைக்கப்படவேண்டும். உதாரணமாக, பழைய நெல்வகைகளில் சேர்த்து வைக்கப்படும் சக்தியில் சுமார் 30 சதவீதம் தான் நெல் மணியில் உள்ளது. மீதி 70 சதவீத சக்தி வைக்கோலில் உள்ளது. மாறாகச் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள ஐ. ஆர். 20, வைகை போன்ற குட்டை ரக நெல் வகைகளில், கிட்டதட்ட 50 சதவீத சக்தி மணியில் உள்ளது. மேலும் சில பயிர்கள் (சோளம், மக்காச் சோளம், கரும்பு) மற்ற பயிர்களைக் காட்டிலும் அதிக அளவு சூரிய ஒளியைக் கிரகித்துச் சேர்த்து வைக்கும் தன்மை கொண்டுள்ளன. இதற்குக் காரணமான ரசாயன மாற்றங்களை மற்ற பயிர்களிலும் கொண்டு வரமுடியுமா என ஆராய்ச்சி நடந்து வருகிறது. இந்த ஆராய்ச்சி வெற்றி பெற்றால் நெல், கோதுமை போன்ற பயிர்களின் விளைச்சல் இன்னும் பெருக வாய்ப்புள்ளது.

**சீரிய சாகுபடி முறைகள்:**

அதிக சூரிய ஒளியைக் கிரகிக்கப் போதுமான இலைப் பரப்பளவு தேவை. இல்லையேல் சூரிய ஒளி மண்ணின் மீது விழுந்து வீணாகப் போகும். எனவே மண்ணின் பரப்புத் தெரியாமல் இலைகள் படர்ந்திருக்க வேண்டும். இதற்கு சரியான அளவு விதை உபயோகித்தால் போதுமான செடிகள் வளர்ந்து இலைப் பரப்பளவு அதிகமாகும். வேண்டிய அளவு உரங்களைத் தேவையான நேரத்தில் இடுதல், செடிகளுக்குத் தண்ணீர்ப் பற்றாக்குறை வராமல் நீர்பாய்ச்சுதல், நீர் சத்துக்கள், சூரியஒளி இவற்றிற்குப் போட்டி போடும் களைகள் வராமல் தடுத்தல், செடிகளின் வளர்ச்சியைப் பாதிக்கும் பூச்சி, பூஞ்சாளங்களைக் கட்டுப்படுத்துதல் ஆகிய சீரிய சாகுபடி முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் சூரிய ஒளி வீணாவதைத் தடுக்க முடியும்.

**பல பயிர்த் திட்டம்:**

நம் நாட்டில் வருடம் முழுதும் தேவைக்கு அதிகமாகவே சூரிய ஒளி கிடைக்கிறது. இதை முழுவதுமாகப் பயன்படுத்த வருடத்திற்கு மூன்று அல்லது நான்கு பயிர்கள் பயிரிட்டால் சூரிய ஒளியை அதிகமாகப் பயன்படுத்த முடியும். இதற்கு, மண்ணின் தன்மைக்கும், தட்பவெப்ப நிலைகளுக்கும் ஏற்ற பயிர்களைக் கொண்ட பல பயிர்த்திட்டத்தை செயல்படுத்தினால் சூரிய ஒளி வீணாவதைத் தடுக்க முடியும்.

வேளாண்மை செய்வதின் அடிப்படை நோக்கமே சக்தியைச் சேர்த்து வைப்பதற்குத்தான் என்பதை உணர்ந்து, அதற்குரிய வழிவகைகளைக் கையாண்டால் நமது காலத்துக்கு மட்டுமின்றி, வருங்காலச் சந்ததியினருக்கும் நாம் பெரும் தொண்டு செய்தவராவோம்.

வெளியீடு: **தகவல் தொடர்பு நிலையம்**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,**
**கோவை-**

## 1982-ஆம் ஆண்டு போற்கிழி பெற்ற கலைமாமணிகள்

திரு பாலகவி வெங்கடாசலன் (நாடகப் பாடலாசிரியன்)

திரு பி. சி. வேணுகோபால் (இசை நாடக நடிகர்)

திருவாரூர் திரு அ. இராமசாமிப்பிள்ளை (பழம் பெரும் இசை நாடக நடிகர்)

புரிசை திரு வி. ராஜு தம்பிரான் (தெருக்கூத்துக் கலைஞர்)

திரு எம். ஆர். நாகராஜ பாகவதர் (இசை நாடக நடிகர்)

மன்னார்குடி திரு என். ஆறுமுகம் பிள்ளை (கொன்னக்கோல் கலைஞர்)

திருமதி பி. எஸ். சிவபாக்கியம் (இசை நாடக நடிகை)

திரு ஏ. எம். பேச்சிமுத்துப் பிள்ளை (இசை நாடக மிருதங்கக் கலைஞர்)

திரு கே. சண்முக ஆச்சாரி (நாடகக் காட்சி அமைப்புக் கலைஞர்)

திரு டி. பி. சங்கரநாராயணன் (நாடக நடிகர்)

திரு டி. வி. வேதமூர்த்தி (நாடகத் தயாரிப்பாளர்)

திரு எஸ். வி. சுந்தரம் (காவடியாட்டக் கலைஞர்)

# திண்டுக்கல்லில்

# மாவட்ட நீதி மன்றம்

**த**மிழர் திருநாளாம் உழவர் நன்னாளில் தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல்லில் 2-வது மாவட்ட நீதிமன்றத் துவக்க விழா சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி (பொறுப்பு) மாண்புமிகு திரு பி. ஆர். கோகுல கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பேரறிஞர் அண்ணா படத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் சிறப்புரையாற்றுகையில் கூறியதாவது:—


கே. பி. நல்லதம்பி,

உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்)

மதுரை மாவட்டம்.


ரூ 34 லட்சம் செலவில்கட்டப்படவுள்ள மதுரை வடக்கு மாவட்ட நீதிமன்றம் திண்டுக்கல்லில் துவக்கப்படுவதால் ஏழை எளிய மக்கள் பல மைல்கள் சென்று, சிரமத்திற்குள்ளாகாமல் குறைந்த செலவில் நீதியைப் பெற உதவுகிறது. பழனி, பெரியகுளம், கொடைக்கானல், திண்டுக்கல், உத்தமபாளையம், வேடசந்தூர் ஆகிய தாலுகாக்கள் இந் நீதிமன்றப்பகுதியில் இணைகின்றன.

நீதிபதிகளுக்கு வீட்டுவசதிகள் பற்றிய யோசனை அரசிடம் தாமதமாகதெரிவிக்கப்பட்டதால் உடனடியாக அனுமதிக்கப்படாவிட்டாலும் விரைவில் அதற்கான நிதி அனுமதி கிடைக்கவிருக்கிறது.

நீதித்துறையின் வசதியைக் கருதி டேப் ரிக்கார்டுகளும், நகல் எடுக்கும் இயந்திரங்களும் வாங்கித்தர ஏற்பாடு செய்யப்பட்டுள்



ளது. நீதிபதிகளுக்கு கார் வசதி செய்து தரவும், முதல் கட்டமாக மாவட்டத் தலைமை நீதிபதிகளுக்கு கார் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. துணை நீதிபதிகளின் சம்பளத்தை உயர்த்தவும் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகள் முழுமையாக பென்ஷன் வசதி பெற அவர்களுடைய பணிக்காலத்தை 10 ஆண்டுகள் கூடுதலாகக் கணக்கிட்டால்தான் நன்மையாக இருக்கும் என்ற ஆலோசனையை ஏற்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சென்ற மாதம் உத்தரவு போட்டுள்ளார்.

உயர்நீதிமன்ற நீதிபதிகள், நீதிமன்றம் வந்துபோக மினி பஸ் வசதி செய்து தரப்பட்டுள்ளது. கிரிமினல் வழக்குகளில் மட்டுமன்றி சிவில் வழக்குகளுக்கும் தமிழில் தீர்ப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. டிரிப்யூனல்கள், வீட்டுவாடகை கட்டுப்பாடு நீதிமன்றம் போன்றவற்றில் தமிழில் தீர்ப்பு தரப்படும்.

இன்னும் ஓரிரு மாதங்களில் மதுரையில் உயர்நீதிமன்றத்தின் பிரிவு ஒன்று செயல்படத் துவங்கும் என நம்புவதாக மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் தமது சிறப்புரையில் தெரிவித்தார்கள்.

நிர்வாக வசதிக்காக மாவட்டங்கள் பிரிக்கப்படவேண்டுமென்பதே அரசின் கொள்கை. அதேபோல் மாவட்டத் தலைநகர்களும் மக்கள் விருப்பப்படும் இடத்தில் இயற்கையாக வளரக்கூடிய வாய்ப்புள்ள இடங்களில் அமைய வேண்டுமென்றும், நீதித்துறையில் எவ்விதக்குறுக்கீடும் இருக்கக்கூடாதென்றும், எந்தத் துறையாயிருந்தாலும் அந்தந்தத் துறைகள் அவற்றுக்குண்டான அதிகார வட்டத்திற்குள் செயல்படுவதே இணக்கமான முன்னேற்றத்தை ஏற்படுத்துமென்றும் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர்திரு.கே இராசாமுகமது அவர்கள் சிறப்புரை ஆற்றுகையில் தெரிவித்தார்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் நீதிமன்றத்திற்கு அடிக்கல் நாட்டிப் பேருரை ஆற்றினார். அவர்தம் உரையில் குறிப்பிட்டார்—

''சமுதாயத்தில் அடித்தளத்திலுள்ள மக்களுக்கும் நீதி எட்டாக் கனியாக இருந்து விடக்கூடாதென்ற நோக்குடன் மதுரை வடக்கு மாவட்ட நீதிமன்றம் துவக்கப்பட்டுள்ளது.

" திண்டுக்கல்லை மாவட்டமாக்க வேண்டுமென அனைவரும் பேசினார்கள். மாவட்ட நீதி மன்றமே திண்டுக்கல் வந்துவிட்ட பிறகு மீதியை ஏன் யோசிக்கிறீர்கள் எனக்கூறினார்கள்.

## வழக்குமன்றங்களில் தமிழ்மொழி

**— அரசு அறிவிப்பு —**

உயர்நீதி மன்றத்திற்குக் கீழ் அமைந்த உரிமை வழக்கு நீதிமன்றங்களில் (Civil Courts) தமிழ், நீதிமன்ற மொழியாக 1982 பிப்ரவரி முதல் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என்று அறிவித்து, தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

# தொழிற் கல்வி கற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு

மேல்நிலைப் பள்ளியில் தொழில் கற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது பற்றிப் பரிசீலனை செய்ய உயர்மட்டக் குழு ஒன்றைத் தமிழக அரசு நியமித்து உள்ளது.

இந்தியாவிலேயே தமிழக மேல்நிலைக் கல்வித் தொழிற் பிரிவு முன்னணியில் நிற்கிறது. இது குறித்து மத்திய அரசு தமிழக அரசைப் பாராட்டியுள்ளது.

மேல்நிலை வகுப்புக்களில் சுமார் 52 ஆயிரம் மாணவ–மாணவியர் தொழிற் பிரிவில் படிக்கிறார்கள். இவர்களுள் 16 ஆயிரம் பேர் பெண்கள். இவர்கள் மேல்நிலைக் கல்வி முடித்தபின், தொடர்ந்து தொழிற் கல்வி பெறவும், அவ்வாறு மேலே படிக்க முடியாதவருக்கு வேலை வாய்ப்புகள் அதிகமாகக் கிட்டும் அளவிலும் வழிவகை செய்யத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

இதுபற்றி ஆராய்ந்து ஆலோசனைகளைக் கூறப் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. குழந்தைசாமி தலைமையில் 17 பேர் அடங்கிய உயர் மட்டக் குழுவைத் தமிழ்நாடு அரசு அமைத்து வருகிறது. இக்குழுவிற்குத் தமிழகப் பள்ளிக் கல்வி இயக்குநர் திரு கி. வேங்கட சுப்பிரமணியம் செயலாளராக இருப்பார்.

பதினேழு உறுப்பினர்கள் கொண்ட, இக்குழுவில் மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலாளர், சமூகநலத்துறைச் செயலாளர், வேலை வாய்ப்புத்துறை இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநர், வேளாண்மைத்துறை, தொழில்துறை, கல்வித் துறை, தொழிலாளர் துறை ஆகியவற்றின் துணைச் செயலாளரும் திருச்சிப் பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணை வேந்தராக நியமிக்கப்பட்டுள்ள திரு. மணிசுந்தரம், தென் பிராந்திய தொழிற்பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர் திரு. இராமகிருஷ்ணன் ஆகியோரும் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான மாநிலக் குழுவின் (SCERT) பிரதிநிதியும் இருப்பார்கள்.

மேல்நிலைத் தொழிற்கல்வி முடித்த மாணவர்கள், தொழிற்கல்வியை மேலே படிக்கவும், புதிய நிறுவனங்களைத் துவக்கவும், இப்போது உள்ள தொழில் நுட்பக் கல்லூரி, மற்றுமுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் மேல்நிலை மாணவர்களுக்காகத் தனியாகக் கூடுதல் தொழிற்பயிற்சி வகுப்புக்களை அமைக்கவும் இப்போதுள்ள தொழிற்பயிற்சிப் பாடத் திட்டங்களை இன்னும் மேம்படுத்தி, வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கவும், இக்குழு அரசுக்கு ஆலோசனை கூறும்.

# நூல் நயம்



இப்பகுதிக்கு இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும். அரசியல் கட்சிகள் தொடர்புள்ள நூல்கள், இப்பகுதியில் மதிப்புரை செய்யப்படுவதில்லை.

—ஆசிரியர்.

## தீர்க்கதரிசி

ஆசிரியர் : கலில் கிப்ரான்
தமிழாக்கம் : நலங்கிள்ளி
வெளியீடு : தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம், ஸ்பர்டங் சாலை, சென்னை-600 031.

விலை ரூ. 11.00 பக்கம் : 77

லெபனான் நாட்டைச் சேர்ந்த தத்துவப் பேராசிரியர் கலீல் கிப்ரான் எழுதிய (The Prophet) என்னும் நூலின் மொழி பெயர்ப்பே தீர்க்கதரிசி என்னும் நூலாகும். பிற நாட்டுச் சிறப் பிலக்கியங்களைத் தமிழில் பெயர்க்கும் பணியின் வாயிலாக, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தால் வெளியிடப் பட்டுள்ளது.

அன்பு, திருமணம், குழந்தைச் செல்வம், நகைத் திறன், இன்பமும் துன்பமும், இல்லங்கள், உடைகள், கொடுத்தலும் கொள்ளலும்...இப்படி 27 தலைப்புகளில் உயர்ந்த தத்துவங்களைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார் ஆசிரியர்.

உரைநடை நூல் தான் என்றாலும் இது கவிதை நூலைப்போல நடை போடுகிறது. மொழி பெயர்ப்பு நூல் என்ற எண்ணம் நமக்கு ஏற்படாதவாறு மொழி பெயர்க்கப் பெற்றிருப்பது பாராட்டுக்குரியது.

உயர்ந்த தத்துவங்களுக்காக இந் நூலைப் பலமுறை படிக்கலாம். நமது தமிழ் இலக்கியச் சிந்தனையாளர்களின் கருத்துக்களுக்கு இணையான கருத்துக்கள் இந் நூலில் காணப்படுகின்றன.

வள்ளுவரின் அன்புடைமை அதிகாரத்தில் உள்ள கருத்துக்கள் இந் நூலில் உள்ள அன்பு என்னும் பகுதியில் காணக் கிடைக்கின்றன.

புதுக்கவிதைகளில் காணப் படும் பொருள் ஆழம் இந்த உரைநடையிலும் காணப்படுகிறது. இதுபோன்ற உயர்ந்த தத்துவங்களுக்காக இந்நூலைப் பல முறை படிக்கலாம்.

## பழங்களின் மருத்துவக் குணங்கள்

ஆசிரியர்: டாக்டர் திருமலை நடராசன்

பக்கம் 56: விலை ரூ.2.75

நமது நாட்டில் பல நன்னி கழ்ச்சிகளில் பழங்களைப் படைப்பது பெருமையாகக் கருதப்படுகின்றது. பழங்கள் மனித உடலுக்குப் பல்வகையான சத்துக்களைத் தருகின்றன என்பதை சுட்டிக்காண்பிக்கவே, அவை விழாக்களில் படைக்கப்படுகின்றன.

எந்தப் பழத்தில் எந்தச் சத்து என்னென்ன அளவில் உள்ளது என்பது பலருக்கும் தெரிந்திருக்க முடியாது. இந்த நூலைப்படித்தால் மா, பலா, வாழை, கொய்யா, திராட்சை, தக்காளி, அன்னாசி, மற்றும் பல்வேறு வகையான பழங்களில் உள்ள சத்துக்களையும் நமது உடல் நலத்துக்கு உகந்த பழங்கள் எவை என்பதையும் எளிதில் தெரிந்து கொள்ளலாம். மிக நீண்ட கட்டுரைகளாக எழுதாமல் சுருக்கமாக - தெளிவாக அறிவியல் கண்கொண்டு இந்நூலை உருவாக்கியிருக்கும் ஆசிரியரைப் பாராட்ட வேண்டும்.

## காய்கறிகளின் மருத்துவக் குணங்கள்

ஆசிரியர்: டாக்டர் திருமலை நடராசன்

பக்கம் 56: விலை ரூ.2.75

நாள்தோறும் பல வகைக் காய்களை நாம் உணவில் சேர்த்துக் கொள்ளுகிறோம். அவற்றின் பயனை உணராமலேயே நாம் உட்கொண்டு விடுகிறோம். சில நேரங்களில் சளிநோயால் தாக்கப் கப்பட்டிருப்பவர்கள் அதனைப் போக்குவதற்குரிய காய்கறிகளை உண்ணாமல் அதிகப்படுத்துவதற்குரிய காய்களை உண்பதுண்டு. இது அறியாமையின் காரணமாக ஏற்படுகின்ற - ஏற்படுத்திக்கொள்கின்ற அவதி.

இந்நூலைப் படித்தால், இது போன்ற அவதியிலிருந்து நம்மை காப்பாற்றிக் கொள்வதுடன், நாம் விரும்பி உண்ணும் காய்கறிகளில் எந்தெந்தச் சத்து எந்த அளவில் இடம் பெற்றிருக்கிறது என்ற செய்தியையும் தெரிந்து கொள்ளலாம். காய்கறிகளின் மருத்துவக் குணங்களைத் தெரிவிக்கும் இந்நூல் உடல் நலம் காப்பதற்கு வழி வகை சொல்லும் அற்புத நூலாகத் திகழ்கிறது. நூலாசிரியர் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருப்பது பாராட்டுக்குரியது.

மேற்கண்ட இரு நூல்களையும் வெளியிட்டோர்:

தமிழ்ச் செல்வி நிலையம்,
43, சித்திரைக் குளத்தெரு,
மயிலாப்பூர், சென்னை–600 004.

## புரட்சிக்கு வித்திடும் பாவேந்தர் பாட்டு

ஆசிரியர்: மயிலை நாதன்
வெளியீடு: பொறி பதிப்பகம்,
15, ரங்கநாதபுரம் தெரு,
சென்னை-600 034.

விலை: ரூ.4 பக்கம்: 96

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் கவிதைமணிக் குவியலில் உள்ள 'உலகப்பன்பாட்டு' என்னும் தலைப்பில் உள்ள கவிதையை எடுத்துக் கொண்டு அதற்கு அரியதோர் திறனாய்வை ஒரு நூலாக உருவாக்கியிருக்கிறார் ஆசிரியர்.

பாவேந்தரிடமும் ஏனைய கவிஞர்களிடமும் காணப்பட்ட ஒப்பியல்புகளை அடுக்கடுக்காக எடுத்துரைக்கிறார். நமது தமிழகத்துப் புலவர்களின் பரம்பரை —அதாவது பிறருக்கு இரங்குதல்-தீமை காணுமிடத்துக் கொதிப்புறுதல்-போன்ற இயல்புகள் பாவேந்தரிடம் மண்டிக் கிடந்தன என்பதை மிக விவரமாக—விளக்கமாக—திறனாய்வின் வாயிலாகத் தெரிவித்திருக்கிறார். ஒரே ஒரு கவிதையை வைத்துக் கொண்டு 83 பக்கங்களுக்கு மேல் திறனாய்வு செய்திருப்பது நூலாசிரியரிடம் உள்ள எழுத்துத் திறனையும், பாவேந்தரின் கவிதைகளில் அவருக்கிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டையும் பற்றுதலையும் எடுத்துரைக்கத் தவறவில்லை.

—புலவர் தமிழ்ப்பித்தன்

# அமோக விளைச்சலுக்கு





# உரத்தைத் திறம்படப் பயன்படுத்துங்கள்



உயர் விளைச்சலுக்கு உரம் மிகவும் அவசியம். உரத்தின் விலையும் சாகுபடி செலவும் அதிகமாக உள்ள இந்நேரத்தில் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவது மிகவும் முக்கியம்.

1. முதலில் உங்கள் நிலத்துக்கும் பயிருக்கும் ஏற்ற சரியான உரத்தைத் தேர்ந்தெடுங்கள். மண் பரிசோதனை செய்து, அதன் சிபாரிசுப்படி உரமிடுங்கள்.

2. ஒவ்வொரு பயிருக்கும் உரமிடும் முறைகள் வேறுபடும். அதை அறிந்து முறையாக உரமிட வேண்டும்.

3. பண்ணையில் கிடைக்கக்கூடிய தொழு உரம், பண்ணைக் கழிவுகள் போன்றவற்றையும் சிறந்த முறையில் சேகரம் செய்து பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டும்.

4. மேலுரமாக யூரியாவை ஒரே தடவையில் இடாமல், இரண்டு-மூன்று தடவைகளில் பிரித்து இட வேண்டும். யூரியாவை வேப்பம் புண்ணாக்குடன் கலந்து இட வேண்டும்.

மேலும் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளையும், விரிவான சாகுபடி முறைகளையும் அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள் :

மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001

VIJAY






சமச்சீர் உரமிட

# விஜய்

HTM-MFL-2526

# ஒரு தாய்க்கு ஒன்பது குழந்தைகள்



ஒரு தாய்க்கு ஒன்பது குழந்தைகள்!

ஆச்சரியப்படாதீர்கள்.

ஒரு தாய்க்கு மட்டுமல்ல ஒன்பது குழந்தைகள். ஒவ்வொரு தாய்க்கும் ஒன்பது குழந்தைகள்.

அந்தக் கிராமத்தில் அப்படியொரு நியதி.

அழகிய அந்தக் கிராமத்தில் அமைந்திருக்கும் வீடுகளும் அற்புதமானவை!

வீட்டின் வெளிப்புறத் தோற்றமே நம்மைக் கவர்கிறது. கோடைக் காலத்திலும் வீட்டின் உட்புறம் 'குளுகுளு' என்று அமைந்திருக்கும் வகையில் மேற்பகுதியைக் கட்டியிருக்கிறார்கள். வீட்டின் ஒவ்வொரு பகுதியைப் பார்க்கும் பொழுதும் அது போன்றே நாட்டில் உள்ள எல்லா வீடுகளும்அமைந்திருக்கவேண்டும் என்ற எண்ணம் நமது உள்ளத்தில் எழுகிறது. எவ்வளவு கவனத்துடன் அந்த இல்லங்களைக் கட்டியிருக்கிறார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு-ஒன்பது குழந்தைகளும் தங்கள் காலணிகளை வைப்பதற்கு நுழைந்தவுடன் ஓர் இடம் ஒதுக்கி வைத்திருப்பதிலிருந்து விளங்கியது.

ஒன்பது குழந்தைக்கும் உரிய அந்தத் தாய் எவ்வளவு ஒழுங்காக அந்த வீட்டைப் பேணி பாதுகாத்து வருகிறார்.

வியப்படைகிறீர்களா?

'அளவான குடும்பமே வளமான வாழ்வுக்கு வழி.'

''அடுத்த குழந்தை இப்பொழுது வேண்டாம்; இரண்டுக்குப் பிறகு எப்பொழுதும் வேண்டாம்' என்று சொல்லப்படும் நேரத்தில் இப்படி ஒன்பது குழந்தைகள் உள்ள குடும்பத்தைப் புகழ்ந்துரைப்பது விந்தையாகத் தெரிகிறதா?

மகிழ்ச்சியான அந்தக் குழந்தைகள் கிராமத்தைப் பார்த்தால் நீங்களும் ஒப்புக் கொள்வீர்கள்.

அந்தக் கிராமம் எங்கே இருக்கிறது என்கிறீர்களா?

எஸ். ஓ. எஸ். குழந்தைகள் கிராமம்தான் அது. அங்குள்ள சட்நாத் இல்லங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்பது குழந்தைகள் இருக்கின்றனர். அக்கிராமத்தை அறிந்து கொள்ளுமுன் எஸ்.ஓ.எஸ். என்றால் என்ன என்று தெரிந்து கொள்வோம்.

இரண்டாவது உலகப் பெரும் போருக்குப் பின் அனாதையாக்கப்பட்ட குழந்தைகளின் அவல நிலை கண்டு, அவர்களுக்கு வாழ்வில் புத்துயிரும், உணர்ச்சியும், நம்பிக்கையும் அளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட நிறுவனம் 'எஸ். ஓ. எஸ்' ஆகும். இந்த நிறுவனத்தை நிறுவியவர் ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஹெர்மன் மைனர் ஆவார்.

எஸ். ஓ. எஸ். என்பது கடலிலோ, வானவெளியிலோ உயிருக்கு மன்றாடும் சமயத்தில் அனுப்பப்படும் சைகை ஆகும். இக்குழந்தைகளின் வாழ்வில்அந்த மாதிரி கட்டம் வந்துவிட்டது என்றுணர்ந்து அவர்களுக்கு மீண்டும் குடும்ப வாழ்க்கை உண்டாக்கி, அதன் மூலம் சமுதாயத்திற்கும், குழந்தைகளுக்கும் இணைக்கப்படும் ஒரு பாலமாக இந்த நிறுவனம் செயல்படுகிறது.

முதன் முதலாக ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்த இம்ஸ்ட் என்ற ஊரில் நிறுவப்பட்டு, பின் சிறிது சிறிதாக வளர்ச்சி அடைந்து இப்பொழுது உலகமெங்கும் பரவி, 72 நாடுகளில் நூற்றுக்கும் மேலாக எஸ். ஓ.எஸ் கிராமங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. அவை அனாதைகளுக்கும், சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களுடைய அவல நிலையை மாற்றி ஒளி மயமான வாழ்விற்குதேவையான வீட்டு வசதி, பொருள், அன்பு, அரவணைப்பு மகிழ்ச்சிப் பகிர்வு இவைகளை அளித்து வருகின்றன.

இந்தியாவில் முதல் முதலாக அரியானா மாநிலத்தில் க்ரீன் ஃபீட்டு என்ற கிராமத்தில் இத்தகைய இல்லம் நிறுவப்பட்டு, பின் வளர்ந்து, இப்போது இந்தியாவில் நிலையாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையின் அடிப்படையில் நம் நாட்டில் 17 கிராமங்களில் இத்தகைய இல்லங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன.

**தமிழ்நாட்டில்**
**எஸ்.ஓ.எஸ். இல்லம்**

தமிழ்நாட்டில் முதல் முதலாக இந்திய எஸ். ஓ. எஸ். குழந்தைகள் கிராமம்-சட்நாத் இல்லங்கள் 1979-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் சென்னைக்கு அருகிலுள்ள தாம்பரத்தில் அமைக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

இந்திய எஸ். ஓ. எஸ். நிறுவனத்துடன் இந்தக் கிராமத்தைத் தமிழ்நாட்டில் அமைப்பதற்குப் பொறுப்பேற்ற அமைப்பு சட்நாத் அறக்கட்டளை ஆகும். இந்த அறக்கட்டளை மறைந்த தொழில் மேதை திரு கே. கோபாலகிருஷ்ணாவால் தோற்றுவிக்கப்பட்டதாகும்.

இக்கிராமம் மொத்தம் 15 வீடுகளுடன் 135 குழந்தைகளுக்கு வாழ்வு அளிக்கும். இக்கிராமத்தில் மருத்துவ வசதியும், ஒரு கோவிலும் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கிராமத்தின் குறிக்கோள் சமூகத்தினால் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகளுக்குச் சாதாரணமான குடும்பத்தில் வாழ்க்கை அளிப்பதாகும். இது சமுதாயத்திற்கும் குழந்தைகளுக்கும் இடையே இணைப்புப் பாலமாகச் செயல்படுகிறது.

எனவே, அனாதைக் குழந்தைகளை ஒதுக்கி விடாமல், மாறாக மகிழ்ச்சி, பகிர்வு, நேசித்தல் இணைந்து வாழ்தல் ஆகியவை தொடக்கம் முதல் அவர்கள் மனதில் பதிய வைக்கப்படுகின்றன.

**மாமூலன்**



ஒரு குடும்பத்தில் 9—க்கு மேற்படாத வெவ்வேறு வயதுமுள்ள ஆண் பெண் குழந்தைகள் அவர்களுடைய சொந்த வீட்டில் ஒரு 'தாய்' உடன் வாழ்கின்றனர். அத் 'தாய்' தமது வீட்டுப் பணிகளை ஏனைய தாய்களைப் போன்றே சாதாரண முறையில் ஆற்றி வருவதோடு, அவர் தனது குழந்தைகளின் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஏற்ற தேவைகளை அறிந்து செயலாற்றி வருகின்றார். வயது வந்த குழந்தைகள் மூத்த சகோதர, சகோதரிகளின் பங்கினை முறையே ஏற்றுக் கொண்டு தாயின் வேலைப்பளுவையும் பகிர்ந்து கொள்ளுகின்றனர்.

எஸ். ஓ. எஸ். கிராமம் முன்பு குறிப்பிட்டது போன்ற 15 இல்லங்களைக் கொண்டுள்ளது, ஒவ்வொரு கிராமமும் 'தந்தையின்' பொறுப்பினை ஏற்கும் இயக்குநரைப்பெற்றுள்ளது. அவர் ஒரு நல்ல நண்பனாகவும், வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் விளங்குகிறார். குழந்தைகள் உள்ளூர்ப்பள்ளிகளுக்குச் செல்வதுடன் வெளிநடவடிக்கைகளிலும் கலந்து கொள்கின்றனர். அவர்கள் வளர்ந்தபின் மற்ற குடும்பத்தினரைப் போன்று வேலைகளில் ஈடுபட்டு மணம் புரிந்துகொண்டு தனது வீட்டிற்கு வருவது போன்று இக்கிராமத்திற்குவந்து செல்கின்றனர்.

பிறந்தவுடன் புறக்கணிக்கப்படும் குழந்தைகள் நம் நாட்டில் எவ்வளவோ, இந்தக் குழந்தைகள் மருத்துவ மனைகளிலும் கோவில்களிலும், பொது இடங்களிலும் மற்றும் வேறு இடங்களிலும் புறக்கணிக்கப்பட்டு தாய் தந்தை யார் என்று தெரியாத அவல நிலையில் இருக்கிறார்கள். சில சமயம்-பிறந்து சில மணி அவகாசத்திற்குள் புறக்கணிக்கப்படும் துரதிர்ஷ்டமான குழந்தைகள் பல உள. இக்குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிக்க ஏற்படுத்தப்பட்ட சேய் வரவேற்பு மற்றும் மக ஏற்பு இல்லம் (பூந்தமல்லி நெடுஞ்சாலையில்) பெரியார் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலையில் இருக்கும் 'கர்ணபிரயாக்' ஆகும். இந்த இல்லத்திற்கு தமிழ்நாடு அரசு ஏற்பளித்துள்ளது.

இந்தக் 'கர்ணபிரயாக்' குழந்தைகள் இல்லம் இந்திய எஸ்.ஓ.எஸ். கிராமங்கள்-சட்நாத் இல்லங்களைச் சார்ந்தது. இங்குகண்டு எடுக்கப்பட்ட அனாதைக் குழந்தைகளை பேணி வளர்க்கவிரும்புபவர்கள் தத்து எடுத்துக்கொள்ளலாம். அம்மாதிரி தத்து எடுத்துக் கொள்வதற்கு முன் செயல்படுத்த வேண்டிய சட்ட ரீதியான முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மற்ற குழந்தைகள் தாம்பரத்திலுள்ள எஸ். ஓ. எஸ். கிராமத்தில் பராமரிக்கப்படுவார்கள்.

இந்த நன் முயற்சிக்கு எதிர் நோக்கி இருக்கும் பிரச்னை மிகப் பெரிது. அனாதையாகப் பிறந்து அனாதையாக அகற்றப்பட்ட குழந்தைகள் வாழ்வை ஒளி மயமாக்குவதற்கு ஏற்கப்பட்டுள்ள இந்த முயற்சியை அனைவரும் பாராட்ட வேண்டும்.

## தொடரட்டும் தொண்டு

சென்னைத் தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரியை அடுத்துள்ள புரபஸர் காலனி பக்கத்தில் அமைந்துள்ள எஸ். ஓ. எஸ். குழந்தைகள் கிராமத்தில் கட்டப்பட்டிருக்கும் சட்நாத் இல்லங்களை காணிக்கையாக்கும் விழா 24-1-82 அன்று நடைபெற்றது.

திரு எஸ். முத்துகிருஷ்ணன் விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். குழந்தைகள் கிராமத்தில் செய்துவரும் பணிகளை சட்நாத் இல்ல அறக்கட்டளையின் நிருவாக இயக்குநர் திருமதி உமா நாராயணன் தமது அறிக்கையில் விளக்கினார்.

எஸ். ஓ. எஸ். குழந்தைகள் கிராமங்களைத் தோற்றுவித்த ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஹெர்மன் மைனர், சட்நாத் இல்லங்களை நிறுவியவர்களின் தொண்டுள்ளத்தைப் பாராட்டினார்.

குழந்தைகள் கிராமத்திற்கான மருத்துவ நிலையத்திற்கு அடிக்கல் நாட்டி மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. கோமதி சீனிவாசன் அவர்கள் சட்நாத் இல்லங்கள் போன்றவற்றை, தொண்டு நிறுவனங்கள் கட்ட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

குழந்தைகள் கிராம அமைப்பை மத்திய அரசு சமூக நலத்துறை செயலாளர், திருமதி செரளா கிராவல் பாராட்டினார்.

மேதகு ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள்சட்நாத்இல்லங்கள் அமைத்தவர்களைப் பாராட்டி, இதுபோன்றுஒவ்வொருதொண்டு நிறுவனமும் அனாதையாக விளங்குவோருக்கு ஆதரவுகாட்ட வேண்டும் என்றார்.

ஆதரவற்றோர்—அனாதையானோருக்கு ஆதரவு காட்டி அன்பைப் பகிர்ந்து அளித்து மகிழ்ச்சியான வாழ்வுக்கு வித்திடும் திருத்தலங்களாக விளங்கும் இந்த இல்லங்களைப் பார்க்கும்பொழுதே நம்மனதில் ஒரு பரவசம் ஏற்படுகிறது. நமது நெஞ்சமும் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் நன்றியறிதலுடன் பாராட்டுகிறது.

# பயிர் பாதுகாப்பு அவசியமா?



மனித குலம் தோன்றியதற்கு முன்பே, தோன்றியவை தாவரங்கள் ஆகும். சூரிய ஒளி, மழை, இடி முதலியவற்றினால் அங்ககப் பொருட்களிலுள்ள கூறுகளில் ஏற்பட்ட மாறுதல்களினால் இவை ஏற்பட்டன. இவ்வாறு ஏற்பட்ட உயிரியல் பரிணாமத்திலே செடிகள் மட்டுமின்றி பல உயிரினங்களும் தோன்றின. இவற்றில் தனக்குத்தானே உணவைச் சேகரிக்கும் தன்மை கொண்டவையும் மற்ற உயிரினங்களையும் அங்ககப்பொருட்களையும் நம்பி வாழும் உயிரினங்களும் நுண்ணுயிர்களும் அடங்கும். நுண்ணுயிர்களில் நன்மை தரும் நுண்ணுயிர்களும் உண்டு. பேரழிவைத் தரும் நுண்ணுயிர்களும் உண்டு. அழிவை ஏற்படுத்தும் நுண்ணுயிர்கள் பயிர்களில்தோன்றியிருந்த இழப்பை ஏற்படுத்துகின்றன. மனிதன் அறிவியல் திறமையினால் வேளாண்மையில் முன்னேற்ற முறைகளைப் பயன்படுத்தி நல்ல மகசூலைப் பெற்று வந்தான். தன்னுடைய சுய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள விஞ்ஞான வேளாண்மையிலே அதிக விளைவைத்தரும் ரகங்களைப் பயிரிட்டு வந்தான். இவ்வாறு குறிப்பிட்ட பயிரின் ரகத்தை அடிக்கடி பயிரிடுவதால் நோய் உண்டாகும் அளவும் அதிகரித்து வந்துள்ளது. நோய்களினால் தோன்றிய இழப்பு பயிர்களின் உற்பத்தித்திறனை இழக்கச் செய்கிறது. தாவரங்கள் உண்டாகிய காலத்திலிருந்தே பயிர் நோய்களின் வளர்ச்சியும் வேளாண்மை அறிவியலில்வளர்ச்சியும் ஒரே இணைகோடாகவே இருந்து வந்துள்ளன.

மிகுதியான அளவு மக்கட்தொகை பெருகிவரும் இக்காலத்தில் பயிர்களின் எதிரிகளால் ஏற்படும் இழப்பு உழவர், அறிஞர் மற்றும் அரசாங்கங்களுக்குச் சவாலாக அமைந்துள்ளது. மக்கட்தொகை வளர்ச்சியும் சரிசமமாக இல்லாததாலும் குறைந்த அளவு சாகுபடி நிலப்பரப்பு உள்ளமையாலும் பெரும்பகுதியான நிலப்பகுதி சாகுபடிக்குக்கொண்டு வந்துவிட்டதாலும் பெரும்பாலான நாடுகளில் உணவுப் பஞ்சம்



ஏற்பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் குறைந்த அளவு சாகுபடி நிலத்தில் நிறைந்த அளவு மகசூலைப் பெறுவது என்பது இன்றியமையாததாகிறது. உற்பத்தி நுட்பங்களும் பாதுகாப்பு நுட்பங்களும் ஒன்றையொன்று சார்ந்து இருக்க வேண்டியுள்ளது. மேலும் உற்பத்தி நுட்பங்களை மட்டும் கருத்திற்கொள்ளாமல் பயிர்களைப் பாதுகாக்கும் நுட்பமுறைகளையும் தெரிந்து பயன்படுத்துதல் மிகவும் அவசியம்.

சில ஆண்டுகளாக, வளர்ந்து வரும் நாடுகளில் வேளாண்மைப் புரட்சிக்குப்பல வழி முறைகளைக் கையாண்டு வருகிறார்கள். இவற்றுள் நல்ல தரமான விதை, தகுந்த அளவு உரம் தேவையான அளவு பாசன நீர் முதலியவை முக்கிய பங்குவகித்தன. மிகுதியான அளவு உரமிடுதல் தகுந்த சமயத்தில் உரிய அளவு நீர்ப்பாய்ச்சுதல் போன்றவை பயிர்களின் வளர்ச்சிக்கு சாதகமாக அமைவதுடன் பயிர்களின் எதிரிகளுக்கும் சாதகமாக அமைகின்றன. அதிக அளவு மகசூலைத் தரும் ரகங்கள் அனைத்தும் நோய், பூச்சி இவற்றிற்கு எதிர்ப்புத் திறன்பெற்றிருக்க வேண்டுமென்பதில்லை. அப்படியே இருந்தாலும் ஒன்றிரண்டு பூச்சி அல்லது நோய்களுக்கு மட்டுமே எதிர்ப்புத்தன்மை பெற்றிருக்கின்றன. ஆனால் மத்த பூச்சி அல்லது நோய்களினால் மிக எளிதாகப் பாதிக்கப்படலாம்.

பயிர் நெருக்கம், ஒரு பயிர் சாகுபடி, அதிக அளவு உரமிடல் புதிய சாகுபடி முறைகள் முதலியன நோய்க்காரணிகள் பெருகிப் பரவுவதற்கு வழி வகுக்கின்றன. பயிர்களின் மகசூல் அதிகரிப்புக்கான வழி முறைகளை அதிகரிக்கும் பொழுதே பயிர்நோய்களால் ஏற்படும் இழப்பும் அதிகமாகிறது. பெருகிவரும் மக்கட்தொகைக்குத் தகுந்தாற்போல் உணவு உற்பத்தியைப் பெருக்குவது இன்றியமையாததாகிறது. எனவே இத்தருணத்தில் பயிர்களைப் பாதுகாத்து அதிக அளவு மகசூலைப் பெருக்குவது அவசியமான தொன்றாகும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு பயிரிடப்பட்ட ரகங்கள் மிகக் குறைந்த மகசூலையே கொடுத்து வந்தன. அதனால் அவற்றிற்கு நோய், பூச்சி முதலியவற்றினால் ஏற்படும் இழப்பு அதிகமென புலப்படவில்லை. ஏனென்றால் அவற்றிற்குப் போதிய அளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. மேலும் அவ்வப்பொழுது பயிர் பாதுகாப்பு அவசியமில்லை என்றும் அதனால் உண்டாகும் மகசூல் அதிகரிப்பு மற்றும் வருமானம் குறைவானது எனவும் கருதப்பட்டு வந்தது. ஆனால் தற்பொழுது சூழ்நிலை மாறுபட்டுள்ளது. பெரும்பாலான பயிர்களில் அதிக மகசூல் தரும் ரகங்களைப் பெற்றிருக்கிறோம். வருடத்திற்கு ஒரு நிலத்திலிருந்து இரண்டு அல்லது மூன்று பயிர்கள் வரை சாகுபடி செய்கிறோம். வணிக நோக்கத்தில் பார்க்கும் பொழுது தற்பொழுது பூச்சி, நோய்களினால் ஏற்படும்இழப்பு அதிகமாயுள்ளது தெரியவந்தது. எனவே பூச்சி நோய் முதலியவற்றால் ஏற்படும் இழப்பை குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் நோயினால் இந்தியாவில் மட்டும் 10 சதவீதம் உணவுப் பயிர் இழப்பு ஏற்பட்டதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. நோய்களினால் மட்டும் 1963ஆம் ஆண்டில் 500 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு பயிர்களின் நோய் மற்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தி மகசூலைப் பெருக்கி நலமாக வாழ்வு அமைக்க முயற்சிப்பதுஒவ்வொரு இந்திய வேளாண்குடி மக்களின் கடமையாகும்.

வெளியீடு: தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை

## பார்த்தோம்– —படித்தோம்

பாரதியின் நூற்றாண்டு விழா கொண்டாடி வரும் இந்நாளில் கோவை இளஞ்சேரன் எழுதிய 'தமிழ் உணர்வில் பாரதி' எனும் கட்டுரை, ஒவ்வொரு மனிதனுக்கும் தமிழ் மொழியுணர்ச்சியை ஊட்டக்கூடியதாய் அமைந்தது.

—**எஸ். முகம்மது அலி,**
நாகப்பட்டினம்.

'தமிழரசு தரும்' அரசாங்கக் குறிப்புகள், விழாச் செய்திகள், புகைப்படங்கள் ஆகியவை கண்ணின் ஒளியைவிட 'ஒளி வீசுவ'தாக உள்ளது. பாராட்டுக்கள்!

—**இளங்கோதாசன்,**
திருவையாறு.

மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாச் சிறப்பிதழ் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது.

—**இரா. சுராஜ்,**
சென்னை-600 015.

பசுமையான பின்னணியிலே அந்த ஊனமுற்ற பச்சிளந் தளிர்களின் முகத்திலேதான் எவ்வளவு தன்னம்பிக்கை தென்படுகிறது! முகப்பைப் பார்த்ததுமே என் விழிகளில் கண்ணீர் பூக்கள் மலர்ந்தன. தமிழரசின் மார்கழி இதழ் உண்மையிலேயே நெஞ்ச ஊனங்களை அகற்றிவிட்டது

—**கவிஞர் என். ஜே. கந்தமாறன்**
திருக்காட்டுப்பள்ளி

''மாணவர் பக்கம்'' அரிய பல கருத்துக்களை எளிய முறையில் அள்ளித்தருகிறது-மாணவர்களின் பொது அறிவை வளர்த்துக் கொள்ள வழி வகுக்கிறது. மிகவும் பயனுள்ள பக்கம் அது!

—**ச. புகழேந்தி,**
திருவையாறு.

'தமிழரசு' தன்னிறைவுத் திட்டச் சிறப்பிதழ், அரசின் ஆக்கப் பணிகளை விளக்குவதாக அமைந்திருந்தது.

—**இராம. திலகம்,**
பேரணாம்பட்டு

தமிழரசு' இதழ்களில் சிறு கதைகள், நிறைய துணுக்குகள் வெளிவர வேண்டும் என்பது என் ஆசை.

—**வீ. சந்திரன்**
சென்னை-30

அரசின் அறிவிப்புகள்-ஆக்கப் பணிகள்' பகுதி பயனுள்ளதாக இருக்கின்றன.

—**சுசிலா மணாளன்,**
சென்னை-40.

அரசு நடத்தும் விழா நிகழ்ச்சிகளை அழகிய முறையில் தொகுத்து வெளியிடுவது, நேரில் காண்பது போலவே இருக்கின்றது.

—**வி. செல்வராஜ்,**
கும்பகோணம்.



# தீவிர சாண எரிவாயுத் திட்டம்

**சா**ண எரிவாயுத்திட்டத்தைப் பெருமளவில் நிறைவேற்றுவதற்கென இந்திய அரசு ஒரு பெரும் திட்டம் தீட்டியுள்ளது. அதன்படி ஆறாம் ஐந்தாண்டுத்திட்டத்தில் 4 இலட்சம் சாண எரிவாயு அமைப்புகள் நிறுவப்பட வேண்டும். அதில் 1981-82-ஆம் ஆண்டில் மட்டும் 35,000 அமைக்கப்பட வேண்டுமென்று தீர்மானித்ததில் 3500 பிரிவுகள் தமிழ்நாடு அரசிற்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் உதவிகளைப் பெறவும், போதுமான எண்ணிக்கையில் கால்நடைகளை வைத்திருப்போரைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குச் சாண எரிவாயு பிரிவு அமைத்துக் கொடுத்தால் அதனை நன்கு பயன்படுத்திக் கொள்வார்களா என்பதையும் கவனித்து அத்தகையோரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று தமிழ் நாடு அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஏற்கனவே ஆணைகள் பிறப்பித்துள்ளது.

இரண்டு விதமான சாண எரிவாயு அமைப்புகள் உள்ளன. எரிவாயுவை அடைத்து வைத்துக் கொள்ளக் கூடிய எஃகு அடைப்பானைக் கொண்டது ஒரு வகையாகும். மற்றொன்று 1980ஆம் ஆண்டில் செய்த ஜனதா சாண எரிவாயு அமைப்பாகும். இது செங்கல், சுண்ணாம்புக் கலவையால் ஆன உருளை வடிவானதாகும்.

அளவிற் கேற்றாற் போல், விலை வித்தியாசப்படும். சுமார் 10 பேர்களைக் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 8 கன மீட்டர் அளவிலான சாண எரிவாயு அமைப்பின் விலை ஏறக்குறைய ரூ. 5,500 ஆகும். இதில் பழங்குடி மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் 50 சதவீதம் மைய அரசு உதவித் தொகை கிடைக்கும். சிறிய நடுத்தர உழவர்களுக்கு 33 சதவீதம் உதவித் தொகையும் ஏனையோருக்கு 25 சதவீதமும் கிடைக்கும்.

சாண எரிவாயுப் பிரிவுகளை அமைக்க கொத்தனார்களுக்குப் பயிற்சி அளிக்கும் பணியும் விரைவில் தொடங்கும். ஒவ்வொரு வட்டாரத்திலும் பயிற்சி பெறுவதற்கான கொத்தனார்களைத் தேர்ந்தெடுக்கும் வேலையும் கூடவே நடைபெறும். கோயம்புத்தூரிலுள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் இப்பயிற்சி அளிக்கப்படும்.

சாண எரிவாயு அமைத்துக் கொடுக்க ஊர்நல அலுவலர்கள் விண்ணப்பங்கள் பெறுவார்கள். அவர்களின் முயற்சியால் நிறுவப்படும் ஒவ்வொரு பிரிவிற்கும் ரூ. 30- என்ற கணக்கில் ஊக்கத் தொகை அளிக்கப்படும்.

இத்திட்டத்திற்காகும் செலவையும் இந்திய அரசு ஏற்றுக் கொள்கிறது.

சாண எரிவாயு பற்றி சிறப்பு அம்சங்களை விளக்கிக் கூறி அதனை அமைத்துக் கொள்வதற்குத் தேவையான உதவிகளை ஊர்நல அலுவலர்களும் வட்டார வளர்ச்சி அலுவலர்களும் செய்து தருவார்கள்.

இந்திய தலைமை அமைச்சர் அவர்களால் அண்மையில் அறிவிக்கப்பட்ட புதிய 20 அம்சத் திட்டத்தில் இது ஓர் அங்கம் வகிக்கிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002



எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்…அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

